
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஆகஸ்டு 2008
ரூ. 7.00



## அமெரிக்க சேவையில் அனைத்து கட்சிக் கூட்டணி!

படிப்பகம்

www.padippakam.com




# "ஓசூரை ஆக்கிரமிக்க வரும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை விரட்டியடிப்போம்!" – புரட்சிகர அமைப்புகளின் மறியல் போராட்டம்

**கி**ருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், தேன்கனிக் கோட்டை வட்டங்களைச் சேர்ந்த அச்செட்டிப்பள்ளி, ஒன்னல்வாடி, பைரமங்கலம், குந்துமாரனப் பள்ளி ஊராட்சிகளில் 3600 ஏக்கர் நிலங்களை உள்ளடக்கி அறிவிக்கப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு, நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான அரசாணை கடந்த ஜூன் 11-ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் தமிழக அரசுக்கும் ஜி.எம்.ஆர். நிறுவனத்துக்கும் பல்தொழில்நுட்பம் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, தற்போது நிலப்பறிப்புக்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நிலங்களைக் கையகப்படுத்த மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின்படி, 2930 ஏக்கர் வரை வறண்ட நிலங்கள் என்றும், 363 ஏக்கர் வரை புறம்போக்கு நிலங்கள் என்றும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இப்பகுதியில் ஏறத்தாழ 2500 ஏக்கர் பரப்பளவில் ஆழ்துளை கிணறுகள் மூலம் காய்கறிகள் பயிரிடப்பட்டு வருகின்றன. இவ்விளை நிலங்களை ஆக்கிரமித்து விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறித்து சி.பொ.மண்டலம் நிறுவக் கிளம்பியுள்ளது மு.க.அரசு. இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள், சி.பொ.மண்டலத்துக்கு எங்கள் விளைநிலங்களை வழங்கமாட்டோம் என்று எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடியேற்றினர்.

இதன் தொடர்ச்சியாக, இப்பகுதி விவசாயிகளின் அழைப்பின் பேரில் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் தலைமையேற்று ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இரயில் மறியல் போராட்டம் நடத்த முயன்று கைதாகினர். தா.பாண்டியனோ, "நாங்கள் சி.பொ.மண்டலத்துக்கு எதிரானவர்கள் அல்ல; ஆனால் விளைநிலங்களை ஆக்கிரமித்து விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறிக்கக் கூடாது" என்கிறார். சி.பொ.மண்டலம் என்பது பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பளிக்கும் தொழிற்பேட்டை அல்ல; இது, நாட்டையே அடிமையாக்க வரும் அன்னியப் பிரதேசம் என்று நிரூபிக்கப்பட்ட பிறகும், சி.பொ. மண்டலத்தை ஆதரித்து, அதேசமயம் விவசாயிகளின் எதிர்ப்பைச் சாதகமாக்கிக் கொண்டு ஆதாயமடையத் துடிக்கின்றனர் வலதுகள்.

கடந்த ஆண்டில் சி.பொ.மண்டலத்துக்கு எதிராக சவடால் அடித்து, இப்பகுதியில் மக்களிடம் கருத்துக் கேட்பு நாடகமும் கருத்தரங்கமும் நடத்தி "எல்லோரும் வீட்டிற்குச் சென்று நிம்மதியாகத் தூங்குங்கள்; சி.பொ.மண்டலம் வராது; நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று வீரவசனம் பேசிய பா.ம.க.வின் இராமதாசு, இப்போது அரசாணை வெளியாகிய பின்னர் எட்டிக்கூட பார்க்கவில்லை; "சவுண்டு" கொடுக்கவுமில்லை.

மறுபுறம், இத்தகைய ஓட்டுப் பொறுக்கிகளைப் புறக்கணித்துவிட்டு தங்களை அமைப்பாக்கிக் கொண்டு போராடிய மே.வங்கத்தின் நந்திகிராம மக்கள் சி.பொ.மண்டலத்தை விரட்டியடித்துள்ளனர். கோவா மாநில மக்களும் இதே வழியில் போராடி முதற்கட்ட வெற்றியைச் சாதித்துள்ளனர். ஒரிசா மாநில மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் முன்னேறி வருகின்றனர்.

இந்த உண்மைகளை விளக்கியும், ஏற்கெனவே இப்பகுதியில் சி.பொ.மண்டலத்துக்கு எதிராக விவசாயிகளைத் திரட்டி கருத்தரங்கம், ஆர்ப்பாட்டம், ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளதோடு, தொடர்ந்து பிரச்சாரத்தை நடத்தி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய அமைப்புகள் கடந்த 21.07.08 அன்று ஓசூர் பழைய பேருந்து நிலையம் முன்பு "நாட்டை மீண்டும் அடிமையாக்கவரும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை விரட்டியடிப்போம்!" என்ற முழக்கத்துடன் சாலை மறியல் போராட்டத்தை நடத்தின. தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்டங்களிலிருந்து விவசாயிகளும் விவசாயிகள் இயக்க முன்னோடிகளும் பெண்கள்-குழந்தைகளுடன் திரண்டு, விண்ணதிரும் முழக்கங்களுடன் நடத்திய இச்சாலை மறியல் போராட்டம், நந்திகிராம மக்களின் வழியில் ஓசூர் மக்களும் சி.பொ. மண்டலத்தை விரட்டியடிப்பார்கள் என்பதை முன்னறிவிப்பதாக அமைந்தது.


கைது செய்யப்பட்ட முன்னணியாளர்கள்.

— பு.ஜ.செய்தியாளர்கள்


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 23

**இதழ் 10**

ஆகஸ்டு 2008

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுசந்தா: US$ 15

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561


# அமெரிக்கச் சேவையில் அனைத்து கட்சிக் கூட்டணி

முதலாளிய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மிகப் பெரிய பலம் வாக்காளப் பெருமக்களின் ஞாபக மறதி. வரலாற்று அனுபவங்களைத் தொகுத்து நினைவில் வைத்துக் கொள்வதுதான் அதற்கு மிகப் பெரிய ஆபத்து. அதனால்தான் அப்படி மக்கள் நினைவில் வைத்துக் கொள்ளும் பெருங்கதையாடலுக்கு எதிராகப் "பின் நவீனத்துவம்" என்ற அரசியல் தத்துவத்தையே முதலாளிய ஏகாதிபத்திய அறிவுஜீவிகள் உருவாக்கியிருக்கிறார்கள். 1980-களின் இறுதியில் ஒருநாள் கூடியிருந்த நாடாளுமன்றமே திகைத்துப் போகும் வகையில் தமிழகத்தின் பெரம்பலூர் தொகுதி உறுப்பினர் தங்கராசு ஒரு காரியம் செய்தார். திடீரென்று ஒரு பெட்டியைத் திறந்து நான்கு கோடி மதிப்புடைய ரூபாய் நோட்டுக்களைக் கத்தை கத்தையாகக் கொட்டினார். எம்.ஜி.ஆர். சாவுக்குப் பிறகு பிளவுபட்டுப் போன அ.இ.அ.தி.மு.க.வின் ஜானகி அணியிலிருந்து ஜெயலலிதா அணிக்குத் தாவுவதற்காக முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு மூலமாக ஜெயலலிதா தனக்குக் கொடுத்த இலஞ்சமென்று புகைப்பட ஆதாரத்தையும் வெளியிட்டார்.

நாடாளுமன்றமும் அவைத்தலைவரும் அதிர்ச்சியும் வேதனையும் தெரிவித்தனர். இலஞ்சப் பணம் அரசுக் கருவூலத்தில் சேர்க்கப்பட்டது. விசாரணை நடத்தி, குற்றவாளி சட்டப்படி தண்டிக்கப்படுவார் என்று அவைக்கும் மக்களுக்கும் உறுதியளிக்கப்பட்டது. இதோ, சுமார் 20 ஆண்டுகளாகி விட்டன. தங்கராசு இறந்து போய் விட்டார். ஜெயலலிதா இரண்டுமுறை முதலமைச்சராகி, பல ஆயிரம் கோடி சொத்துடனும், "இசட் பிரிவு" பாதுகாப்புடனும் பவனி வருகிறார். திருநாவுக்கரசு, "நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்குவதற்கு எதிரான யோக்கியர்"களின் கட்சியாக நடிக்கும் பாரதீய ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவராகவும் அதன் மத்திய அமைச்சர்களில் ஒருவராகவும் ஆகிவிட்டார். ஆனால், இந்த இலஞ்ச-ஊழல் வழக்கு நாடாளுமன்ற சாக்கடையில் மூழ்கிப் போய்விட்டது. நாடும், வாக்காளப் பெருமக்களும் மறந்து போய் விட்டார்கள்.


இப்போது, "தேசிய நலன்களுக்காகவும், எரிசக்தி உத்திரவாதத்துக்காகவும்" என்று சொல்லி இந்தியா-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் போடும் மன்மோகன் - சோனியா கும்பலைப் போலவே, உலக வங்கி-ஐ.எம்.எஃப். மற்றும் உலக வர்த்தகக் கழகம் ஆகியவற்றோடு ஒப்பந்தங்கள் போட்டு நாட்டை மறுகாலனிய அடிமையாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நரசிம்மராவ் - சோனியா கும்பல் அரசு, 15 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது ஜூலை 1993-இல் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொண்டது. நாடாளுமன்றத்தில் 14 வாக்குகள் குறைவாக இருந்த நரசிம்மராவ் அரசு, எதிர்க் கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கி வெற்றி பெற்றது. சிபுசோரன் தலைமையிலான ஜார்க்கண்ட் விடுதலை முன்னணியின் நான்கு உறுப்பினர்கள் கோடிக்கணக்கில் இலஞ்சம் வாங்கிக் கொண்டு, அப்போது நரசிம்மராவ் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். இந்த நான்கு ஜார்க்கண்ட் எம்.பி.க்களின் வங்கிக் கணக்கில் திடீரென்று கோடிக்கணக்கில் பணம் போடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் மீதும் நரசிம்மராவ் கும்பல் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி பொதுநல வழக்குத் தொடரப்பட்டது. ஆனால், நாடாளுமன்றத்தில் பேசுவதற்கோ, வாக்களிப்பதற்கோ அதன் உறுப்பினர்கள் மீது எந்த நீதிமன்றத்திலும் விசாரிக்கவோ, தண்டிக்கவோ முடியாது; அவர்கள் அரசியல் சட்டவிதிகளின்படி பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், இலஞ்சம் பெறும் எம்.பி.க்கள் குற்றவாளிகள் அல்ல என்றும், ஆனால் இலஞ்சம் தருபவர்களை வேண்டுமானால் தண்டிக்கலாம் என்றும் உச்சநீதி மன்றம் தீர்ப்புக் கூறியது. அப்போது நான்கு எம்.பி.க்கள் இலஞ்சம் வாங்கிய ஆதாரங்களை வைத்து மிரட்டிப் பணம் பறிக்க முயன்ற தன் அந்தரங்கச் செயலரைக் கடத்திக் கொன்ற வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று, மன்மோகன் அரசில் மத்திய நிலக்கரி அமைச்சராக இருந்து நீக்கப்பட்டவர்தான் சிபுசோரன். இப்படிப்பட்ட அரசியல்-கிரிமினல் குற்றங்களில் கைதேர்ந்த சிபுசோரனை மீண்டும் மத்திய அமைச்சராக்குவது என்ற பேரத்தின் பேரில் இப்போது ஆதரவைப் பெற்றது மன்மோகன் சிங் அரசு.

2005-ஆம் ஆண்டு, "தெகல்கா" என்ற இணைய தள பத்திரிக்கை நடத்திய புலனாய்வு நிழல் நடவடிக்கையில் இலஞ்சம் வாங்கிக் கொண்டு நாடாளுமன்றத்தில் எம்.பி.க்கள் கேள்விகள் எழுப்புவது வாடிக்கைதான் என்பது 11 பேர் கையும் களவுமாகப் பிடிபட்டபோது அம்பலமானது. இந்த விவகாரத்தை விசாரித்து, நிழல் நடவடிக்கைப் புலனாய்வும், அதற்கு அடிப்படையான ஒலி-ஒளி நாடாவும் உண்மைதான் என்பதை ஏற்று, கேள்வி கேட்பதற்கு இலஞ்சம் வாங்கும் நிழல் நடவடிக்கை

படிப்பகம்

www.padippakam.com

யில் சிக்கிய 11 எம்.பி.க்களை நாடாளுமன்றமே பதவிநீக்கம் செய்தது. இந்த குற்றச்சாட்டில் சிக்கிப் பதவி இழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பாரதிய ஜனதா கட்சி எம்.பி.க்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய உரிமைகள் - சலுகைகள், தொகுதி வளர்ச்சிக்கான நிதி போன்ற பலவற்றையும் முறைகேடுகள் செய்து பணம் பார்ப்பதும் வாடிக்கைதான்; பயணச்சீட்டுகளை விற்பது, குடியிருப்புகளை வாடகைக்கு விடுவது போன்ற அற்பச் செய்கைகள் முதல் எம்.பி.க்கள் தமது கடவுச்சீட்டு, அடையாள அட்டைகளைக் காட்டி வெளிநாடுகளுக்குப் பெண்களைக் கடத்துவது வரை பல குற்றச் செயல்கள் புரிவது வாடிக்கைதான் என்று பலமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. இவை தவிரக் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆள் கடத்தல் போன்ற கிரிமினல் குற்றங்களில் ஈடுபடுபவர்கள், எம்.பி.க்களாகவும் அமைச்சர்களாவதும் கூட உண்டு. நாடாளுமன்றத்திலேயே கூச்சல், குழப்பம், செருப்பு வீச்சு, அடிதடி போன்ற ரௌடித்தனங்கள் செய்வதும், ஆபாசமாக ஏசுவதும், சைகை காட்டுவதும் பலமுறை நடந்திருக்கிறது. லல்லு, முலயம், மாயாவதி போன்ற சீரழிவு அரசியல்வாதிகளின் நுழைவால்தான் இந்த நிலை ஏற்பட்டு விட்டது; நேரு, ராஜாஜி, காமராஜர் போன்ற தலைவர்கள் காலத்தில் இப்படி இல்லை என்று பொய்யான வரலாறு பேசுகின்றனர், 'தேசிய' அறிவுஜீவிகள். ஆனால் 1947-62 ஆகிய 15 ஆண்டுகளில் மொத்தம் 542 சட்டப்பேரவை உறுப்பினர்கள் கட்சி தாவியுள்ளனர். 1967-68-இல் மட்டும் உச்சகட்டமாக ''ஆயாராம் காயாராம்'' அரசியல் தேசம் தழுவியதாக இருந்தது. 13-வது நாடாளுமன்றத்தில் 40 எம்.பி.க்களும், 14-வது நாடாளுமன்றத்தில் 100 எம்.பி.க்களும் ஏழு மத்திய அமைச்சர்களும் கிரிமினல் குற்றப்பட்டியலில் இருந்ததாக அவர்கள் தமது வேட்பு மனுவிலேயே ஒப்புக் கொண்டுள்ளார்கள்.




இதுதான் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் யோக்கியதை என்றபோதும் கடந்த ஜூலை 22, 2008 அன்று மன்மோகன் அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்புக்கு சில மணிகள் முன்னதாக அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி கொடுக்கப்பட்ட இலஞ்சத்தின் முன்பணம் என்று பா.ஜ.க. எம்.பி.க்கள் மூன்றுபேர் ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை கத்தை கத்தையாக எடுத்து அசைத்துக் காட்டியதும், நாட்டின் ஜனநாயகத் தூண்கள் எல்லாம் பதறிப் போய்விட்டன. நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மாண்புக்கும், புனிதத்துக்கும் முதன்முறையாக இழுக்கு நேர்ந்துவிட்டது போலவும், இவ்வளவு நாளும் கட்டிக் காக்கப்பட்டு வந்த அதன் அரசியல் தரம் தாழ்ந்து போய் விட்டதாகவும், சரி செய்ய முடியாத இழுக்கு நேர்ந்து விட்டதாகவும் தேசிய அறிவுஜீவிகள் ஒப்பாரி வைக்கிறார்கள். பதவிக்காகவும் இலஞ்சப் பணத்துக்காகவும் அணிமாறி வாக்களித்து நாடாளுமன்றத்தை தரம் தாழ்த்திவிட்டார்கள் என்று புலம்புகிறார்கள்.

நாட்டின் நாடாளுமன்றத்துக்கு மட்டுமல்ல, உச்சநீதி மன்றத்துக்கும் கூட மாண்பும் புனிதமும் இவர்களால் செயற்கையாக இட்டுக் கட்டப்பட்டதுதான்; அவற்றுக்குத் தரத் தாழ்வும் இழுக்கும் எப்போதோ நேர்ந்து விட்டது என்பதுதான் வரலாற்று உண்மை. ஆனால், ஒவ்வொருமுறை இப்படி சீரழிவும் இழுக்கும் நிகழும் போதெல்லாம் அதிர்ச்சியுற்றுப் புதிதாக இவையெல்லாம் நிகழ்வதைப் போல நாடகமாடுகிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் அணுசக்தி ஒப்பந்தம் குறித்த அறிவில்லாதவர்கள், அதை அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள்; அந்த ஒப்பந்தம் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதங்களே நடக்கவில்லை; அரசியல் கட்சிகள் ஒன்றை ஒன்று எதிர்த்துச் சாடிக் கொண்டும், கூச்சல் போட்டுக் கொண்டுமிருந்தனர் என்று செய்தி ஊடக மேதாவிகள் அம்பலப்படுத்துகிறார்கள்.

ஜூலை 21,22 தேதிகளில் அணு சக்தி ஒப்பந்தம் மீதான வாக்குவாதங்களும், வாக்கெடுப்பும் என்பது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலாக எடுத்துக் கொள்ளப்படவே இல்லை. அப்படி நடக்கவும் இல்லை. நடந்திருக்கவும் முடியாது. நடந்தது மன்மோகன் சிங் அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பும் வாதங்களும்தான். இரண்டு உண்மைகள் இதற்குக் காரணங்களாக உள்ளன. முதலாக அணுசக்தி ஒப்பந்தம் மட்டுமல்ல, அந்நிய நாடுகளுடனான வேறு எந்தவொரு ஒப்பந்தத்தையும் விவாதிக்கவும், வாக்கெடுத்து நாடாளுமன்ற ஒப்புதல் தந்த பிறகுதான் நிறைவேற வேண்டும் என்று கூறுவதற்கும் இந்திய நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது.

அமெரிக்காவுடனான இராணுவ மற்றும் அணுசக்தி ஒப்பந்தமாகட்டும், உலக வங்கி, ஐ.எம்.எஃப் மற்றும் உலக வர்த்தகக் கழகம் ஆகியவற்றுடனான ஒப்பந்தங்களும் இப்படித்தான் இந்திய நாடாளுமன்றத்துக்கு மேலாக, அதன் வாக்கெடுப்புக்கு விவாதத்துக்கு வராமலேயே போடப்பட்டன. கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் இது குறித்து விவாதிப்பதற்கு சில உறுப்பினர்கள் முயன்றபோது பழம் பெரும் போலி மார்க்சிஸ்டும் சபாநாயகருமான சோமநாத் சட்டர்ஜி இதைப் பகிரங்கமாகவே கூறி அனுமதி மறுத்துவிட்டார்.

இரண்டாவதாக, ஒருவேளை அணுசக்தி ஒப்பந்தம் மீதான வாக்குவாதமும் வாக்கெடுப்பும் நடந்திருந்தால், அதற்கு போலி கம்யூனிஸ்டுகள் உட்பட அனைத்து ஓட்டுக் கட்சிகளும் அடிப்படையில் எதிரானவர்கள் அல்ல என்ற குட்டு வெளிப்பட்டு விடும். கடந்த ஆண்டே ஒப்பந்த அமலாக்கத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கோரியபோது, மன்மோகன் சிங் - ஜார்ஜ் புஷ் போட்டுக் கொண்டுள்ள அணுசக்தி ஒப்பந்தத்தை அமெரிக்காவின் 'ஹைட்' சட்டம் பாதிக்குமோ என்ற தமது ஐயப்பாட்டை நீக்கும்படிதான் இடதுசாரிகள் கோரினர். மற்றப்படி எந்தவொரு ஓட்டுக் கட்சியும் அணுசக்தி ஒப்பந்தத்தை அடிப்படையில் எதிர்ப்பதாகக் கூறவில்லை.

அந்நிய நாடுகளுடனான துரோகிகளின் ஒப்பந்தத்தை எதிர்க்கும் அதிகாரமே இல்லாத நாடாளுமன்றம், நாட்டுக்குத் துரோகம் செய்வதற்கு எப்போதும் தயாராக உள்ள ஓட்டுக்கட்சிகள் — இவை பற்றிய உண்மையை மக்கள் அறிந்துவிடக்கூடாது என்பதற்காக நடந்ததுதான் மன்மோகன் சிங் அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு என்ற நாடாளுமன்றக் கூத்து! •

www.padippakam.com

# கழிசடை காங்கிரசு வழியில் சி.பி.எம். கட்சி

பட்டுப் போன நச்சு மரமானாலும், அதிகாரத்திலுள்ள காங்கிரசு கட்சியில் கோஷ்டிச் சண்டைகளுக்கு அளவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தைத் திசைதிருப்பவும், பிழைப்புவாதத்தில் மூழ்கடிக்கவும் சிறுபான்மையினர் பிரிவு, தாழ்த்தப்பட்டோர் பிரிவு என்று சாதி-மத அடிப்படையில் கட்சிக்குள்ளேயே தனி அணிகளை உருவாக்கி ஓட்டுப் பொறுக்குகிறது, அக்கட்சி.

மதவாத சக்திகளை எதிர்ப்பது என்ற பெயரில் காங்கிரசுக்கு வால்பிடித்துச் செல்லும் சி.பி.எம். கட்சி, காங்கிரசின் எல்லா கழிசடைத்தனங்களையும் கொண்ட கட்சியாக நாலு கால் பாய்ச்சலில் முன்னேறி வருகிறது. காங்கிரசைப் போலவே சி.பி.எம். கட்சியில் கோஷ்டி சண்டைகள் களைகட்டத் தொடங்கிவிட்டன. வர்க்க அரசியல் அடிப்படையில் மக்களைத் திரட்டிப் போராடும் கம்யூனிச நடைமுறையைக் கைகழுவிவிட்டு, காங்கிரசு கட்சியைப் போலவே ஓட்டுக்காக சிறுபான்மை பிரிவையும் அக்கட்சி இப்போது கட்டத் தொடங்கிவிட்டது.

வேலூர் கோட்டையிலுள்ள பள்ளிவாசலில் தொழுகை நடத்த அனுமதி கோரி தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினர் ஏற்கெனவே போராட்டம் நடத்தியுள்ளனர். சிறுபான்மை மக்களின் வழிபாட்டு உரிமைக்கான இந்நியாயமான போராட்டத்தை ஆதரித்து, அனைத்துத் தரப்பு மக்களையும் அணிதிரட்டிப் போராட முன்வராத சி.பி.எம். கட்சி, மத அடிப்படையில் சிறுபான்மைப் பிரிவு என்ற பெயரில் சுவரொட்டி வெளியிட்டுள்ளது. முஸ்லிம்களின் வழிபாட்டு உரிமையை மறுக்கும் அரசையும் இந்துவெறியர்களையும் பகைத்துக் கொள்ளக் கூடாது; அதேசமயம் முஸ்லிம்களுக்கு ஆதரவாக நிற்பதாகவும் காட்டிக் கொள்ளவேண்டும் என்ற சி.பி.எம். கட்சியின் பித்தலாட்ட நடைமுறையின் வெளிப்பாடுதான் இச்சுவரொட்டி. நாளை தாழ்த்தப்பட்டோர் பிரிவு, மலையாளிகள் பிரிவு, ஜைனர்கள் பிரிவு என சாதி-மத-இன அடிப்படையில் சி.பி.எம். கட்சி சுவரொட்டி வெளியிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சி.பி.எம். கட்சியை இன்னமும் கம்யூனிஸ்ட் கட்சி என்று நாட்டு மக்கள் நம்பி ஏமாறவும் அடிப்படை இல்லை.




- பு.ஜ.தொ.மு., சென்னை.

# "பெட்ரோல் - டீசல் விலையேற்றம்: கொள்ளையடிப்பவர்கள் யார்?"

## - புரட்சிகர அமைப்புகளின் தொடர் பிரச்சார இயக்கம்

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தோடு, இதுவரை கண்டிராத வகையில் பெட்ரோல்-டீசலின் விலைகளும் கடுமையாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. எரி எண்ணெய் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் வர்த்தகத்தில் தலைவிரித்தாடும் ஆன்லைன் சூதாட்டமே இந்த கிடுகிடு விலையேற்றத்துக்குக் காரணம். பகற்கொள்ளையடிக்கும் பன்னாட்டு நிதி நிறுவனங்களை விரட்டியடிக்கவும், விலையேற்றத்துக்குக் காரணமான தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்தை வீழ்த்தவும் அறைகூவி ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் வீச்சான பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன.

தஞ்சையில், கரந்தை சோழன் போக்குவரத்துக் கழக பணிமனை அருகே 12.7.08 அன்று மாலை ம.க.இ.க., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து எழுச்சிமிகு தெருமுனைக் கூட்டத்தை நடத்தின. ஜூன் 22,24,28 ஆகிய தேதிகளில் மதுரை மாவட்டம் ஆரியப்பட்டி, உச்சப்பட்டி, உசிலம்பட்டி, செல்லம்பட்டி, கருமாத்தூர், செக்கானூரணி முதலான பகுதிகளில் வி.வி.மு. சார்பில் கிராமங்கள்தோறும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 10.7.08 அன்று திருமங்கலத்தில் "பெட்ரோல் - டீசல் விலை உயர்வு: கொள்ளையடிப்பவர்கள் யார்?" என்ற தலைப்பில் பொதுக்கூட்டமும் ம.க.இ.க. மையக்கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.



இருட்டடிப்பு செய்யப்பட்ட உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டி மக்களைப் போராட அறைகூவிய இப்பொதுக் கூட்டத்துக்கு வர இயலாதவர்கள், பதிவு செய்யப்பட்ட பொதுக்கூட்ட உரையின் குறுந்தகடுகளை ஆர்வமுடன் வாங்கிச் செல்லுமளவுக்கு, இப்பொதுக்கூட்டமும் கலைநிகழ்ச்சியும் இப்பகுதி வாழ் மக்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

— பு.ஜ. செய்தியாளர்கள்

www.padippakam.com

# அம்பலமானது நாடாளுமன்ற போலி ஜனநாயகம் நாறிப் போனது சி.பி.எம்.இன் கோஷ்டி சண்டை

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக, காங்கிரசு கூட்டணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை 'இடதுசாரி' கூட்டணிக் கட்சிகள் விலக்கிக் கொண்டதில் யார் யாருக்கோ நெருக்கடிகள் இருந்தாலும், உண்மையான நெருக்கடி சி.பி.எம். கட்சிக்குள்தான் தற்போது மையம் கொண்டுள்ளது. அக்கட்சியின் சந்தர்ப்பவாதம் மட்டுமல்ல, நாடாளுமன்ற அவைத் தலைவரான சோமநாத் சட்டர்ஜியை கட்சியிலிருந்து நீக்கிய விவகாரத்தின் மூலம், அக்கட்சியில் நிலவும் கோஷ்டி சண்டையும் இப்போது சந்தி சிரிக்கத் தொடங்கியுள்ளது.


மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை 'இடதுசாரி' கூட்டணிக் கட்சிகள் கடந்த ஜூலை 8-ஆம் தேதியன்று திரும்பப் பெற்றன. அதையொட்டி அரசுத் தலைவரிடம் கொடுத்த பட்டியலில் சி.பி.எம். கட்சி எம்.பி.க்களின் வரிசையில் நாடாளுமன்ற அவைத் தலைவரான சோமநாத் சட்டர்ஜியின் பெயரும் சேர்க்கப்பட்டிருந்தது. இதையறிந்த சோமநாத் பொங்கியெழுந்து விட்டார். ''அவைத் தலைவரான நான் எல்லா கட்சிகளுக்கும் பொதுவானவன்; எனது பெயரை அந்தப் பட்டியலில் சேர்த்தது தவறு'' என்று சீறினார். மற்றவர்களால் ''மாண்புமிகு சபாநாயகர்'' என்று அழைக்கப்படும் தன் பெயரை ''தோழர்'' என்று பட்டியலில் சேர்த்து கட்சி தன்னை இழிவுபடுத்தியதைக் கண்டு சோமநாத்துக்கு மகாகோபமாம்!

சி.பி.எம். கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ளதால், கட்சி முடிவுப்படி சோமநாத் சட்டர்ஜி பதவி விலக வேண்டும் என்பது கட்சியின் பொதுச் செயலரான பிரகாஷ் கரத்தின் நிலை. ஆனால், கோஷ்டித் தகராறு காரணமாக, இத்தகவலை சோமநாத்திடம் அதிகாரபூர்வமாகத் தெரிவிக்க கரத்துக்கு சங்கடம். எனவே, என்ன செய்வது என்பதை சோமநாத் சட்டர்ஜியே முடிவு செய்வார் என்று அறிவித்து விட்டார்கள். நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன் சோமநாத் சட்டர்ஜி பதவி விலகி விட வேண்டும் என்பது கரத்தின் விருப்பம். ஆனால், சட்டர்ஜியோ, பாரதிய ஜனதாவுடன் சேர்ந்து கொண்டு அரசைக் கவிழ்ப்பதில் தனக்கு உடன்பாடு இல்லை என்றார். சபாநாயகர் பதவியைத் தூக்கியெறிவதைப் பற்றி வாய்திறக்க மறுத்தார்.


இதற்கிடையே, அரசியல் தரகு வேலை செய்வதில் நிபுணரான சி.பி.எம். கட்சியின் சீதாராம் யெச்சூரி, ''பட்டியலில் சோமநாத்தின் பெயரைச் சேர்த்தது தற்செயலாக நடந்துவிட்ட தவறு; சி.பி.எம். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பட்டியலை மக்களவை இணைய தளத்திலிருந்து அப்படியே பிரிண்ட் எடுத்துக் கொடுத்து விட்டோம்'' என்று சோமநாத்துக்கு பக்கமேளம் வாசிக்கத் தொடங்கினார். பின்னர், ''சோமநாத்தின் அனுமதியில்லாமல் அவரது பெயரை சி.பி.எம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பட்டியலில் சேர்த்தது தவறுதான் என்றும், அப்படி பட்டியலில் சேர்த்தாலும், அவர் சபாநாயகர் என்பதை அடிக்குறிப்பாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்'' என்றும் கட்சியின் முடிவை விமர்சித்து பத்திரிகைகளுக்கு பேட்டியளித்தார். பத்திரிகைகளோ, கரத் கோஷ்டியுடன் யெச்சூரி கோஷ்டி கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறது என்று அம்பலப்படுத்தின. ''அப்படியெல்லாம் தகராறு ஒன்றுமில்லை'' என்று அறிக்கை வெளியிட்டார் ஒரு 'இடதுசாரி' தலைவர். அவர் சி.பி.எம். கட்சியின் தலைவர்களுள் ஒருவரல்ல. வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான ராஜாதான் இப்படி அறிக்கை வெளியிட்டார். இப்படி சி.பி.எம். கட்சியின் உள்குத்துகளைப் பஞ்சாயத்து பண்ணி, கோஷ்டிப் பூசலைப் பூசி மெழுகினார் ராஜா.

இந்தச் சமாளிப்புகளையெல்லாம் சோமநாத் சட்டை செய்வதாக இல்லை. அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் ஏகமனதாக சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட தன்னை ஒரு சாதாரண கட்சி உறுப்பினர் போல எப்படி நடத்தலாம் என்பதுதான் அவரது கோபம். பாராளுமன்ற பன்றித் தொழுவத்தில், அதன் மரபையும் மாண்பையும் புனிதத்தையும் கட்டிக் காக்கும் வகையில் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு 'ஜனநாயக' அறவழியின் அடிப்படையில் செயலாற்ற தன்னை அனுமதிக்க வேண்டும் என்ற அவரது கோரிக்கையை சி.பி.எம். கட்சி ஏற்றுக் கொண்ட பின்னரே, அவர் சபாநாயகராகப் பதவியேற்றாராம். விலகல் எம்.பி.க்களின் பெயர்ப் பட்டியலில் தன் பெயரையும் சேர்த்ததன் மூலம் சி.பி.எம். கட்சித் தலைமை நாணயம் தவறிவிட்டதாம். அதனால்தான் அவருக்குக் கோபமாம்.

சோமநாத் இப்படி முறுக்கிக் கொள்வதற்கான காரணத்தை அவரது வர்க்க மற்றும் அரசியல் பின்னணியிலிருந்து புரிந்து கொள்ள வேண்டும். சோமநாத்தின் தந்தை இந்து மகாசபையின் தலைவராக இருந்தவர். அவரது குடும்பம் வைதீக பார்ப்பன நிலப்பிரபு குடும்பம். பிரிட்டனின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்று கொல்கத்தா உயர்நீதி மன்றத்தில் வழக்குரைஞராகப் பணியாற்றிய சோமநாத், 1968-இல் சி.பி.எம். கட்சியில் சேர்ந்து 1971-இல் நடந்த தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினரானார். 'ஜனநாயக' மரபுகளை பெரிதும் மதிக்கும் சோமநாத், தனது குடும்பத்திலும் அதைப் பின்பற்றி, தனது பேரனுக்கு பார்ப்பன வைதீக முறைப்படி பூணூல் கல்யாணம் நடத்தி வைத்து 'ஜனநாயக'த்தைக் கட்டிக் காத்தவர். மே.வங்கப் போலி கம்யூனிசப் பிதாமகரான ஜோதிபாசுவின் விசுவாச சீடரான இவர், 1996-இல் பிரதமர் நாற்காலியில் ஜோதிபாசுவை அமர வைக்க நடந்த முயற்சியை சி.பி.எம். கட்சி ஏற்காத போது, மே.வங்க கோஷ்டியின் பலத்தைக் கொண்டு கட்சியை உடைக்கவும் முற்பட்டார். பின்னர், ஜோதிபாசு அவரைக் கட்டுப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.



**அழுகி நாறும் நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தின் 'புனிதம்' காக்க சோமநாத் புது அவதாரம் எடுத்தார். ஆனால், கோஷ்டிச் சண்டையால் அழுகி நாறும் சி.பி.எம். கட்சியை யார் காப்பாற்றுவது?**



ஜோதிபாசு, மே.வங்க முதல்வராக இருந்தபோது, அம்மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகத் தலைவராக இருந்த சோமநாத், தொழில் முதலீட்டை ஈர்ப்பதற்காகப் பல ஏகாதிபத்திய நாடுகளுக்குப் பறந்து சென்று ஒப்பந்தங்கள் போட்டார். பன்னாட்டு முதலாளிகளுக்கு மே.வங்கத்தை அடிமைப்படுத்தி விட்டார் என்று சி.பி.எம். கட்சியிலேயே அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில், காங்கிரசுக்கு ஆதரவாகச் செயல்படுகிறார் என்று குற்றம் சாட்டி அவருக்கும் மே.வங்கத்தைச் சேர்ந்த சைபுதீன் சவுத்ரிக்கும் கட்சித் தலைமை நோட்டீசு அனுப்பியது. பின்னர் சைபுதீன் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். ஜோதிபாசுவின் தலையீட்டால் சோமநாத் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இப்பேர்பட்ட சோமநாத், சபாநாயகர் பதவியிலிருந்து விலக வேண்டுமென கட்சித் தலைமை நிர்பந்திக்கத் தொடங்கியதும், அவர் தனது குருநாதர் ஜோதிபாசுவைச் சந்தித்தார். பாசுவும் தனது சீடப்பிள்ளை சோமநாத்தின் நிலைப்பாடு சரிதான் என்றார். அதைத் தொடர்ந்து, ''நான் முதலில் பிராமணன்; அதன் பிறகுதான் கம்யூனிஸ்டு'' என்று பிரகடனப்படுத்திக் கொண்ட மே.வங்க போக்குவரத்துத் துறை அமைச்சரான சுபாஷ் சக்ரவர்த்தி, ''பா.ஜ.க.வுடன் இணைந்து காங்கிரசை எதிர்ப்பதில் தனக்கு உடன்பாடில்லை'' என்று மே.வங்க கோஷ்டியின் நிலையை எதிரொலித்தார். பிரகாஷ் கரத் அவரிடம் விளக்கம் கோரும் நோட்டீசு அனுப்பிய பின்னரும் தனது கருத்தைத் திரும்பப் பெறப் போவதில்லை என்று வெளிப்படையாக அறிவித்தார். பின்னர் என்ன நடந்தது என்று தெரியவில்லை. தனது கருத்தை பத்திரிகைகளுக்குத் தெரிவித்தது தவறுதான் என்று சுபாஷ் சக்ரவர்த்தி 'சுயவிமர்சனம்' செய்து கொண்டாராம்.

சி.பி.எம்.இன் மே.வங்க கோஷ்டி, கட்சித் தலைமையுடன் முறுக்கிக் கொண்டு தனி ஆவர்த்தனம் செய்து, கட்சிக்குள் நடக்கும் குத்து-வெட்டுகளை வெளிச்சம் போட்டுக் காட்டியது. அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்த்து, பிற பகுதிகளில் நடக்கும் கூட்டங்களில் பங்கேற்ற பிரகாஷ் கரத், மே.வங்கத்துக்கு மட்டும் செல்லாததன் மூலம், இந்தக் கோஷ்டிச் சண்டை நாடெங்கும் அம்பலப்பட்டுப் போனது.

இந்தக் கூத்துகள் ஒருபுறம் அரங்கேறிக் கொண்டிருக்க, மறுபுறம் நம்பிக்கை வாக்கெடுப்பு எனும் இறுதிக்காட்சி நெருங்கியது. நாடாளுமன்ற 'மரபை'யும் 'மாண்பை'யும் கட்டிக் காக்க, சோமநாத் சட்டர்ஜி மக்களவைக்குத் தலைமையேற்று நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தினார். நம்பிக்கை வாக்கெடுப்புக்குப் பின்னர் சபாநாயகர் பதவியிலிருந்து அவர் விலகி விடுவார் என்று சி.பி.எம். தலைவர்கள் மிகவும் எதிர்பார்த்தார்களாம். சோமநாத் சட்டர்ஜியோ அவர்களின் முகத்தில் கரி பூசி விட்டார்.

அரண்டுபோன பிரகாஷ் கரத் தலைமையிலான கோஷ்டி, அவசரமாக அரசியல் தலைமைக் குழு கூட்டத்தைக் கூட்டியது. அதில் மே.வங்க கோஷ்டி பங்கேற்காமல் புறக்கணித்தது. ஆனாலும் அரசியல் தலைமைக் குழுவில் பாதிப்பேர் மட்டுமே பங்கேற்ற இக்கூட்டத்தில், கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதற்காக சோமநாத் சட்டர்ஜியை அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்குவதாக முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது. கண்ணியமிக்க சிறந்த நாடாளுமன்றவாதியை சி.பி.எம். கட்சி பழிவாங்கி விட்டதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் மாய்ந்து மாய்ந்து எழுதின. கட்சியிலிருந்து நீக்கப்பட்டாலும், ''நாங்கள் முழுமையான ஆதரவளிக்கிறோம்; மக்களவைத் தலைவர் பதவியிலிருந்து நீங்கள் விலக வேண்டாம்'' என்று காங்கிரசு கூட்டணித் தலைவர்கள் சோமநாத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இருப்பினும் சோமநாத்துக்கு நாற்காலி ஆசை எதுவும் கிடையாதாம். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மரபையும் மாண்பையும் காக்கவே கட்சியின் தவறான முடிவுக்குக் கட்டுப்பட மறுத்தாராம். மே.வங்க பிரபல போலி கம்யூனிஸ்டு தலைவரான ஹிரேன் முகர்ஜியின் நூற்றாண்டு விழா ஆகஸ்டு 12-ஆம் தேதியன்று நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளதால், 'கம்யூனிச' உணர்வோடு அதில் பங்கேற்றுவிட்டு, அவ்விழா முடிந்த மறுநாளே சபாநாயகர் மற்றும் அனைத்து பதவிகள் - பொறுப்புகளிலிருந்தும் சோமநாத் விலகி விடுவாராம். இத்தகவலை தனது குருநாதர் ஜோதிபாசு மூலம் கட்சிக்கும் தெரிவித்துவிட்டாராம். அவரது கண்ணியத்தை அறிந்து அவரது அபிமானிகள் மெய்சிலிர்த்துப் போகிறார்கள்.

அழுகி நாறும் நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தின் 'புனிதம்' காக்க சோமநாத் புது அவதாரம் எடுத்தார். ஆனால், கோஷ்டிச் சண்டையால் அழுகி நாறும் சி.பி.எம். கட்சியை யார் காப்பாற்றப் போகிறார்கள் என்று தெரியாமல், அக்கட்சியின் அணிகள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

● மனோகரன்

www.padippakam.com

# தரகு வேலையே தேசிய அரசியல்

## அணுசக்தி ஒப்பந்தத்தின் பின்னே இந்தியத் தரகு முதலாளிகளின் நலனும் ஒளிந்திருக்கிறது என்பதைப் புட்டு வைத்துவிட்டார், அமர் சிங்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற உடனேயே மன்மோகன் சிங்கை நாடாளுமன்றத்தில் பலர் கைகுலுக்கிப் பாராட்டித் தள்ளினார்கள். ''டைம்ஸ் நவ்'' ஆங்கிலச் செய்தித் தொலைக்காட்சி ''சிங் இஸ் கிங்'' என்ற தலைப்புப் பாடலை ஆரவாரத்துடன் ஒளிபரப்பியது. சூழ்நிலையின் தாக்கத்தால், தானே ஒரு மிகப்பெரும் தலைவர் என்ற மாயை கூட மன்மோகன் சிங்கிற்குத் தோன்றியிருக்கலாம். ஆனாலும் அனல் பறக்கும் விவாதம் நடந்த இந்த நாடாளுமன்றக் கூத்துக்களுக்குப் பின்னால், அதன் முக்கியமான சூத்திரதாரிகள் இருவர் புன்னகைத்துக் கொண்டிருப்பது மன்மோகன் சிங்கிற்கும், ஏன் எதிர்க்கட்சிகளுக்கும் கூடத் தெரியும்.

அவர்கள்தான் அமெரிக்காவால் ஆசீர்வதிக்கப்பட்ட அம்பானிகள்! அண்ணன் முகேஷ் அம்பானியும், தம்பி அனில் அம்பானியும்தான். செத்துப்போன பெரிய அம்பானியின் சுவடுகளில் அரசியலைக் கிழித்துக் கொண்டிருக்கிறார்கள். திருபாய் அம்பானி சட்டங்களை ஏமாற்றித் தொழிலை விரிவுபடுத்தினார். இந்திரா, ராஜீவ் முதலான தலைவர்களுக்குத் தேர்தல் நிதியை அள்ளிக் கொடுத்து ஆதாயம் அடைந்தார். பத்திரிகைகள் மற்றும் அதிகார வர்க்கத்தை ஊழல்படுத்திக் காரியங்களைச் சாதித்துக் கொண்டார். அன்றாவது திருபாயின் மோசடிகளை ''மோசடிகள்'' என்று கூற முடிந்தது. இன்று அப்படி யாரும் அழைப்பதில்லை என்பதால், இளைய அம்பானிகளின் தொழில்துறை அயோக்கியத்தனங்களுக்கு அளவில்லை.





அனில் அம்பானி நிறுவிவரும் தாத்ரி மின்னுற்பத்தி நிலையத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் முலயம் சிங் யாதவ் மற்றும் அமர் சிங் (மேல்படம்); சஹாரா நிறுவன அதிபர் சுப்ரதா ராயுடன் அமர் சிங். (கோப்புப் படங்கள்)

இந்தியாவை அடிமைப்படுத்தும் அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்திற்கு கொசு கடிப்பதைப் போல சில இடையூறுகள் ஏற்படுவதைக் கண்ட அமெரிக்க அரசும், பன்னாட்டு முதலாளிகளும் அதைத் தீர்த்து வைக்குமாறு அனில் அம்பானியிடம் கட்டளையிட்டனர். அணுசக்தி ஒப்பந்தம் அமுலுக்கு வரும்போது தனியாரும் அணுசக்தி துறையில் நுழையலாம் என்ற நிலை இருப்பதால், தானும் அதில் முதலீடு செய்யலாம் என்று அனில் அம்பானி ஏற்கெனவே திட்டமிட்டிருந்தார். இதனால் அமெரிக்க ஆண்டவர்கள் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு நிறைவேற்ற அனில் அம்பானி இறங்கினார். காங்கிரசுக் கட்சியுடன் எலியும் பூனையுமாய் இருந்த சமாஜ்வாதி கட்சியிடம் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களைச் சரிக்கட்டினால் ஒப்பந்தம் நிறைவேறுவது உறுதி என்பதால், இக்கட்சியின் பொதுச்செயலரும் இந்திய அரசியலின் மாபெரும் தரகரும் அனில் அம்பானியின் நெருங்கிய நண்பருமான அமர்சிங், அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கினார். அமர் சிங்கிடமும் இந்த வேலையை நேரடியாக முடித்துத் தருமாறு அமெரிக்க அரசு கூறியிருந்தது.

இவையெல்லாம் கிசுகிசு செய்தியில்லை. இம்மாதம் டெல்லியில் அமெரிக்கத் தூதர் அளித்த விருந்தில் அமர்சிங் கலந்து கொண்டதும் அவரை தூதர் பாராட்டியதும் பத்திரிகையில் வெளிவந்த உண்மைச் செய்திகள். அனில் அம்பானியின் விருப்பத்திற்காக, ஒரு அரசியல் கட்சி தனது அரசியல் நிலைப்பாட்டை திடீரென்று மாற்றிக் கொள்ள முடியுமா என்று நீங்கள் கேட்கலாம். மக்களிடம் அரசியல் பேசி, அணி திரட்டி, வசூல் செய்து கட்சி நடத்துவது எல்லாம் அந்தக் காலம். இப்போது பெரும் நிறுவனங்கள் விளம்பரம் செய்து தமது முத்திரைப் பொருட்களை விற்பது போல, அரசியல் கட்சிகளும் ''கார்ப்பரேட்'' நிறுவனங்களைப் போலச் செயல்


படிப்பகம்

www.padippakam.com



இந்தித் திரைப்பட நடிகர் அமிதாப் பச்சன் குடும்பத்தாருடன் அமர் சிங்.

பட்டு அரசியலை விற்பனை செய்கின்றன. சமாஜ்வாதி கட்சியின் கட்டமைப்பைப் பார்த்தாலே இதைப் புரிந்து கொள்ளலாம்.

சாதி, உள்ளூர் ரீதியான செல்வாக்கிற்கு முலயம் சிங் யாதவ்; சினிமாக் கவர்ச்சியின் செல்வாக்கை அறுவடை செய்வதற்கு அமிதாப்பச்சன், ஜெய பிரதா, ராஜ் பப்பர்; பணத்தை அள்ளிக் கொடுத்துப் பதிலுக்கு தொழிற்துறை சலுகைகளைப் பெறுவதற்கு அனில் அம்பானி, சஹாரா நிறுவன முதலாளிகள்; இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து மற்றவர்களிடம் பேசி அரசியல் முடிவெடுப்பதற்குத் தரகர் அமர் சிங் - இவைதான் சமாஜ்வாதி கட்சியின் உள் கட்டமைப்பு. இந்தக் கட்டமைப்பில்தான் ஒரு சுப முகூர்த்தத்தில் அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தையும் காங்கிரசுக் கூட்டணி அரசையும் ஆதரிப்பதாக அறிக்கை வெளியிட்டார்கள். இதுநாள் வரை ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகக் கூறியவர்கள் இப்படி திடீர் பல்டி அடித்தது குறித்து சி.பி.எம்.இன் பிரகாஷ் காரத் புலம்பி வருந்தினார். தேச நலனுக்காக இப்படி முடிவை மேற்கொண்டதாக தெரிவித்த அமர் சிங், இதுநாள் வரை அணுசக்தி ஒப்பந்தத்தை தவறாகப் புரிந்து கொண்டதாகவும் தெரிவித்தார். பிரகாஷ் காரத் சரியாக வகுப்பெடுக்கவில்லை போலும்.

பொதுவில் அமெரிக்க ஒப்பந்தத்தை முசுலீம் மக்கள் எதிர்ப்பதால், முன்னாள் அரசவைக் கோமாளி அப்துல் கலாமைச் சந்தித்து அணு மின்சாரம் குறித்த அறிவை அரைமணி நேரத்தில் அமர் சிங் பெற்றார். வெளியில் ஒரு நல்ல முசுலீம் இந்த ஒப்பந்தத்தை ஆதரிப்பதால், ஏனைய முசுலீம் மக்களும் ஆதரிப்பார்கள் என்றும் கூறினார். இப்படி வெளிவேஷம் பக்காவாகத் தயாரானதும், உண்மை வேடம் வெளிவந்தது.

இதன்படி, அனில் அம்பானிக்கான கோரிக்கைகள் அமர் சிங் வாய் வழியாக காங்கிரசு அரசுக்கு மிரட்டல் தொனியில் விடப்பட்டன. ஏற்கெனவே அம்பானி சகோதரர்கள் சொத்துப் பிரிப்பதில் அடித்துக் கொண்டிருந்தனர். இந்தியாவின் தேசிய உற்பத்தியில் ஐந்து சதவீதப் பங்களிக்கும் ரிலையன்சு நிறுவனத்தில் இப்படியெல்லாம் நடக்கலாமா என்று பத்திரிகைகள் அங்கலாய்த்தன. சகோதரர்கள் ஒருவர் மீது ஒருவர் வாரியிறைத்த ஊழல் உண்மைகளை விசாரிக்க மாட்டோம் என்று நிதியமைச்சர் ப.சிதம்பரம் அறிவித்திருந்தார். அம்பானி என்றால் அத்தனை பயம்.

இது போக, பிரிந்ததற்குப் பிறகும் அண்ணன்-தம்பி சண்டை முடியவில்லை. கோதாவரி படுகையில் முகேஷ் அம்பானி அபகரித்திருக்கும் இயற்கை எரிவாயு, அனில் அம்பானிக்குச் சரியான விலையில் கிடைக்கவில்லை. மேலும், அனில் அம்பானியின் ரிலையன்ஸ் கம்யூனிகேசன் நிறுவனம் தென்னாப்பிரிக்காவின் எம்.டி.என். நிறுவனத்தை வாங்குவதாக இருந்தது. இதற்கும் முகேஷ் அம்பானி இடையூறாக இருந்தார். அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றும் சாக்கில் அண்ணனுக்குப் பாடம் கற்பிக்க நினைத்த அனில், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டார்.

உலகில் எண்ணெய் விலை ஏறும்போதெல்லாம் உள்நாட்டில் எடுக்கும் எண்ணெய்க்கும் அதே விலை வைத்து ஏற்றுமதி செய்து கொள்ளை இலாபம் பார்க்கும் முகேசின் ஜாம்நகர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் ஏற்றுமதிச் சலுகையை ரத்து செய்யவேண்டும்; மேலும், அந்த நிறுவனத்தின் இலாபத்திற்கு உயர் வரி விதிக்க வேண்டும்; அம்பானி சகோதரர்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளை பிரதமர் தலையிட்டுத் தீர்க்கவேண்டும் என்றெல்லாம் அமர் சிங் பேசினார். இப்படி எதிர்மறைக் கோரிக்கைகள் மட்டுமல்ல; நேர்மறையில் அனில் அம்பானிக்குத் தேவையான சலுகைகளும் கோரப்பட்டன. அதில் முக்கியமானது, செல்பேசிக்கு அளிக்கப்படும் ரேடியோ அலை எனப்படும் ஸ்பெக்ட்ரமுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பது. இவற்றுக்கும் நாட்டின் நலனுக்கும், ஏன் அணுசக்தி ஒப்பந்தத்திற்கும் என்ன் சம்பந்தம் என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்படவில்லை.

ஆக, அமெரிக்க அணுசக்தி ஒப்பந்ததிற்கான அரசியல் நடவடிக்கைகள் எல்லாம் அம்பானிகளை மையம் கொண்டு இயங்கின. இதற்கெல்லாம் முகேஷ் அம்பானி ஒன்றும் அசந்து விடவில்லை. ஒருநாள் நிதானமாக பிரதமரைப் பார்த்துப் பிரச்சினைகளைப் பேசினார். தானும் அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை ஆதரிப்பதாகவும், தன் பங்கிற்கும் எம்.பி.க்களின் ஆதரவைத் திரட்டுவதாகவும் இந்த முதலாளி பேசினார். குறிப்பாக, சிவசேனா உறுப்பினர்களை வாக்கெடுப்புக்கு ஆதரவாக மாற்றுவதாக வாக்களித்தார். பதிலுக்கு, அனில் அம்பானியின் கோரிக்கைகள் மறுக்கப்படவேண்டும் என்றும் கோரினார். வாக்கெடுப்பின் போது, தம்பியின் சார்பாக சமாஜ்வாதி கட்சியினரும் உதிரிக் கட்சியினரும் வாக்களித்தனர் என்றால், அண்ணன் சார்பாக பா.ஜ.க. கூட்டணியில் பத்து பேர் மாறி வாக்களித்தனர். இப்படி இருவரும் தங்கள் செல்வாக்கை இந்திய அரசியலில் மீண்டுமொருமுறை நிரூபித்தார்கள்.

இறுதியில், இந்திய அரசே இரண்டு அம்பானிகளுக்கும் சலுகைகளை வழங்கிச் சமாளித்தது. முக்கியமாக, அணுசக்தி ஒப்பந்தத்தை எல்லாத் தரகு முதலாளிகளும் ஆதரிக்கிறார்கள் என்பதால் அவர்களிடையே பிளவில்லை. அதனால், அம்பானிகளின் தனிப்பட்ட பிளவு அரசியல் பிளவாக மாறவில்லை. அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் அரசு மட்டுமல்ல; அம்பானிகளும் வென்றார்கள்.

அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக இரண்டு முதலாளிகள் இப்படி விளையாடி அரசாங்கத்தையும், அரசியல் கட்சிகளையும் தங்களுக்குக் கீழ்ப்படிய வைக்க முடியுமெனும்போது, அணுசக்தி ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்போது அமெரிக்கா நம்நாட்டை என்னவெல்லாம் செய்யும்?

● இளம்பிறை

www.padippakam.com

# இந்திய அணு உலைகள் பாதுகாப்பு ஒப்பந்தம்:
# தங்க முலாம் பூசிய விலங்கு!

**சர்வதேச அணுசக்தி முகமை, இந்திய அணுசக்தித் துறையை அமெரிக்காவிற்காகக் கண்காணிக்கும் போலீசாகச் செயல்படும்.**

மன்மோகன் சிங் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்றுப் போயிருந்தால், இந்தியா-அமெரிக்கா இடையே கையெழுத்தாகியுள்ள அணுசக்தி ஒப்பந்தத்துக்கு (123 ஒப்பந்தம்) என்ன நேர்ந்திருக்கும்? அவ்வொப்பந்தம் நடைமுறைக்கு வர இன்னும் சில மாதங்கள் கால தாமதம் ஏற்பட்டிருக்குமேயொழிய, அவ்வொப்பந்தம் காலாவதி ஆகிப் போயிருக்காது. ஏனென்றால், பா.ஜ.க., உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அணுசக்தி ஒப்பந்தம் நிறைவேற அனுமதிக்கக் கூடாது என்ற அடிப்படையில் காங்கிரசு கூட்டணி அரசுக்கு எதிராக வாக்களிக்கவில்லை.

இடதுசாரிக் கட்சிகளில் கூட, இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக முழுக் கருத்தொற்றுமை இருக்கிறதா என்பதும் சந்தேகத்திற்குரியதுதான். நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன்பாக 'மார்க்சிஸ்டு' கட்சித் தலைவர்களுக்குள் வெடித்த கோஷ்டிச் சண்டை, இந்தச் சந்தேகத்தை வலுப்படுத்துவதாகத்தான் அமைந்தது.

அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்ற இந்திய நாடாளுமன்றத்தின் ஒப்புதலே தேவையில்லை எனும்பொழுது, ஓட்டுக்கட்சிகளின் ஆதரவு / எதிர்ப்பைப் பற்றி விவாதித்துக் கொண்டிருப்பது வெட்டி வேலை.

அதனால்தான், மன்மோகன் சிங், தனது ஆட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இழந்துவிட்டதைப் பற்றிக் கூட கவலைப்படாமல், இந்தியாவிற்கும், சர்வதேச அணுசக்தி முகமைக்கும் இடையே முடிவாகியுள்ள கண்காணிப்பு ஒப்பந்தத்தை, அம்முகமையின் இயக்குநர்களின் ஒப்புதலைப் பெற கடந்த ஜூலை 18 அன்று அனுப்பி வைத்தார். கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு, இதே தேதியில்தான் (ஜூலை 18, 2005) அமெரிக்கா-இந்தியா இடையே இராணுவக் கூட்டுறவு ஒப்பந்தம் கையெழுத்தானது; அவ்வொப்பந்தத்தின் மூன்றாமாண்டு நிறைவு நாளில், இந்தியாவிற்கான அணு உலை கண்காணிப்பு ஒப்பந்தத்தை சர்வதேச அணுசக்தி முகமையின் இயக்குநர்களின் ஒப்புதலைப் பெற அனுப்பி வைத்ததன் மூலம், 123 ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்களை எள்ளி நகையாடியிருக்கிறார், மன்மோகன் சிங்.

''இந்தியாவின் அணு உலைகளை இராணுவப் பயன்பாட்டுக்கானது; சமூகப் பயன்பாட்டுக்கானது எனப் பிரிப்பது; சமூகப் பயன்பாட்டுக்கான அணு உலைகளையும்; அணு உலைகளில் பயன்படுத்தப்படும் கனநீரைத் தயாரிக்கும் ஆலைகளையும்; அணுசக்தி தொடர்பான ஆராய்ச்சி நிறுவனங்களையும், இந்தியா தானாக வலியப் போய் சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்புக்கு உட்படுத்தச் சம்மதிப்பதாக'' மன்மோகன் சிங் புஷ்ஷிடம் எழுதிக் கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் தான் இந்தியாவிற்கும், சர்வதேச அணுசக்தி முகமைக்கும் இடையே இந்தியாவிற்கான பாதுகாப்பு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு, அது அம்முகமையின் இயக்குநர்களின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது.

இங்கு ஒப்புதல் கிடைத்த பிறகு, இந்தியாவிற்கு யுரேனியம் விற்பதற்கான ஒப்புதலை அணு மூலப் பொருள் விநியோகம் செய்யும் நாடுகளின் கூட்டமைப்பிடமிருந்து அமெரிக்கா பெற்றுத் தரும். இதன் பிறகு, அணுசக்தி கூட்டுறவு தொடர்பாக இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே உருவாக்கப்பட்டுள்ள ''123 ஒப்பந்தத்திற்கு'' அமெரிக்கா நாடாளுமன்றம் தனது ஒப்புதலை அளிக்கும். அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷின் பதவிக் காலம் முடிவதற்குள்ளாகவே இவையனைத்தையும் முடித்துவிடத் துடிக்கிறார், மன்மோகன் சிங்.

●●●

அணுசக்தி ஒப்பந்தம் குறித்து மன்மோகன் சிங்குக்கும் ஜார்ஜ் புஷ்ஷுக்கும் இடையே ஜப்பான் நாட்டில் நடந்த சந்திப்பு.



www.padippakam.com

இந்தியா அணுஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நாடு என்பதோடு, அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள நாடும் கூட. எனவே, சர்வதேச அணுசக்தி முகமையில் இந்தியாவிற்கெனத் தனித்ததொரு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டிருப்பதோடு, அணுஆயுத வல்லரசு நாடுகளான அமெரிக்கா, ரசியா, இங்கிலாந்து, பிரான்சு, சீனாவிற்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் இந்தியாவிற்கும் வழங்கப்பட்டிருப்பதாக, இவ்வொப்பந்தத்தின் அருமை பெருமைகளை எடுத்து விட்டு வருகிறது, மன்மோகன் சிங் கும்பல்.

இந்திய அணு உலைகளுக்குத் தேவைப்படும் யுரேனியத்தைத் தடையின்றி வழங்க வேண்டும் என்ற நிபந்தனையோடுதான், சர்வதேச அணுசக்தி முகமையோடு கண்காணிப்பு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது; அதையும் மீறித் தடை ஏற்பட்டால், அதனை நீக்கக் கூடிய நடவடிக்கைகள் எடுக்கவும்; இந்திய அணு உலைகளை அவற்றின் ஆயுட்காலம் முழுவதும் இயக்குவதற்குத் தேவையான யுரேனியத்தை சேமித்து வைத்துக் கொள்ளவும் இவ்வொப்பந்தம் இந்தியாவிற்கு உரிமைகள் வழங்கியிருக்கிறது; மேலும், இந்தியாவின் அணு ஆயுத, இராணுவ நோக்கங்களுக்குள் சர்வதேச அணுசக்தி முகமை தலையிடாத வண்ணம் இவ்வொப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க ஆதரவாளர்கள் கூறுகிறார்கள்.

## "யுரேனியம் இறக்குமதிக்குத் தடை ஏற்பட்டாலும், நிரந்தரக் கண்காணிப்புக்கு உட்பட வேண்டும்" என்பதுதான் இந்த ஒப்பந்தம் சொல்லும் செய்தி.

இது எந்தளவிற்கு உண்மையானது எனத் தெரிந்து கொள்ள ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். இந்திய அணுசக்தி கமிசனின் தலைவர் அனில் ககோத்கரிடம், ''யுரேனியம் வழங்குவதில் தடை ஏற்பட்டால், அதைச் சரி செய்யும் நடவடிக்கைகள் எடுக்க இந்தியாவிற்கு உரிமை உண்டு என ஒப்பந்தம் கூறினாலும், அந்த உரிமைகள் என்னென்ன என்பது பற்றி ஒப்பந்தத்தில் தெளிவாக, வெளிப்படையாக வரையறுக்கப்படவில்லையே?'' எனக் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அனில் ககோத்கர், ''சரி செய்யும் நடவடிக்கைகளை, குறிப்பாகச் சொல்லப்படாத இறையாண்மையுடைய செயல்கள் என்றுதான் நான் வருணிப்பேன்; சமயம் வரும்பொழுது, அவை பற்றி நாங்கள் முடிவெடுப்போம்'' எனப் பதில் அளித்தார். (தி ஹிந்து, 20.7.08, பக்: 13) இதற்குப் பெயர் பதில் இல்லை; சமாளிப்பு!

ஐந்து அணு ஆயுத வல்லரசு நாடுகளும், தாங்கள் விரும்பினால், தங்களது அணு உலைகளை சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்பில் இருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளும் உரிமையைப் பெற்றுள்ளன. அதே போன்று உரிமை இந்தியாவிற்கும் அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும், அதனைப் பயன்படுத்துவது என்பது ஏழுமலை தாண்டி, ஏழு கடல் தாண்டி... என மாயாஜாலக் கதைகளில் வருவது போன்று பல தடைகளை உள்ளடக்கியிருக்கிறது.

இந்திய அணு உலைகளுக்குத் தடங்கல் இன்றி யுரேனியம் கிடைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில்தான் இந்த ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதாக மன்மோகன் சிங் அரசு திரும்ப திரும்பக் கூறி வருகிறது. இதன் மூலம் சர்வதேச அணுசக்தி முகமையை, யுரேனியத்தை வாங்கி விற்கும் தரகு வியாபார நிறுவனம் போலச் சித்தரித்து வருகிறது. இது உண்மைக்கு மாறானது. சர்வதேச அணுசக்தி முகமை அணு உலைகளைக் கண்காணிக்கும் அமைப்பு தானே தவிர, சர்வதேச யுரேனியம் வியாபாரத்திற்கும் அதற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. அணு மூலப் பொருள் விற்கும் நாடுகள் இந்தியாவிற்கு யுரேனியம் வழங்குவதில் ஏதேனும் தடை ஏற்படுத்தினால், அது பற்றி இந்தியா சர்வதேச அணுசக்தி முகமையிடம் முறையிடலாம். அப்பாவி பக்தன் தனது பிரச்சினைகளைத் தெய்வத்திடம் முறையிடுவது போல.

சமூக வாழ்க்கையில் தெய்வத்தை விட, பூசாரியே அதிகாரம் உள்ளவனாக இருப்பதைப் போல, சர்வதேச அணுசக்தி முகமையைவிட அமெரிக்காவும், அது செல்வாக்கு செலுத்தும் அணு மூலப் பொருள் வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பும் தான் யுரேனியம் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துகின்றன. அதனால்தான், இந்திய அணு உலைகளை சர்வதேச அணு முகமையின் கண்காணிப்பில் இருந்து திரும்பப் பெறும் உரிமையைப் பயன்படுத்துவீர்களா எனப் பத்திரிகையாளர்கள் கேட்ட

**சர்வதேச அணுசக்தி முகமையின் தலைவர் முகம்மது எல்பராதேய்க்கும் இந்திய அணுசக்தி கமிசனின் தலைவர் அனில் ககோட்கருக்கும் (வலது) இடையே நடந்த பேச்சு வார்த்தை.** (நன்றி: இந்தியா டுடே).



www.padippakam.com




பொழுது ''அப்படிப்பட்ட தேவை எழாது'' என சர்வதேச அணுசக்தி முகமையோடு பேச்சு வார்த்தை நடத்திய முனைவர் குரோவர் பதில் அளித்தார். இதனை நல்ல நம்பிக்கை எனச் சொல்வதா, இல்லை சரணாகதி எனச் சொல்வதா?

சர்வதேச அணுசக்தி முகமையால் உருவாக்கப்பட்டுள்ள இந்தியாவிற்கான கண்காணிப்பு ஒப்பந்தம் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது. இணைப்பு என அழைக்கப்படும் ஒப்பந்தத்தின் மூன்றாவது பகுதி இந்தியா எந்தெந்த அணு உலைகளைச் சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்புக்கு ஒப்படைக்கப் போகிறது என்பது பற்றியது. ஆனால், இந்திய வெளியுறவுத் துறையின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள நகல் ஒப்பந்தத்தில், அந்தப் பகுதி விவரம் ஏதும் இல்லாமல் மொட்டையாக இருக்கிறது. இந்த இணைப்புப் பகுதி சர்வதேச அணுசக்தி முகமைக்குக் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கப்பட்ட வெற்றுக் காசோலையா என்ற கேள்விக்கு, இந்திய அதிகாரிகளிடமிருந்து பதிலேதும் இல்லை.

இந்த ஒப்பந்தம் இந்தியாவிற்கு வழங்கியுள்ளதாகக் கூறப்படும் அணு உலைகளைக் கண்காணிப்பில் இருந்து திரும்பப் பெறும் உரிமை; யுரேனியத்தைச் சேமித்து வைத்துக் கொள்ளும் உரிமை; யுரேனியம் கிடைப்பதில் தடங்கல் ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்கும் உரிமை ஆகியவை ஒப்பந்தத்தின் முகவுரையில் (முதல் பகுதி) தான் காணப்படுகிறதேயொழிய, முக்கியமான இரண்டாம் பகுதியான செயலாக்கப் பிரிவில் காணப்படவில்லை. இப்படி விடுபட்டிருப்பது தற்செயலானதா என்ற சந்தேகத்திற்கும் தெளிவான பதில் இல்லை.

123 ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பிறகு, அணு உலைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொள்ள இந்தியாவிற்குப் பாரிய கட்டுப்பாடுகள் எதுவும் இருக்காது. அதேசமயம், இறக்குமதி செய்யப்பட்ட அணு உலைகளும், யுரேனியமும், பிற அணுப் பொருட்களும், தொழில்நுட்பக் கருவிகளும் சர்வதேச அணுசக்தி முகமையின் நிரந்தரக் கட்டுப்பாட்டில் வைக்கப்படும்; அக்கண்காணிப்பை ரத்து செய்யும் உரிமை இந்தியாவிற்குக் கிடையாது. இறக்குமதி செய்யப்பட்ட அணு உலைகளுக்கு யுரேனியம் கிடைக்காமல், அவை கிடப்பில் போடப்பட்டிருந்தாலும்கூட, சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்பில் இருந்து விலக்கிக் கொள்ள முடியாது. அணு உலையோடு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் இந்தியாவில் இருந்து **அகற்றப்படும்** வரை கண்காணிப்பு தொடரும்.

சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்புக்கு 'உட்படுத்தப்பட்ட ''சுதேசி'' அணு உலைகளை, இந்தியா தன்னிச்சையாகக் கண்காணிப்பில் இருந்து திரும்பப் பெற்று விட முடியாது. இந்த ஒப்பந்தத்தின் 32-ஆவது விதி, ''இந்தியா சர்வதேச அணுசக்தி முகமையிடம், அதனின் கண்காணிப்பை ரத்து செய்யக் கோர வேண்டும்; இரண்டாவதாக, அந்த அணு உலை எந்தவிதமான அணுசக்தி தொடர்பான நடவடிக்கைகளுக்கும் இனி பயன்படாது என்பதை இந்தியாவோடு சேர்ந்து, சர்வதேச அணுசக்தி முகமையும் தீர்மானிக்க வேண்டும்'' என நிபந்தனை விதிக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின் 14-ஆவது விதி, சுதேசி அணு உலையாக இருந்தாலும் ஒருமுறை கண்காணிப்புக்கு விட்டுவிட்டால், அதனை நிரந்தரமாகக் கண்காணிக்கும் உரிமையை சர்வதேச அணுசக்தி முகமைக்கு வழங்குகிறது. ''பாதுகாப்பு நோக்கம்'' என்ற அடிப்படையில், இந்தியாவின் சுதேசி அணு உலைகளை நிரந்தரமாகக் கண்காணிப்பதை இந்த விதி நியாயப்படுத்துகிறது. மேலும், ''இறக்குமதி செய்யப்பட்ட யுரேனியம் கிடைக்கவில்லை என்ற காரணத்தைக் கூறி, இந்தியாவின் சுதேசி அணு உலைகளை கண்காணிப்பில் இருந்து விலக்கிக் கொள்ள முடியாது'' என இந்த 14-ஆவது விதி மறைமுகமாகத் தடை விதிக்கிறது.

இந்திய அரசு கூறி வருவதைப் போல, அணு உலைக்கு ஆயுட்காலம் முழுவதும் யுரேனியம் வழங்கினால், அதனை ஆயுட்காலக் கண்காணிப்புக்கு உட்படுத்துவோம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இந்தியாவிற்கான பாதுகாப்பு ஒப்பந்தம் உருவாக்கப்படவில்லை. மாறாக, அதற்கு நேர் எதிரான திசையில்தான் ஒப்பந்தம் பயணிக்கிறது. ''யுரேனியம் இறக்குமதிக்குத் தடை ஏற்பட்டாலும், நிரந்தரக் கண்காணிப்புக்கு உட்பட வேண்டும்'' என்பதுதான் இந்த ஒப்பந்தம் சொல்லும் செய்தி.

●●●

**இ**ந்தியா-அமெரிக்கா இடையேயான அணுசக்தி கூட்டுறவை (வியாபாரத்தை!)க் கட்டுப்படுத்த ''ஹைட்'' சட்டத்தை உருவாக்கி வைத்திருக்கிறது, அமெரிக்கா. அணு உலைகளைத் தடங்கல் இன்றி இயக்கும் அளவிற்கு யுரேனியத்தைச் சேமித்து வைத்துக் கொள்ளும் உரிமையை, சர்வதேச அணுசக்தி முகமை இந்தியாவிற்குப் பெயரளவில் வழங்கியிருக்கிறது. ஆனால், ஹைட் சட்டமோ இந்த உரிமையை முற்றாக மறுக்கிறது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் யுரேனியத்தைச் செறிவூட்டுவது, புத்துருவாக்கம் செய்வது ஆகிய உரிமைகள் இந்தியாவிற்கு வழங்கப்படுவதை ஹைட் சட்டம் மறுக்கிறது. அணு உலைகளில் பயன்படுத்தப்பட்ட யுரேனியத்தைப் புத்துருவாக்கம் செய்யும் உரிமை வழங்கப்பட்டாலும், அதற்காக சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்பின் கீழ் புதிதாக

www.padippakam.com

ஆலை அமைக்க வேண்டும். ஆலை அமைக்கப்பட்ட பிறகும் கூட, ஏதாவது நொண்டிச் சாக்கைச் சொல்லி புத்துருவாக்கம் செய்யும் உரிமையை மறுக்கலாம் போன்ற மென்னியைப் பிடிக்கும் நிபந்தனைகள் ஹைட் சட்டத்தில் உள்ளன.

பி.கே. ஐயங்கார், ஏ.கோபால கிருஷ்ணன், ஏ.என்.பிரசாத் — இம்மூன்று அணு விஞ்ஞானிகளும், "யுரேனியத்தை புத்துருவாக்கம் செய்யும் உரிமையை இந்தியாவிற்கு மறுப்பதன் மூலம், தோரியத்தைப் பயன்படுத்தி அணு மின்சாரம் உற்பத்தி செய்யும் இந்தியாவின் மூன்றாம் கட்டத் திட்டத்தை அமெரிக்கா முடக்கிவிடச் சதி செய்கிறது" எனக் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

123 ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்காவிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அணு உலைகளை, யுரேனியம் உள்ளிட்ட அணு மூலப் பொருட்களை, **"இந்தியப் பிராந்தியத்தில் இருந்து, இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்து அகற்றும்"** உரிமையை ஹைட் சட்டம் அமெரிக்காவிற்கு வழங்குகிறது. இந்த **அகற்றும் உரிமை, இராணுவம் தலையீடு செய்வதற்கு இணையானது** என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.பி. வீரேந்திர குமார் எச்சரிக்கை செய்கிறார்.

ஆனால், மன்மோகன் சிங் கும்பலோ, "ஹைட் சட்டம் நம்மைக் கட்டுப்படுத்தாது; சர்வதேச அணு சக்தி முகமையோடு போடப்பட்டுள்ள ஒப்பந்தம்தான் இந்தியாவைக் கட்டுப்படுத்தும்" எனப் பூசி மெழுகி வருகிறது. சர்வதேச அணுசக்தி முகமையும்கூட நியாயமான, நடுநிலையான அமைப்பு அல்ல. ஈரானைக் கண்காணிக்கும் பிரச்சினையில் அச்சர்வதேச நிறுவனத்தின் அமெரிக்க அடிவருடித்தனம் அப்பட்டமாக அம்பலப்பட்டுப் போனது.

**சர்வதேச அணுசக்தி முகமையும்கூட நடுநிலையான அமைப்பு அல்ல. ஈரானைக் கண்காணிக்கும் பிரச்சினையில் அந்நிறுவனத்தின் அமெரிக்க அடிவருடித்தனம் அம்பலப்பட்டுப் போனது.**

சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்புக்கு உட்படுத்தாமல், இந்தியா ஒதுக்கி வைத்துள்ள இராணுவ அணு உலைகளில் கூட, தனது வானளாவிய அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சர்வதேச அணுசக்தி முகமை மூக்கை நுழைக்கும் காட்சியை நாம் எதிர்காலத்தில் காண முடியும். மற்ற ஏழை நாடுகள் அணுகுண்டு தயாரிப்பதைத் தடை செய்ய அணு ஆயுதப் பரவல் தடைச் சட்டம் என்றால், இந்தியாவிற்கு இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் என்பதே உண்மை!

•••

**ஈரானிடமிருந்து ஆப்கான்-பாகிஸ்தான் வழியாக குழாய் மூலம் இயற்கை எரிவாயு பெறுவது குறித்து ஈரான் அதிபர் முகம்மது அகமதி நிஜாத்துக்கும் (இடது) மன்மோகன் சிங்குக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தை (கோப்புப் படம்). ஈரான் எவ்வளவோ முயன்றும் அமெரிக்காவின் நிர்ப்பந்தம் காரணமாக இத்திட்டத்தைக் கிடப்பில் போட்டு விட்டது, இந்திய அரசு.**



இந்தியா-அமெரிக்கா அணுசக்தி கூட்டுறவு ஒப்பந்தம் மூலம், 2020-க்குள் 40,000 மெகாவாட் மின்சாரத்தைப் பெற முடியும் என அனில் ககோத்கர் கூறுகிறார். ஆனால், அமெரிக்கா மனது வைத்தால்தான் இந்தியா இந்தச் 'சாதனையை'ப் படைக்க முடியும். இதற்குப் பதிலாக, இந்தியாவில் கிடைக்கும் நிலக்கரி, நீர் ஆதாரங்களைப் பயன்படுத்திக் குறைவான முதலீட்டில், அணு மின்சாரத்தை விட மலிவான உற்பத்திச் செலவில் 2020-க்குள் 1,20,000 மெகாவாட் மின்சாரத்தை, அமெரிக்காவின் தலையீடின்றி தயாரிக்க முடியும் என 123 ஒப்பந்தத்தை எதிர்க்கும் அணு விஞ்ஞானிகளே கூறுகிறார்கள். பிறகு ஏன், அமெரிக்க அடிமைத்தனம் என்ற பொன்விலங்கை இந்திய அரசு மாட்டிக் கொள்ள விரும்புகிறது?

மன்மோகன் சிங் என்ற அமெரிக்க அடிவருடியின் தனிப்பட்ட விருப்பமாக இதனைப் பார்க்க முடியாது. அம்பானி சகோதரர்கள் மட்டுமின்றி, இந்தியத் தரகு முதலாளிகள் அனைவரும் இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கிறார்கள். இந்தியத் தரகு முதலாளிகளுக்கு அமெரிக்க டாலரும், அமெரிக்க - ஐரோப்பியச் சந்தையும் வேண்டும். ஆசியக் கண்டத்தில் தனது மேலாதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள அமெரிக்காவுக்கு இன்னுமொரு அடியாள் தேவை. இந்த இரண்டு தேவைகளையும் நிறைவு செய்து கொள்ளும் முகமாகத்தான் இந்திய-அமெரிக்க இராணுவ ஒப்பந்தமும், அதன் அடிப்படையில் அணுசக்தி ஒப்பந்தமும் உருவாக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் இராணுவக் கூட்டாளி என்ற தகுதியைப் பெறுவதற்காகவே, சுயேச்சையாகச் செயல்பட்டு வந்த அணுசக்தித் துறையும்; இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கும் அரைகுறை உரிமையும் முற்றிலுமாக அமெரிக்காவிடம் அடகு வைக்கப்பட்டுள்ளன!

● குப்பன்

படிப்பகம்

www.padippakam.com

## விவசாயக் கடன் தள்ளுபடி:

# காகித கவர்ச்சித் திட்டம்

**விவசாயக் கடன் தள்ளுபடி குறித்து ரிசர்வ் வங்கி உருவாக்கியிருக்கும் நிபந்தனைகள் நயவஞ்சகமானவை.**

இந்த ஆண்டு மைய அரசின் பட்ஜெட்டில், ''குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வங்கிக்கடனில் 71 ஆயிரம் கோடி ரூபாய் வரை தள்ளுபடி செய்யப்படுகிறது'' என்று நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அறிவித்தார். தள்ளுபடி நடைமுறைக்கு வரும் முன்பே பட்ஜெட் விளக்கப் பொதுக் கூட்டங்கள் நடத்தி ''விவசாயிகளுக்காக நாடு கடன்பட்டுள்ளது. அந்தக் கடனைத் திருப்பி அடைத்திருக்கிறோம்'' என்றும் ''தவறான கணக்கை எழுதிய பள்ளிக்கூடச் சிறுவனின் சிலேட்டைத் துடைத்து விட்டு, புதுக்கணக்கை எழுத வைத்திருக்கிறோம்'' என்றும் சிதம்பரம் தனக்குத் தானே பாராட்டிக் கொண்டார்.

அரசின் இந்த அறிவிப்பால் உண்மையிலேயே சிறு விவசாயிகள் பலனடைந்திருக்கிறார்களா, 71 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளைச் சென்றடைந்திருக்கிறதா என்பதைப் பார்த்தால்தான் ப.சிதம்பரம் சொன்ன பள்ளிக்கூடக் கணக்கின் உண்மை நிலவரம் தெரியும்.

பட்ஜெட்டில் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்ட பின்னர், இந்திய ரிசர்வ் வங்கி இதற்கான நெறிமுறைகளை வகுத்து அனைத்து வங்கிகளுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியிருக்கிறது. இதன்படி 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கடன் வாங்கியவர்களுக்கும், 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் நகையை அடகு வைத்துக் கடன் வாங்கியவர்களுக்கும் தள்ளுபடி கிடையாது. இரண்டரை ஏக்கருக்குள் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் குறு விவசாயிகள் என்றும், 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்கள் சிறு விவசாயிகள் என்றும் வரையறுக்கப்பட்டு, அவர்களுக்கு மட்டும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடன் தள்ளுபடி செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதர விவசாயிகளைப் பொறுத்தவரை, கடனில் 25 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். இச்சலுகையைப் பெறுவதற்கு மீதி 75 சதவீதத் தொகையை முழுவதும் செலுத்தி இருக்க வேண்டும்.

**தஞ்சாவூர் மாவட்டம் - குருங்குளத்தில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக் கிளையைப் பூட்டிப் போட்டு போராட்டம் நடத்தும் விவசாயிகள்.**



31.3.2007-க்குப் பிறகு வழங்கப்பட்டுள்ள குறுகிய கால பயிர் சாகுபடிக் கடன்கள், மைய அரசு அறிவித்துள்ள கடன் தள்ளுபடி திட்டத்திற்குள் வராது. பயிர்க் கடன்கள் 31.3.2007-க்குள் வழங்கப்பட்டிருந்தாலும், அக்கடன், கடன் வழங்கிய வங்கியால் 31.12.2007-க்குள் தவணை தவறிய, கெடு கடந்த கடனாக அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்; மேலும், அப்படி அறிவிக்கப்பட்ட கடன்கள் 29.02.2008 வரை திருப்பிச் செலுத்தப்படாத நிலையில் இருக்க வேண்டும். இந்த நிபந்தனைகளுக்குப் பொருந்தி வரும் குறுகிய கால பயிர்க் கடன்கள்; கிணறு தோண்டுதல், உழவு மாடு வாங்குதல், டிராக்டர் உள்ளிட்ட உழுபடைக் கருவிகள் வாங்குதல் போன்ற கூடுதல் மகசூல் பெறுவதற்காக வழங்கப்பட்ட முதலீட்டுக் கடன்கள்; பால்பண்ணை, கோழிப் பண்ணை போன்ற பண்ணைசார் தொழில்களுக்குத் தேவையான சொத்துக்களை வாங்குவதற்கான கடன்கள்தான் தள்ளுபடிக்குத் தகுதி பெற்றவையாக இந்திய ரிசர்வ் வங்கியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கி அறிவித்துள்ள நிபந்தனைகளின்படி, 31.12.2007-க்குள் தவணை தவறிய கடனாக அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றால், தள்ளுபடிக்குத் தகுதி பெறும் கடன்கள் 31.12.2006-க்கு முன்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், அரசு வங்கிகளின் விதியின்படி கடன் வாங்கியதில் இருந்து ஓராண்டு வரை தவணைக் கட்டாமல் இருந்தால்தான் தவணை தவறிய கடனாக வங்கி அறிவிக்கும். சனவரி 2007-க்கும் மார்ச் 2007-க்கும் இடையில் வழங்கப்பட்ட பயிர் கடன்கள் தள்ளுபடிக்குத் தகுதி பெறாது எனத் தெரிந்திருந்தும், 31.3.2007 வரை வழங்கப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்யப் போவதாக அறிவித்து, விவசாயிகளை மோசடி செய்திருக்கிறது, மைய அரசு.

உழவு போட ஆரம்பிக்கும்போதே பெரும்பாலான சிறு விவசாயிகள் வீட்டில் இருக்கும் நகைகளை அடகு வைத்துத்தான் கடன் வாங்குகிறார்கள். 20 ஆயிரத்துக்குக் குறைவாகக் கடன் வாங்குவதும் ஒன்றுதான்; நிலத்தைத் தரிசாகப் போடுவதும் ஒன்றுதான். விவசாய இடுபொருட்கள் விற்கும் விலையை வைத்துப் பார்த்தால், இந்தச் சிறு தொகைக்குக் குறைவாக நகைக்கடனை வாங்கியவர்களை விரல்விட்டு எண்ணிவிட முடியும். நத்தம் தொகுதி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் விசுவநாதன், தனது தொகுதியில் இந்தக் கடன் தள்ளுபடியால் பலன் அடைந்த 10 விவசாயிகளைக் கூட காண முடியவில்லை என்கிறார்.

பண்ணைசார் தொழில்களுக்காக 50,000 ரூபாய் வரை கடன் பெற்றவர்கள், சிறு, குறு விவசாயிகளாகக் கருதப்பட்டு, அவர்களின் முழுக் கடனும் தள்ளுபடி செய்யப்படும். அதற்கு மேல் கடன் பெற்றவர்கள், இதர விவசாயிகளாகக் கருதப்பட்டு, அவர்களுக்கு 20,000 ரூபாய் அல்லது 25 சதவீதக் கடன் தள்ளுபடி, இதில் எது அதிகமோ அத்தொகை கடன் நிவாரணமாக அளிக்கப்படும்.


படிப்பகம்

www.padippakam.com

அதேபொழுதில், காவிரிப் பாசனப் பகுதிகளான தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூர் மாவட்டங்களில் ஐந்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு, இந்த 25 சதவீதக் கடன் தள்ளுபடி கூடக் கிடையாது என அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த ஓரவஞ்சனை மூப்பனார் போன்ற பினாமி பண்ணையாளர்களை வேண்டுமானால் பாதிக்காமல் போக லாம்; ஆனால், நடுத்தர விவசாயிகளுக்குப் பெரிய இடியா கவே இருக்கும்.

சுய உதவிக் குழுக்கள் விவசாயம் செய்வதாகத் தகவல் எதுவும் இல்லை. வாங்கிய கடனை மீட்டர் வட்டிக்கும், கந்து வட்டிக்கும் கொடுத்து நிதியைச் சுழலச் செய்வதே இக்குழுக் களின் முக்கியத் தொழில் என்பது ஊரறிந்த இரகசியம். எனி னும், அவர்களுக்குக் கடன் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களின் சர்வதேச எஜமானனான பன்னாட்டு நிதி நிறுவனங்களைத் திருப்திபடுத்துவதற்காகக் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டிருக்கலாம்! விவசாயிகள் வாங்கிய கந்துவட்டியை ரத்து செய்யத் துணியாத மைய அரசு, கந்துவட்டிக்கு விடும் சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடனை ரத்து செய்வது வேதனையான முரண்பாடு.

இரப்பர், ஏலக்காய் பயிர் செய்து அந்நிய செலாவணி ஈட்டினால் அது பாரம்பரியத் தோட்டப்பயிர். காட்டா மணக்கு வேளாண்மை, மெடிசின் காய்ப் பண்ணை அமைத்தால் அது பாரம்பரியமில்லாத தோட்டப்பயிர். விவசாயத்தை நாசமாக்கும் இந்த 'தேசிய' சேவைக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை தள்ளுபடியாம். ஆனால் நெல், கம்பு, சோளம் பயிரிட நகைக்கடன் வாங்கி இருந்தால், அதற்கு 20 ஆயிரத்துக்குள் வரம்பாம்.

எளிய விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கடனைத் தராமல் வங்கிகள் இழுத்தடிப்பதால் அவர்கள் அவசரத்திற்கு நகைகளை மார்வாடிகளிடம் அடகு வைத்துக் கடன் பெறுகின் றனர். மார்வாடிகளோ வங்கி அதிகாரிகளுடன் கள்ளக் கூட்டணி வைத்து நகைக்கடன்கள் பெற்று வருகின்றனர். இப்போது 'தள்ளுபடி மேளா'வின் பலனை இவர்களும் அனுபவிக்கின்றனர் என்கிறார்கள், சீர்காழி–கழுமலையாறு பாசன விவசாயிகள் சங்கத்தினர்.

ரிசர்வ் வங்கி ஏகத்துக்கு நிபந்தனைகள் போட்டு தள்ளு படியையே ஒன்றுமில்லாமல் ஆக்கிட முயற்சி செய்யும் போது, அரசு வங்கிகளும் தங்கள் பங்கிற்குத் தள்ளுபடிக்குத் தகுதியான விவசாயிகள் பட்டியலைத் தயாரிக்கும்போது, திருத்தத்திற்கு மேல் திருத்தம் செய்து கடன் தள்ளுபடிக்குத் தகுதியான விவசாயிகள் பலரையும் வஞ்சித்துள்ளது.

**காவிரிப் பாசன மாவட்டங்களில் ஐந்து ஏக்கருக்குமேல் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி கிடையாது. இது, நடுத்தர விவசாயிகளுக்குப் பேரிடியாகவே இருக்கும்.**

தஞ்சை மாவட்டம் குருங்குளம் ஊராட்சியில் இருக்கும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ரிசர்வ் வங்கியின் நிபந்தனை களின்படி 5 கோடி ரூபாய்க்கு மேல் தள்ளுபடி செய்திருக்க வேண்டிய கடனைச் சுருக்கி, வெறும் ஒன்றே கால் கோடி ரூபாயை மட்டும் தள்ளுபடி செய்திருக்கின்றது. தள்ளுபடிப் பட்டியலையும் பகிரங்கமாக ஒட்டாமல் இரகசியமாகப் பூட்டி வைத்திருந்தது. இதனால் அப்பகுதி விவசாயிகள் ஆத்திரமடைந்து கடந்த ஜூலை 21-ஆம் நாளன்று வங்கிக் கிளையை முற்றுகை யிட்டு அதன் ஊழியர்களை உள்ளே வைத்துப் பூட்டிச் சிறைவைத்தனர். 4 மணி நேரம் நடந்த இந்தப் போராட்டம், வங்கி அதிகாரிகள் வந்து, நியாயமான நடவடிக்கை எடுக்கப்படும் எனும் உறுதிமொழி தரும் வரை நீடித்தது.

ஆயிரத்துக்குமேற்பட்ட பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட மகாராஷ்டிரா மாநிலம்- விதர்பாவில் இதுவரை கடன் தள்ளுபடி வழங்கப்படவில்லை. நபார்டு வங் கியின் ஆணைப்படி 1997- ஆம் ஆண்டுக்கு முன்பு வாங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்ய முடியாது என அரசு அறிவித்ததால், கட்ட வேண்டிய கடன் தொகையும் கடன் தொகையை விடப் பல மடங்குள்ள வட்டித்தொகையும் சேர்ந்து விவசாயிகளின் கழுத்தைப் பிடித்து இறுக்கி வருகிறது. கடன் தள்ளுபடி இழுபறியில் இருப் பதால் விவசாயிகளுக்குப் புதிதாக கடன் ஏதும் கிடைக்காது என்பதும், இதனால் அவர்கள் கந்து வட்டிக்கா ரர்களிடம் மறுபடியும் சிக்க வேண் டியிருக்கும் என்பதும்தான் நடைமுறையாகியுள்ளது.

**நாடு முழுவதும் நடந்து வரும் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளையும்; விவசாயிகள் கந்துவட்டிக் கும்பலால் துன்புறுத்தப்படுவதையும் தடுக்கக் கோரி, பஞ்சாப் விவசாயி களின் குடும்பத்தினர் தில்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்).**




● இரணியன்

www.padippakam.com

# கேளிக்கைப் பூங்காக்களாகும் ஏரிகள்: தனியார்மயத்தின் மகிமை

**பெங்களூரு நகரின் நீர் ஆதாரங்களைப் புதுப் பணக்காரக் கும்பல் கூத்தடிக்கும் பூங்காக்களாக மாற்றி வருகிறது, கர்நாடகா மாநில அரசு.**

இந்தியத் தகவல் தொழில்நுட்பத் துறையின் தலை நகராகக் கருதப்படும் பெங்களூருவின் சிறப்பே அதன் ஏரிகள்தான். சில ஆண்டுகளுக்கு முன்னர் கூட இந்நகரில் நூற்றுக்கணக்கான ஏரிகள் இருந்தன. ஆனால் அந்நிய - தரகு முதலாளிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், இந்த நகரை மொய்க்கத் தொடங்கிய சில ஆண்டுகளிலேயே, இந்த ஏரி களின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணும் அளவிற்குச் சுருங்கி விட்டது.

ஏரிகளை ஆக்கிரமித்து, தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், வணிகவளாகங்கள், ''கோல்ப்'' மைதானங்கள், மேட்டுக்குடி குடியிருப்புகள் போன்றவை ரியல் எஸ்டேட் கொள்ளையர்களால் உருவாக்கப்பட்டு, பெரும்பாலான ஏரிகள் காணாமல் போய்விட்டன. எஞ்சிய ஏரிகளோ தூர் வாரப்படாமல் கழிவுநீர் தேங்கி குப்பைக் கூளங்களாய்க் கிடக்கின்றன. இவை கர்நாடக அரசின் கண்களை உறுத்தியவுடன், அவற்றைச் சுத்தம் செய்து பராமரிக்கத் தன்னால் முடியாது என நொண்டிச்சாக்கு சொல்லி, தற்போது அவற்றைத் தனியாருக்கு விற்க ஆரம்பத்துள்ளது.

இவ்வாறு விற்கப்பட்ட ஏரிகளில் ஒன்றுதான் நாகவரா ஏரி. பெங்களூரு நகரின் முக்கியமான ஏரிகளில் ஒன்றான இந்த ஏரி தற்போது ''லும்பனி கார்டன்'' என்னும் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏரி தங்கள் வசம் வந்தவுடன் அந்நிறுவனத்தினர் ஏரியைச் சுற்றித் தடுப்புச்சுவர் எழுப்பி யாரும் ஏரிக்குள் நுழையா வண்ணம் தடுத்துவிட்டதோடு, ஏரிக்குள் நுழைய 30 ரூபாய் நுழைவுக்கட்டணமும் வசூலிக்க ஆரம்பத்துள்ளனர். அது மட்டுமன்றி, ஏரிக்குள் வெளிநாடுகளில் உள்ளதைப்போல நீர் மேல் ஓடும் ஸ்கூட்டர்கள், அதிவேகப் படகுகள், ''காபி டே'' போன்ற நட்சத்திர உணவகங்கள், மிதக்கும் உணவகங்கள், நவீன சிறுவர் விளையாட்டுக்கள் எனப் பல அம்சங்கள், அவற்றிற்கெனத் தனித் தனியே கட்டணங்கள்- என்று மக்களின் பொதுப் பயன்பாட்டிலிருந்த அந்த ஏரி முழுவதையும் லாபம் தரும் பொழுது போக்குப் பூங்காவாக (''தீம் பார்க்'') மாற்றிவிட்டனர்.



''ஏரிகள் சமூகத்தின் பொதுச் சொத்து'' - அகாரா ஏரி குத்தகை விடப்பட்டதை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் பங்கு கொண்ட சிறுவன்.

இந்த ஒரு ஏரி மட்டுமன்றி, பெங்களூரு நகரின் முக்கியமான ஏரிகளான அகாரா, ஹெப்பல், வெங்கயநாகரே உள்ளிட்ட இன்னும் மூன்று ஏரிகளையும் தனியார் நிறுவனங்களுக்கு 15 வருட ஒப்பந்தத்தினடிப்படையில் குத்தகைக்கு விட்டுள்ளனர். இவ்வாறு ஏரியைக் குத்தகைக்கு எடுத்திருப்பவர்கள் நேச்சுரல் சிஸ்டம்ஸ், ஈஸ்ட் இந்தியா ஓட்டல்ஸ், பார்சி போன்ற ரியல் எஸ்டேட் நிறுவனங்களும், நட்சத்திர விடுதிகளும் தான்.

ஒப்பந்தத்தின்படி தனியார் நிறுவனங்கள், ஏரியைத் தூர் வாருவது, கழிவுநீரை வெளியேற்றுவது மற்றும் ஏரியைப் பராமரிப்பது போன்ற வேலைகளைச் செய்தால் மட்டும் போதும். ஆனால் அதற்கு ஈடாக அவர்கள் ஏரியைச் சுற்றிலும், ஏன் ஏரிக்குள்ளும் கடைகள் அமைக்கலாம்; நீர் விளையாட்டுக்கள், பூங்காக்கள், உணவகங்கள் என எது வேண்டுமானாலும் திறந்து மக்களிடம் காசைச் கறக்கலாம்; பொதுச் சொத்தான இந்த ஏரியைச் சுற்றி சுவர் எழுப்ப அவர்கள் விரும்பும் தொகையை மக்களிடமிருந்து நுழைவுக் கட்டணமாக வசூலிக்கலாம் என்று தாராள சலுகைகள் அளிக்கப் பட்டுள்ளன.

முதல் கட்டமாக நான்கு ஏரிகளில் மட்டுமே செயல்படுத் தப்பட்டுள்ள இந்தத் திட்டம், அடுத்தகட்டமாக மேலும் 25 ஏரிகளிலும், படிப்படியாக 50 ஏரிகளிலும் செயல்படுத்தப்பட உள்ளது. இவ்வாறு ஏரிகளைத் தனியார்மயமாக்குவதற் கென்றே ''ஏரிகள் வளர்ச்சிக் குழுமம்'' என்ற நிறுவன மொன்றை அம்மாநில அரசு உருவாக்கியுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com



புதுப்பணக்காரக் கும்பலின் உல்லாச விடுதியாக்கப்பட்ட பெங்களூருவின் நாகவரா ஏரி.

அனைத்து ஏரிகளையும் பறவைகள் சரணாலயமாகவோ அல்லது உயிரியல் பூங்காவாகவோ அறிவித்துப் பாதுகாக்க வேண்டும் என சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மேலும், மீனவர்களின் நலனை மனதில் கொண்டு, இனிமேல் தூர்வாரப்பட்டு, அழகுபடுத்தப்படும் ஏரிகள் அனைத்தும், பொதுமக்களுக்கும் இயற்கைக்குமான உறவை பாதுகாக்கும் வகையில் அமையவேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

மேலும் இந்த அறிக்கை, ஏரிகளை அழகுபடுத்தும் பொருட்டு உணவகங்கள், நீர் விளையாட்டுகள், மற்றும் இதர கட்டுமானங்கள் ஏரிக்குள்ளும் ஏரிக்கருகிலும் கட்டப்படக்கூடாது எனவும், ஏரியைச் சுற்றி பிரம்மாண்டமான மின்விளக்குகள் அமைக்கக் கூடாது எனவும் வலியுறுத்துகிறது.

150 ஏக்கர் பரப்பளவில் அதாவது சுமார் 67.5 லட்சம் சதுர அடி பரப்பளவில் அமைந்த ஒரு ஏரிக்கு, அதுவும் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள ஒரு இடத்திற்கு தனியார் நிறுவனங்கள் தர வேண்டிய குத்தகைத் தொகை வருடத்திற்கு வெறும் 72 லட்ச ரூபாய் மட்டுமே. இவ்வளவு மலிவான விலையில் நகரின் முக்கியப் பகுதியில் இடம் கிடைப்பதால் அனைத்து ரியல் எஸ்டேட் கொள்ளையர்களும் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஏரிகள் பாதுகாப்புக் குழுமத்தை மொய்க்கத் தொடங்கியுள்ளனர்.

ஏரிகள் தனியாருக்கு விற்கப்படுவதால் உடனடியாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள், ஏரிகளையே நம்பி வாழ்ந்து வரும் மீனவர்கள்தான். இதுவரை இவர்கள் வனத்துறையிடம் உரிமம் பெற்று ஏரிகளில் மீன்பிடித்து வந்துள்ளனர். ஆனால், தற்போதைய ஒப்பந்தத்திற்குப் பிறகு அவர்களது அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நூற்றுக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் பறிபோய் விட்டது.

இவர்களோடு இந்த ஏரிகளை நம்பித் தொழில் நடத்தி வரும் நூற்றுக்கணக்கான சலவைத் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். சில மாதங்களுக்கு முன்னர் வரை, ஏரிகள் பொதுப் பயன்பாட்டிலிருந்ததால் அவற்றில் துணிகளைத் துவைத்துத் தங்களது பிழைப்பை நடத்தி வந்த இவர்கள், தற்போது தங்களது தொழிலை நடத்த வழி தெரியாமல் தவிக்கின்றனர்.

மீன் பிடிப்பதும், துணிகளைத் துவைப்பதும் ஏரிகளை மாசுபடுத்துவதாகக் கூறும் ஏரிகள் வளர்ச்சிக் குழுமத்திற்கு, நீர் விளையாட்டுக் கருவிகளிலிருந்து வெளியேறும் எண்ணெய்க் கழிவுகளும், "காபி டே" உணவகங்களின் உணவுக் கழிவுகளும் ஏரியை மாசுபடுத்துவது தெரிவதில்லை.

இது பற்றி அம்மாநில உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டது. அவ்வழக்கில் கர்நாடக மாநில வனத்துறை சார்பில் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில்

இந்த அறிக்கையைத் தொடர்ந்து, பெங்களூரு நகரக் குடிநீர் வடிகால் வாரியம் நாகவரா ஏரியையும், வெங்கய நாகரே ஏரியையும் நகருக்குக் குடிநீர் வழங்க ஏற்ற ஏரியாகத் தேர்ந்தெடுத்துள்ளது. இதற்காக அந்த ஏரியில் படகு சவாரி தடைசெய்யப்படுவதுடன், ஏரிக்கரையில் அமைந்துள்ள உணவகங்களும் மூடப்பட வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் ஏரி மாசடைவதைத் தடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளது.

ஆனால், இவை யாவும் ஏரிகள் வளர்ச்சிக் குழுமத்தின் காதுகளில் விழுந்ததாகத் தெரியவில்லை. அது அடுத்த கட்டமாக ஏரிகளை குத்தகைக்குவிடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

கடந்த 2002-ஆம் ஆண்டில், தொழில் வளர்ச்சி என்ற பெயரில், பெல்லந்தார் ஏரிக்கருகிலிருந்த விளைநிலங்களை விவசாயிகளிடமிருந்து பறிமுதல் செய்த தொழில் வளர்ச்சிக் குழுமம், பின்னர் அவற்றை இன்போஸிஸ் எனும் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு இலவசமாக வழங்கியது. தற்போது ஏரிப் பராமரிப்பு எனும் பெயரில் முழு ஏரியும் தனியாருக்குக் கொடுக்கப்படுகிறது.

தனியார்மயம் என்ற பெயரில் ஏற்கெனவே ஆற்றுத் தண்ணீரையும், ஆற்றுப்படுகைகளையும் கொக்கோ கோலா போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரைவார்த்து விட்டனர்; "நீரா" என்ற ஆற்றையே தனியாருக்கு விற்பனை செய்தனர்; தற்போது அடுத்த கட்டமாக ஏரிகள் அனைத்தையும் தனியாருக்கு விற்க ஆரம்பித்துள்ளனர். இப்படியே போனால் நமது நீர் ஆதாரங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் தனியாருக்கு விற்பனை செய்து, நீருக்காக நாம் அவர்களிடம் கையேந்தும் நிலையை ஏற்படுத்திவிடுவார்கள், இந்தத் தனியார்மய தாசர்கள்.

• அழகு

www.padippakam.com

# “ஊழலை அம்பலப்படுத்தினால் உயிர் இருக்காது!”


## - அதிகார கும்பல் விடுக்கும் பகிரங்க எச்சரிக்கை!

லலித் மேத்தா — 36 வயதான பொறியாளர்; சமூக சேவகர். விகாஸ் சாயோக் கேந்திரா (VSK) எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் செயலாளர். கடந்த பத்தாண்டுகளாக ஒடுக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கான பணிகளில் ஈடுபட்டு வந்தவர். அவரது தன்னார்வக் குழு, ஜார்கந்த் மாநிலத்தின் பாலமாவ் மாவட்டத்தில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் (NREGS) நடக்கும் ஊழல்-மோசடிகளைத் தடுக்க, உண்மை விவரங்களைச் சேகரித்தும் கள ஆய்வுகளை மேற்கொண்டும் அம்பலப்படுத்த முற்பட்டது. இதற்காக டெல்லி மற்றும் வடமாநிலங்களிலிருந்து வந்த இத்தன்னார்வக் குழு ஊழியர்களும் நண்பர்களும் பாலமாவ் மாவட்டத்தின் செயின்பூர், சத்திரப்பூர் வட்டங்களில் கடந்த மே 13-ஆம் தேதியன்று விவரங்களைச் சேகரிக்கத் தொடங்கினர். மறுநாள், மே 14-ஆம் தேதியன்று இப்பகுதியிலுள்ள கந்தரா எனும் காட்டுப் பகுதியில் லலித்மேத்தா கோரமாகக் கொல்லப்பட்டுப் பிணமாகக் கிடந்தார்.

அரசுத் திட்டங்களில் நடக்கும் ஊழல்-மோசடி, வீண்விரயங்களை அரசு அதிகாரிகள் கண்டறிந்து தணிக்கை செய்யும் முறைக்கு மாற்றாக, மக்களிடம் கருத்து கேட்டு தாங்களே தணிக்கை செய்யும் நடைமுறையை அண்மைக்காலமாகத் தன்னார்வக் குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன. இதனைச் ''சமூகத் தணிக்கை முறை'' என்று அவை குறிப்பிடுகின்றன. பிரபல பொருளாதார நிபுணரான ஜீன் ட்ரேஸ் என்பவரது வழிகாட்டுதலின் கீழ் இத்தகைய சமூகத் தணிக்கைக்காகவே இத்தன்னார்வக் குழுவினர் கருத்து கேட்பும் கள ஆய்வும் செய்ய முற்பட்டனர். இதனால் ஆத்திரமடைந்த ஒப்பந்ததாரர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கூட்டுச்சேர்ந்து, குண்டர்களை ஏவி முன்னணியாளர் லலித்மேத்தாவைக் கொன்றொழித்துள்ளனர்.

இதை மூடிமறைக்க போலீசும் மாவட்ட நிர்வாக அதிகாரிகளும் மே 31-ஆம் தேதிதான் லலித்மேத்தா மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளார் என்று கூசாமல் புளுகினர். ''தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஊழல் நடந்துள்ளதாக வதந்தியைப் பரப்பி, மாநில அரசு மீதும் மாவட்ட நிர்வாகத்தின் மீதும் இக்குழுவினர் அவதூறு செய்துள்ளனர். ஊழல் நடந்ததற்கு இதுவரை எந்த ஆதாரமும் இல்லை. படிப்பறிவற்ற பழங்குடி மக்களை ஏமாற்றி, இவர்கள் பொய்யான புகார் மனு தயாரித்து விளம்பரப் படுத்திக் கொள்கின்றனர். இத்தன்னார்வக் குழுவுக்கு வரும் நிதியைக் கையாண்ட லலித்மேத்தா அக்குழுவில் ஏற்பட்ட பணத்தகராறினால் கொல்லப்பட்டிருக்கலாம்'' என்று ஊழல் கூட்டாளிகளான போலீசும் அதிகார வர்க்கமும் அறிக்கை வெளியிட்டனர்.

விசாரணையைத் திசைதிருப்பும் போலீசு கும்பலின் வக்கிரமான இந்த அறிக்கையை பல்வேறு அமைப்புகளும் பிரமுகர்களும் கண்டித்து, பாலமாவ் நகரில் கடந்த ஜூன் மாதத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இப்பகுதியில் இயங்கிவரும் நக்சல்பாரி புரட்சியாளர்களான மாவோயிஸ்டுகள், தன்னார்வக் குழுக்களின் நோக்கத்தையும் செயல்பாட்டையும் எதிர்த்து வந்த போதிலும், லலித்மேத்தாவின் கொலைக்கு காரணமான ஒப்பந்ததாரர்கள், அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு, மக்கள் நீதிமன்றத்தில் இவர்களைத் தண்டிப்போம் என்று இப்பகுதியில் துண்டுப் பிரசுரம் - சுவரொட்டிகளை வெளியிட்டனர். தலைநகர் டெல்லியிலும் லலித்மேத்தா படுகொலைக்கு



ஊழலை அம்பலப்படுத்தியதற்காகக் கொல்லப்பட்ட லலித் மேத்தா, தனது இரு குழந்தைகளுடன்.

எதிராகத் தன்னார்வக் குழுக்களும் மனித உரிமை அமைப்புகளும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி மையப் புலனாய்வுத் துறையின் விசாரணையைக் கோரின. காங்கிரசு தலைவி சோனியா காந்தியும் பா.ஜ.க. ஆளும் மாநில அரசில் நடக்கும் ஊழலை அம்பலப்படுத்தியதற்காக லலித்மேத்தா கொல்லப்பட்டுள்ளார் என்று முதலைக் கண்ணீர் வடித்தார். இத்தனைக்கும் பின்னரே இப்போது ஜார்கந்த் மாநில அரசு மையப் புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

தாராளமயமாக்கலால் விவசாயமும் விவசாயிகளும் நாசமாக்கப்பட்டு, அரசின் புள்ளி விவரப்படியே ஏறத்தாழ 26



படிப்பகம்

www.padippakam.com

கோடி பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் இந்தியாவில், கூலி-ஏழை விவசாயிகளின் அதிருப்தியைத் தணிக்கவும், வாழ்விழந்த விவசாயிகள் நாடோடிகளாகி நகரங்களில் குவிவதைத் தடுக்கவும், விவசாயிகளின் கலகங்களைத் திசை திருப்பி நிவாரணங்கள் மூலம் வடிகால் வெட்டவும் உலக வங்கியின் உத்தரவுப்படி காங்கிரசு கூட்டணி அரசால் 2005-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கவர்ச்சித் திட்டம் தான், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். இத்திட்டப்படி, வேலையற்ற கிராமப்புற மக்களுக்கு ஆண்டுக்கு 100 நாட்களுக்கு வேலை தரப்பட்டு, அவர்கள் வேலை செய்த அளவுக்கேற்ப கூலி தரப்படும்.

''கடந்த 2006-ஆம் ஆண்டில் இத்திட்டம் 330 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, வறுமையில் உழலும் 3 கோடி குடும்பங்கள் பலனடைந்துள்ளன. பின்னர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மூலம் நாடெங்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த ஆண்டில் இத்திட்டத்தால் தாழ்த்தப்பட்ட-பழங்குடியினரும், குறிப்பாக கிராமப்புற பெண்களும் தொடர்ச்சியாக 85 நாட்களுக்கு வேலையும் கூலியும் பெற்று, வறுமையின் கோரப் பிடியில் சிக்காமல் மீண்டுள்ளனர். வேலை கொடுப்பதும் கூலி கொடுப்பதும் வெளிப்படையாக நடப்பதாலும் வேலை செய்வோருக்குச் சட்ட ரீதியாகப் பாதுகாப்புகள் உள்ளதாலும் ஊழலோ மோசடியோ நடக்க வாய்ப்பில்லை ஆண்டுக்கு ரூ. 16,000 கோடிக்கு மேல் செலவிடப்படும். இத்திட்டத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து நாடெங்கும் மேலும் விரிவுபடுத்தத் தீர்மானித்துள்ளோம்'' என்று இத்திட்டத்தின் அருமை பெருமைகளை அடுக்குகிறார், மைய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சரான ரகுவந்த் பிரசாத் சிங்.

ஆனால், இத்திட்டம் எங்கெல்லாம் நடைமுறைப்படுத்தப்படுகிறதோ, அங்கெல்லாம் ஊழலும் மோசடியும் புழுத்து நாறுகிறது. ஏரி-குளங்களைத் தூர் வாருதல், மராமத்து வேலைகள், சாலை போடுதல் முதலான திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றை ஒப்பந்ததாரர்களும் அதிகாரிகளும் சுருட்டிக் கொண்டு பொய் கணக்கு காட்டி ஏய்ப்பது; இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் வேலை கொடுத்துவிட்டு, அனைவருக்கும் வேலை கொடுத்ததாக வருகைப் பதிவேட்டில் மோசடி செய்வது; எந்த அளவிற்கு மண் அள்ளப்பட்டுள்ளது என்பதை அதிகாரிகளே அளந்து பார்த்து அதற்கேற்ப கூலி கொடுக்கப்படுவதால், அளவீட்டில் மோசடி செய்வது; வேலைக்கு வருவோரிடம் மண் வெட்டி, கடப்பாரை, மண் அள்ளும் இரும்புச் சட்டி முதலான சாதனங்களைக் கொடுக்காமல், அவற்றை ஒப்பந்ததாரர்கள் மூலம் வாடகைக்கு விட்டு, கூலியில் குறைத்துக் கொள்வது; ஒப்பந்ததாரர்கள் மூலம் இயந்திரங்களைக் கொண்டு திட்டப் பணிகளைச் செய்து, இத்தனை பேர் இத்தனை நாட்களுக்கு வேலை செய்ததாகப் பொய்க் கணக்கு காட்டி ஏய்ப்பது என்பதாக எல்லையற்ற ஊழலும் மோசடிகளும் இத்திட்டத்தில் தொடர்கின்றன. எனவேதான் இம்மோசடி - ஊழல்களை அம்பலப்படுத்துவோர் மீது அதிகார வர்க்கமும் ஒப்பந்ததாரர்களும் வெறியோடு பாய்ந்து தாக்குகின்றனர்.

**லலித்மேத்தாவின் கொலைக்கு காரணமான ஒப்பந்ததாரர்கள், அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு, மக்கள் நீதிமன்றத்தில் இவர்களைத் தண்டிப்போம் என்று மாவோயிஸ்டுகள் கூறியுள்ளனர்.**

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருவதாகப் பீற்றிக் கொள்ளப்படும் இராஜஸ்தான் மாநிலத்தில், இத்திட்டத்தில் நடக்கும் ஊழல்-முறைகேடுகளைப் பற்றி ஜலவார் மாவட்டத்தில் கள ஆய்வு செய்ய முற்பட்ட தன்னார்வக் குழுக்கள் - மனித உரிமை அமைப்புகளின் முன்னணியாளர்கள் கடந்த ஜூன் மாதத்தில் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர். லலித் மேத்தாவின் கொலைக்கு முன்னதாக, கடந்த மே 9-ஆம் தேதியன்று ஒரிசாவின் கோரபுட் மாவட்டத்தைச் சேர்ந்த நாராயண் ஹரேகா என்ற பஞ்சாயத்துத் தலைவர் இத்திட்டத்தின் மூலம் கொள்ளையடித்து வந்த ஒப்பந்ததாரர்களை அம்பலப்படுத்தியதால் கொல்லப்பட்டுள்ளார். தமிழகத்தில், கோபிசெட்டிப் பாளையம் அருகே இத்திட்டத்தில் பதிவு செய்து கொண்டு வேலை செய்தோருக்கு குறைவான கூலி வழங்கப்பட்டதை எதிர்த்து சாலை மறியல் போராட்டம் நடந்தது. இன்னும் சில பகுதிகளில் இயந்திரங்களை வைத்துப் பணிகள் நடப்பதாகப் புகார்கள் பெருகத் தொடங்கியதும், அதிகாரிகள் சில ஊர்களின் பஞ்சாயத்துத் தலைவர்கள் மீது துறைசார்ந்த நடவடிக்கை எடுத்துள்ளனர். இப்படியாகத் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டமானது, ஊழல் உறுதித் திட்டமாகி விட்டது.

**● தனபால்**

**இராசஸ்தான் மாநிலம் - ஜலவார் மாவட்டத்தில் உள்ள பன்ஸ்கேதா கிராமத்தில் தன்னார்வத் தொண்டர்களால் நடத்தப்படும் சமூகத் தணிக்கை.**



www.padippakam.com

# மிதக்கும் சிறைச்சாலைகள்: அமெரிக்க பயங்கரவாதத்தின் புதிய முகம்

**மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே, மிதக்கும் சிறைச்சாலைகள் என்ற உத்தியை அமெரிக்கா கையாண்டு வருகிறது.**

வெள்ளை ஏகாதிபத்தியத்துக்கு எதிராக வீரப்போர் புரிந்தவர்களை அந்தமான், மலேயா போன்ற கண்காணாத தீவுகளுக்கு நாடு கடத்தினார்கள், அன்றைய காலனியாதிக்க வாதிகள். அவ்வீரர்களை தாய்நாட்டில் இருந்து நிரந்தர மாய்ப் பெயர வைப்பதன் மூலம் எதிர்ப்புணர்வைக் கருகச் செய்து விடலாம் என்று கணக்குப் போட்டனர். அன்று மட்டு மல்ல, இன்றும் ஆளும் வர்க்கங்கள் உலகெங்கிலும் இதே போன்ற பல ஒடுக்குமுறைகளைத்தான் ஏவி வருகின்றன.

பெரு நாட்டில் "ஒளிரும் பாதை" என்ற ழைக்கப்படும் மாவோயிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அபமேல் கன்சலாவ் மீது அந்நாட்டின் ஆளும் வர்க்கம் சதிக்குற்றம் சுமத்தி, அவரை நாடு கடத்திச் சான் லாரன்சோ தீவில் சிறை வைத்துள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று அறிவித்து 2001 முதல் தான் நடத்தி வரும் நர வேட்டையில், உயிருடன் பிடிபட்டவர்களை எல்லாம் கொண்டு வந்து கியூபா எல்லையை ஒட்டிய குவாண்டனாமோ சிறையில் அடைத்து, அமெரிக்க அரசு சித்திரவதை செய்து வருகிறது. அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்க்கும் ஈராக்கியர்களை அபு-கிரைப் சிறைச்சாலையில் அடைத்து வக்கிரமான வழி களில் சித்திரவதை செய்து வருகின்றது.

குவாண்டனாமோ மற்றும் அபு–கிரைப் சித்திரவதைகள் குறித்த தகவல்கள் வெளிவரத் தொடங்கி அமெரிக்க பயங்கரவாதம் உல கெங்கும் அம்பலமானவுடன், அது புது வடிவில் தனது அடக்குமுறையைக் கையாளத் தொடங்கியுள்ளது. அதுதான், **மிதக்கும் சிறைச்சாலை!**

அல்-காய்தா, தாலிபான் தீவிரவாதி என்று முத்திரை குத்தப்பட்டோ, அல்லது பயங்கர வாதி என்ற சந்தேகத்தின் பேரிலோ கைது செய்யப்படுபவர்கள் பெரும்பாலும் அமெ ரிக்கச் சிறைகளில் அடைக்கப்படுவதில்லை. நீதிமன்றத்திலும் முன்னிறுத்தப்படுவதில்லை. யு.எஸ்.எஸ். பெலிலை, யு.எஸ்.எஸ். பட்டான் உள்ளிட்ட 17 அமெரிக்கப் போர்க்கப்பல் களில் அவர்கள் அடைக்கப்பட்டு பெருங் கடல்கள் நெடுக அலைய விடப்படுகின்றனர். அக்கப்பல்களில் நடத்தப்படும் வன்கொடுமைகளால் குற்று யிராக்கப்பட்டு, அவர்களில் தாக்குப்பிடித்தவர்கள் மட்டும் அமெரிக்க விசுவாச நாடுகளின் கரைகளில் இருக்கும் சிறைக்கு அனுப்பப்படுகின்றனர். கைதானவர்களின் எண் ணிக்கையை மறைக்கவும், கைதானவர்கள் எங்கிருக்கி றார்கள் என்பதை மறைக்கவும் இந்தப் புது உத்தியை மேற் கொண்டு வருகிறது, பயங்கரவாத அமெரிக்கா.

மிதக்கும் சிறைச்சாலை: விசாரணைக் கைதிகளை அடைத்து வதைக்கும் அமெரிக்கப் போர்க் கப்பல் (மனித உரிமை அமைப்புகளால் வெளியிடப்பட்ட படம்.) டிகோ கார்சியா தீவுக்கு விசாரணைக் கைதிகளைக் கொண்டு வரும் அமெரிக்கப் போர்க் கப்பல்கள். (கீழே)







படிப்பகம்

www.padippakam.com

ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் இயங்கி வரும் ''ரிப்ரீவ்'' எனும் மனித உரிமை அமைப்பால் மிதக்கும் சிறைகள் பற்றிய நெஞ்சை உறையச் செய்யும் பல கொடுமைகள் அண்மையில் வெளிவரத் தொடங்கி உள்ளன. அமெரிக்க அரசு முதலில் இச்செய்திகளை வதந்திகள் என மறுத்தது. ஆனால், அமெரிக்க இராணுவத்தின் இரகசிய அறிக்கைகள், ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுக்களின் அறிக்கைகள் மற்றும் கைதிகளின் வாக்குமூலங்கள் ஆகியன மிதக்கும் சிறைகள் இருப்பதை உறுதி செய்கின்றன.

அமெரிக்க கடற்படை செய்தி தொடர்பாளரான கமான்டர் ஜெப்ரீ கார்டன், ''அமெரிக்க போர்க்கப்பல் எவற்றிலும் சிறை வசதி ஏதுமில்லை'' என்றார். அவரே ''அவ்வாறு கைதிகளை அடைப்பது கைதானவுடன் சில நாட்களுக்கு மட்டும்தான்'' என்றும் ''சில நேரங்களில் கப்பல்களில் கொண்டு செல்லப் படுவர்'' என்றும் பூசி மெழுகி இருக்கிறார்.

அமெரிக்க அதிபர் புஷ் 2006-இல் ''இரகசியச் சிறைகள் எல்லாமே காலியாகத்தான் உள்ளது'' என்றும், ''மிதக்கும் சிறைக்கொடுமை கைவிடப்பட்டு விட்டது'' என்றும் சொல்லியபோதிலும், 2006-க்குப் பிறகு மட்டும் 200 முறை அவ்வாக்குறுதி மீறப்பட்டு சிறைக்கொடுமைகள் தொடர்கின்றன என்று மனித உரிமை அமைப்புகள் அம்பலப்படுத்துகின்றன.

குவாண்டனாமோ சிறையில் இருக்கும் ஒரு கைதி தனது சக கைதியைப் பற்றி சாட்சியம் சொல்லும்போது, ''கப்பல் மூலம் அழைத்து வரப்பட்ட அவருடன் சேர்த்து 50 பேர்கள் அடுத்த கொட்டடியில் இருந்தனர்'' என்றும் ''அவர்களைக் கப்பலின் கீழ்த்தளத்தில் அடைத்துப் பூட்டி இருந்தனர்'' என்றும் குறிப்பிட்டுள்ளார். அவர்களைக் கப்பல் சிறைகளில், குவான்டனாமோவை விடக் கொடுமையாக அடித்து உதைத்துச் சித்திரவதை செய்துள்ளனர்.

கப்பல்களில் அடைக்கப்பட்ட கைதிகள் கண்காணாத இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு வதைக்கப்பட்டு வருகின்றனர். யு.எஸ்.எஸ். ஆஷ்லான்ட் எனும் கப்பல் சோமாலியா நாட்டின் கடற்கரையில் 2007-இல் ரோந்தில் ஈடுபட்டது. அல்-காய்தாவினரைப் பிடிக்கும் நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்த அக்காலக்கட்டத்தில், சோமாலியா, கென்யா, எத்தியோப்பியா படையினரால் அல்-காய்தா என சந்தேகத்தின்பேரில் பிடிபட்டவர்கள் அமெரிக்க உளவமைப்புகளான சி.ஐ.ஏ., எஃப்.பி.ஐ.-யினரால் பிடித்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர். இந்நாடுகளின் சிறையில் இருந்து அப்போது காணாமல் போனவர்கள் மட்டும் 100 பேர். அப்போது ஏடன் வளைகுடாவில் ரோந்து வந்த கப்பல்களிலும், ஆஷ்லாண்டு கப்பலிலும் வைத்து இவர்கள் சித்திரவதை செய்யப்பட்டிருக்கலாம் என்கிறது ரிப்ரீவ்–வின் அறிக்கை.

இந்தியப் பெருங்கடலில் 25 சதுர மைல் பரப்பில் அமைந்திருக்கும் டிகோ கார்சியா தீவு, பிரிட்டிஷ் – அமெரிக்க இராணுவத்தளமாகும். 15 கப்பல்கள், இராணுவ வீரர்களைத் தவிர மனித நடமாட்டமே இல்லாத இத்தீவைச் சுற்றிப் போர்க்கப்பல்கள் நிறுத்தப்பட்டு, அவற்றில் அமெரிக்காவால் வேட்டையாடப்பட்ட விசாரணைக் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க கடற்படை செய்தி தொடர்பாளரான கமான்டர் ஜெப்ரீ கார்டன், ''அத்தீவுக்கருகில் நிலைகொண்டிருக்கும் சிறைக்கப்பல்கள் குறித்து ஏதும் சொல்ல முடியாது'' என்று கூறிவிட்டார். ஆனால், பயங்கரவாதம் குறித்த ஐ.நா.வின் சிறப்புப் பிரிவின் தலைவரான மான்பிரெட் நோவாக், ''இத்தகைய சித்திரவதைக் கப்பல்கள் டிகோ கார்சியா தீவுக்கருகில் உள்ளன'' என்று 2005 ஜூனிலேயே சொல்லி இருக்கிறார்.

**அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட பிறகு ஏறத்தாழ 80,000 பேர் அமெரிக்காவால் கைது செய்யப்பட்டு இரகசியமான சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.**

அத்தீவில் அமெரிக்கப் போர் விமானங்கள் விசாரணைக் கைதிகளுடன் இரண்டு முறை தரையிறங்கிய விசயம் வெளியே தெரிய வந்துள்ளது. தற்போது அமெரிக்க அயலுறவு அமைச்சகம் அவ்வாறு தரையிறங்கிய விமானங்கள், அழைத்துச் செல்லப்பட்ட கைதிகள் ஆகியவற்றின் பட்டியலைத் தயாரிக்கும்படி உத்தரவிட்டிருக்கிறது.

அமெரிக்காவில் அல்-காய்தா எனக் குற்றம் சாட்டப்பட்ட ஜான் வாக்கர் லிந்த், 2001 இறுதியில் கைது செய்யப்பட்டு யு.எஸ்.எஸ். பலிலியம் கப்பலில் அடைக்கப்பட்டு, பின்னர் 2002 ஜனவரியில் பட்டான் கப்பலுக்கு கொண்டு செல்லப்பட்டார் என்பதும் அம்பலமாகியுள்ளது.

டிகோ கார்சியா தீவைத் தவிர சி.ஐ.ஏ.வின் இரகசிய சித்திரவதைக் கூடங்கள் தாய்லாந்து, ஆப்கான், போலந்து, ருமேனியா நாடுகளில் இயங்கி வருகின்றன. மேலும் சிரியா, மொராக்கோ, ஜோர்டான், எகிப்து ஆகிய நாடுகளிலும் கைதிகள் இரகசிய இடங்களில் அடைக்கப்பட்டு, அமெரிக்கப் படையினரால் வதைக்கப்பட்டு வருகின்றனர். தொழிலும் வர்த்தகமும் சுரண்டலும் அடிமைத்தனமும் மட்டுமல்ல, பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் சிறை-சித்திரவதைக் கொடுமைகளையும் உலகமயமாக்கியுள்ளது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

இன்றுவரை நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படாத 26 ஆயிரம் பேர் இரகசியச் சிறையில் இருப்பதாய் அமெரிக்க அரசு சொல்லி இருப்பினும், 2001 முதல் கைது செய்யப்பட்டவர்கள் 80 ஆயிரம் என்கிறது மனித உரிமை அமைப்புகளின் அறிக்கை. அந்த 80 ஆயிரம் பேரும் எங்கே உள்ளனர்? அவர்களின் கதி என்ன? என்பதை அமெரிக்கா முழுமையாகத் தெரிவிக்க வேண்டும் எனும் குரல் அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி யுள்ளது. உலகின் கொடூரமான பயங்கரவாதி அமெரிக்காதான் எனும் உண்மையும் பலருக்குப் புரியத் தொடங்கி யுள்ளது.

● இளநம்பி

www.padippakam.com

## ஆப்கான்:

# அஞ்சி நடுங்கும் ஆக்கிரமிப்பாளர்கள் பலிகடாவாகும் இந்தியர்கள்

**ஆப்கானில் தாலிபான் தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டும் அமெரிக்காவின் நோக்கம் ஈடேறவில்லை.**

**கா**ரிருள் சூழ்ந்தாற்போல எங்கும் புகை மூட்டம்; இந்தியத் தூதரகக் கட்டிடம் சுக்கலாக நொறுங்கியது; தாலிபான்களின் மனிதவெடிகுண்டுத் தாக்குதலால் காபூல் நகரமே அதிர்ந்தது. தெருவெங்கும் சதைக் கோளங்களாக மனித உடல்கள் சிதறிக் கிடந்தன. வாகனங்கள் அப்பளமாக நொறுங்கிச் சிதறின. இதுவரை கண்டிராத மிகக் கொடிய பயங்கரவாதத் தாக்குதல் என்று அலறியது இந்திய அரசு. அமெரிக்காவில் செப்.11., 2001-இல் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு நடந்துள்ள மிகப்பெரிய தாக்குதல் இது தான் என்று பத்திரிகைகள் வர்ணித்தன.

கடந்த ஜூலை 7-ஆம் நாளன்று ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள இந்தியத் தூதரகத்தின் மீது தாலிபான் தற்கொலைப் படையினர் நடத்திய தாக்குதலில் 58 பேர் கொல்லப்பட்டு 170 பேர் படுகாயமடைந்துள்ளனர். முதன்மைச் செயலர் உள்ளிட்டு நான்கு இந்தியத் தூதரக உயரதிகாரிகளும், 6 ஆப்கான் போலீசு உயரதிகாரிகளும், இந்தியாவுக்கு வருவதற்காகக் கடவுச்சீட்டு பெற வரிசையில் காத்திருந்த ஆப்கானியர்களும் இக்கோரத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

இக்கொடிய பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியுள்ள தாலிபான் தீவிரவாதிகள், இதற்குமுன் 2005-ஆம் ஆண்டின் இறுதியில், ஆப்கானில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த இந்தியரான, கேரளத்தைச் சேர்ந்த ராமன்குட்டி மணியப்பன் என்பவரைக் கடத்திச் சென்று, கொடூரமான முறையில் கழுத்தை அறுத்துக் கொலை செய்தனர். அதன்பிறகு சில இந்தியப் பொறியாளர்களும் தொழிலாளிகளும் தாலிபான்களால் கடத்திச் செல்லப்பட்டு எச்சரித்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்தியர்கள் அனைவரும் ஆப்கானை விட்டு வெளியேற வேண்டும் என்று தாலிபான்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்தியத் தூதரகத்தின் மீதான தாலிபான்களின் தற்போதைய பயங்கரவாதத் தாக்குதலுக்கும் கட்டுமான வேலை செய்து வரும் இந்தியர்கள் மீதான தாக்குதலுக்கும் காரணம் என்ன?

இந்திய அரசு கூறுவது போல, போரினால் சிதிலமடைந்த ஆப்கானில் சீரமைப்பு-கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வரும் நட்பு நாட்டவர் மீதான தாலிபான்களின் இலக்கற்ற காட்டுமிராண்டித்தனமான வெறியாட்டமா, இது? இல்லை; இது, இந்திய அரசினது அமெரிக்கக் கைக்கூலித்தனத்தின் எதிர்விளைவு! அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் ஆப்கான் பொம்மையாட்சியை வெட்கமின்றி ஆதரிக்கும் பிற்போக்குத்தனத்திற்குத் தரப்படும் விலை! ஆப்கான் நாட்டுக்கும் மக்களுக்கும், குறிப்பாக தாலிபான்களுக்கும் எதிரான ஆத்திரமூட்டும் வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றி வரும் இந்திய அரசுதான் இத்தாக்குதல்களுக்குக் காரணம்.

உலக மேலாதிக்க-பயங்கரவாத அமெரிக்காவின் நல்லாசியைப் பெற்று, அதன் நம்பகமான கூட்டாளியாக மாறும் நோக்கத்துடன், இந்திய அரசு தொடர்ந்து அமெரிக்க மேலாதிக்க, ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு விசுவாச சேவை செய்து வருகிறது. அமெரிக்காவின் மேற்காசியப் பேட்டை ரவுடியான இஸ்ரேலுடன் இராணுவப்பயிற்சி உள்ளிட்டுப் பலவகையிலும் நெருக்கமான உறவை வைத்துக் கொண்டுள்ளது. ஆப்கான் மற்றும் ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அந்நாடுகளின் அமெரிக்க விசுவாச - துரோகக் கும்பல்களுக்கும் வெளிப்படையாகத் துணை போகும் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டு வருகிறது. அந்நாடுகளின் ஆக்கிரமிப்புப் போர்களில் இந்திய அரசு நேரடியாக இராணுவத்தை ஈடுபடுத்தாவிட்டாலும், மறைமுகமான வழிகளில் தொடர்ந்து உதவி வருகிறது.


ஆக்கிரமிப்புப் படைகளுக்குச் சமையல் பாத்திரங்கள் - கழிவறைகளைக் கழுவுதல், துணி துவைத்தல்- முடிவெட்டுதல், கண்ணி வெடிகள் அகற்றுவது முதல் சாலைகள் அமைத்தல், ஆயுதத் தளவாடங்கள்-இராணுவ வாகனங்களைப் பழுது பார்த்தல் வரை போரில் ஈடுபடுவதற்கான எல்லாத் தயாரிப்புகளையும் செய்து கொடுக்க இந்நாடுகளுக்கு இந்தியர்கள் அனுப்பப்படுகின்றனர். மறுசீரமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் என்ற பெயரில் இந்திய அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்நாடுகளில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்குச் சேவை செய்து வருகின்றன.

இத்தகைய மறுசீரமைப்புத் திட்டத்தில் ஒன்றாகத்தான், ஆப்கானிஸ்தானில் எல்லைப்புற சாலைகளை அமைக்கும் வேலையை இந்திய அரசு நிறுவனமான ''எல்லைப்புறச் சாலைகள் அமைப்பு நிறுவனம்'' செய்து வருகிறது. ''பாகிஸ்தானின் தரைவழியை மட்டுமே ஆப்கான் பெரிதும் சார்ந்துள்ள நிலையில், ஈரான் மற்றும் துருக்மேனிஸ்தான், தாஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய அண்டை நாடுகளுடன் ஆப்கானை இணைக்கும் வகையில் தற்போது நிறுவப்படும் சாலைகளானது அந்நாட்டு மக்களுக்குப் பெரிதும் உதவக் கூடியது'' என்று விளக்கமளிக்கிறது இந்திய அரசு. ஆனால், இது ஆப்கானிய மக்களின் தேவைக்கான கட்டுமானப் பணி அல்ல; உண்மையில், போர் முக்கியத்துவம் வாய்ந்த பணி. மத்திய ஆசியாவில் முகாமிட்டுள்ள அமெரிக்க-பிரிட்டிஷ் படைகள் ஆப்கான் வழியாக ஈரான் மீது போர்த் தாக்குதல் தொடுக்கவும், மத்திய கிழக்கு ஆசிய நாடுகளின் எண்ணெய் வயல்களைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தவும் அமெரிக்க மேலாதிக்கவாதிகளுக்கு பயன்படும் வகையில்தான் இச்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்குத் துணை போவதால் தான், ஆப்கானிலுள்ள தாலிபான், அல்-கொய்தா மற்றும் பிற இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகள் இந்தியா மீது வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ளன.


படிப்பகம்

www.padippakam.com

இக்கட்டுமானப் பணிகள் தவிர, இந்திய அரசு இரகசியம் இராணுவ ஆலோசகர்கள் மூலம் ஆப்கான் பொம்மை அரசின் படைகளுக்குப் பயிற்சி அளித்து வருவதாகவும், ஆப்கான் -பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் 4 இந்தியத் தூதரகக் கிளைகளை நிறுவி உளவு வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தாலிபான் இயக்கத்தின் முக்கியப் பிரமுகரான சபிஹுல்லா முஜாகத் குற்றம் சாட்டுகிறார். எனவே, "ஆப்கானில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுவரும் இந்தியர்கள் மீது தாலிபான்கள் தாக்குதல் தொடுப்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை" என்று அவர் கூறுகிறார்.



ஆப்கான் தலைநகர் காபூலில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நடந்த குண்டு வெடிப்பு: இந்தியாவின் அமெரிக்க ஆதரவுக் கொள்கையின் எதிர்விளைவு.

மறுபுறம், 2001-இல் ஆப்கான் ஆக்கிரமிக்கப்பட்டபோது 20,000 பேராக இருந்த ஏகாதிபத்திய நாடுகளின் துருப்புகள், இன்று 70,000 பேராக அதிகரித்துள்ளது. இது தவிர 3,000-க்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவம் ஆப்கானின் தென்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏழாண்டுகளில் தாலிபான், அல்-கொய்தா தீவிரவாதிகளை ஒழிப்பது என்ற பெயரில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் படைகள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்களில் ஏறத்தாழ 7,000 ஆப்கானியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானை மறுசீரமைப்பது என்ற பெயலில் ஏகாதிபத்திய நாடுகளும், உலக வங்கியும் அளிக்கும் கடனில் 40% தொகையானது ஏகாதிபத்திய கட்டுமான நிறுவனங்களுக்கு இலாபமாகவும் தொழில்நுட்ப ஆலோசனைக் கட்டணமாகவும் அந்நாடுகளாலே உறிஞ்சப்பட்டு விடுகிறது. எஞ்சிய தொகையில் பெரும்பகுதியானது ஆப்கானை ஆளும் பொம்மை அரசின் துரோகக் கும்பலால் விழுங்கி ஏப்பம் விடப்படுகிறது. கடன் சுமையோ ஆப்கான் நாட்டின் மீதும் மக்களின் மீதும் சுமத்தப்படுகிறது. வறுமையில் உழலும் ஆப்கானிய மக்கள் இவற்றைக் கண்டு ஆத்திரமடைந்து, புரட்சிகர ஜனநாயக சக்திகள் வலுவாக இல்லாத நிலையில் தாலிபான்களை ஆதரிக்கின்றனர்.

இதனைச் சாதகமாக்கிக் கொண்டு ஆப்கானின் மேற்கேயுள்ள கந்தகார் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் தாலிபான்கள் வலுவாக வேரூன்றியுள்ளதோடு, ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிரான தாக்குதல்களையும் தீவிரப்படுத்தி வருகின்றனர். கடந்த ஏப்ரலில் ஆப்கானின் பொம்மை அதிபர் கர்சாய் மீது தாலிபான்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். அவரது பாதுகாப்பு உள் வட்டத்துக்குள்ளேயே தாலிபான்கள் ஊடுருவி அவர்மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதைக் கண்டு ஆளும் துரோகக் கும்பல் பீதியில் உறைந்து போயுள்ளது.

அதைத் தொடர்ந்து கடந்த ஜூன் 13-ஆம் நாளன்று கந்தகார் நகரின் சார்கோசா சிறைச்சாலையை தாலிபான் தற்கொலைப் படையினர் தாக்கி, சிறையிடப்பட்ட தாலிபான் தீவிரவாதிகள் உள்ளிட்டு 1000-க்கும் மேற்பட்ட கைதிகளை விடுவித்து தப்பிச் சென்றனர். சிறைக் கைதிகளில் ஒரு சிலரை மட்டுமே பொம்மை அரசால் பிடிக்க முடிந்துள்ளது. தலைமறைவாகிவிட்ட அனைவரும் தாலிபான் படைகளில் சேர்ந்து விட்டதாகக் கூறப்படுகிறது. அதன் பிறகு அமெரிக்க இராணுவத்தினர் மீது தாலிபான்கள் கார் வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தி பெருத்த சேதத்தை விளைவித்தனர். இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல, கடந்த ஜூலை 7 -ஆம் நாளன்று இந்தியத் தூதரகத்தின் மீதான தாக்குதலை நடத்தியுள்ளனர். அண்மைக் காலமாக அடுத்தடுத்து நடக்கும் இத்தாக்குதல்களை அனைத்தும் தாலிபான்களின் கை ஓங்கி வருவதை நிரூபித்துக் காட்டுகின்றன.

தாலிபான்களை ஒடுக்க பிரான்ஸ், பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஆப்கானுக்குக் கூடுதல் படைகளை அனுப்பத் தீர்மானித்துள்ளன. ஆனால் ஐரோப்பிய நாடுகளில், ஆப்கானுக்குப் படைகளை அனுப்பி ஆக்கிரமிக்கக் கூடாது என்ற பொது மக்களின் கருத்தும் போராட்டங்களும் வலுக்கத் தொடங்கியுள்ளதால், 2010-ஆம் ஆண்டுக்குள் தமது படைகளை முற்றாக விலக்கிக் கொள்ள நெதர்லாந்து தீர்மானித்துள்ளது. ஜெர்மனியும் பிரான்சும் தாலிபான்களின் கை வலுவாக உள்ள தெற்கு-மேற்கு பகுதிகளுக்குத் தமது படைகளை அனுப்பப் போவதில்லை என்று அறிவித்துள்ளன. ஆனால், இந்திய அரசோ தனது கட்டுமானத் திட்டப் பணிகளுக்குப் பாதுகாப்பாக உள்ள 900-க்கும் மேற்பட்ட இந்திய-திபெத் எல்லைப் பாதுகாப்புப் படையினர் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

இவ்வாறு, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களையும் ஆப்கானின் ஆளும் துரோகக் கும்பலையும் ஆதரிப்பது-துணை போவது என்ற இந்திய அரசின் கேடான நடைமுறையால், தாலிபான்கள் ஆத்திரமடைந்து இந்தியர்களைத் தாக்குவது தொடரவே செய்யும். தனது ஏகாதிபத்திய கைக்கூலித்தனத்திற்காக இந்தியர்களைப் பலியிட்டுவரும் இந்தியப் பிற்போக்கு அரசுக்கு எதிராக, இந்தியாவிலும் கொந்தளிப்புகள் பெருகவே செய்யும். அனுதாபத்தின் மூலமோ, குறுகிய தேசியவெறியூட்டுவதன் மூலமோ இந்திய அரசு தனது குற்றங்களை மறைத்துவிட முடியாது.

● குமார்

படிப்பகம்

www.padippakam.com

# ஜெய்ப்பூர் தொடர் குண்டு வெடிப்புகள்:

# புலனாய்வுத் துறையின் காவி(லி)த்தனம்

**குண்டு வைத்த தீவிரவாதிகளைப் பிடித்துவிட்டோம் எனக் கணக்குக் காட்டுவதற்காகவே, அப்பாவி முசுலீம்கள் கைது செய்யப்பட்டனர்.**

இராசஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் கடந்த மே 13 அன்று நடந்த தொடர் குண்டு வெடிப்புகள் தொடர்பான விசாரணையானது, சி.பி.ஐ., ரா, ஐ.பி. உள்ளிட்ட அனைத்துப் புலனாய்வு அமைப்புகளும் காவிமயமாகியிருப்பதை மீண்டுமொருமுறை அம்பலப்படுத்திக் காட்டி விட்டன. இக்குண்டு வெடிப்புகள் நடந்த மறுநிமிடமே, பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர்-இ-தொய்பா, வங்காள தேசத்தைச் சேர்ந்த ஹர்கத்-அல்-ஜமாத்-இ-இஸ்லாம், இந்திய முஜாஹிதீன் உள்ளிட்ட சில முசுலீம் தீவிரவாத அமைப்புகள் மீது பழி போடப்பட்டது. குண்டு வைத்த சதிகாரர்கள் என விளம்பரப்படுத்தப்பட்டு, ஓரிரு முசுலீம்களின் உருவப் படங்கள் வெளியிடப்பட்டன. இராசஸ்தான் மாநில போலீசார் நடத்திய தேடுதல் வேட்டையில், 500 முசுலீம்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்நடவடிக்கைகளின் மூலம், குண்டு வெடிப்போடு தொடர்புடைய குற்றவாளிகளைக் கண்டுபிடித்தாகிவிட்டது; இனி வழக்கு நடத்தி, அவர்களுக்குத் தண்டனை அளிக்க வேண்டியது தான் பாக்கி என்கிற மாதிரியான பிம்பம் பொது மக்கள் மத்தியில் குறிப்பாக, இந்துக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டது. ஆனால், இவ்வழக்கு சம்பந்தமான புலனாய்வுகள் அனைத்தும் தோல்வியடைந்து விட்டன என்பதும்; போலீசார் தங்களின் தோல்வியை மறைத்துக் கொள்ளும் ஒரு தந்திரமாகவே, கைது எண்ணிக்கையைக் காட்டியுள்ளனர் என்பதும் தற்பொழுது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

இக்குண்டு வெடிப்பை நடத்திய சதிகாரர்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்ட உருவப்படங்கள் தற்பொழுது போலீசாராலேயே கைகழுவப்பட்டு விட்டன; ஜெய்ப்பூர் குண்டு வெடிப்பில் ஆர்.டி.எக்ஸ். வகை வெடி பொருட்கள் பயன்படுத்தப்பட்டதாக போலீசார் கூறியதை, அவர்களே இப்பொழுது மறுத்துள்ளனர். இக்குண்டு வெடிப்பு தொடர்பாக, விசாரணை என்ற பெயரில் சட்ட விரோதமாகக் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட 500 பேரில், 499 முசுலீம்கள் குற்றமற்றவர்கள் எனக் 'கண்டுபிடிக்கப்பட்டு' விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். முகம்மது இலியாஸ் காரி என்ற ஒருவர் மீது மட்டும்தான் இராசஸ்தான் போலீசார் வழக்குத் தொடர்ந்துள்ளனர். எனினும், அந்த வழக்கிற்கும், ஜெய்ப்பூர் குண்டு வெடிப்பிற்கும் நேரடித் தொடர்பு எதுவும் கிடையாது. கள்ள பாஸ்போர்ட் வைத்திருந்ததாக காரியின் மீது வழக்கு தொடர்ந்துள்ள போலீசார், அதற்கான ஆதாரங்களைக் கூட காட்ட மறுத்து வருகிறார்கள்.

கணக்கு காட்டுவதற்காகவே கைது செய்யப்பட்ட முகம்மது இலியாஸ் காரி (இடது) மற்றும் ரஷீத் ஹூசைன்.



**ஜெய்ப்பூர் நகரில் குடும்ப அட்டை இல்லாத முசுலீம்கள்; ரிக்சா இழுக்கும், குப்பை பொறுக்கும் முசுலீம்கள்; முசுலீம் மதகுருமார்கள் — இந்தப் பிரிவினரை குறிவைத்துதான் போலீசின் தேடுதல் வேட்டை நடந்தது.**

சிறப்புப் புலனாய்வுப் படை, முகம்மது காரியை மே 22-ஆம் தேதி பரத்பூர் எனும் ஊரில், அவரது வீட்டில் வைத்து கைது செய்தது; ஆனால், அவர் மீது பதியப்பட்டுள்ள வழக்கின் முதல் தகவல் அறிக்கையில், காரியை ஜெய்ப்பூரில் வைத்து ஜூன் 8-ஆம் தேதிதான் கைது செய்ததாக போலீசார் புளுகியுள்ளனர்; உள்ளூர் போலீசாருக்குக்கூடத் தெரியாமல், பரத்பூரிலிருந்து காரியைக் கைது செய்து கடத்திச் சென்ற சிறப்புப் புலனாய்வுப் படை, மூன்று நாட்கள் கழித்துதான் காரியை ஜெய்ப்பூரில் வைத்து விசாரிப்பதாக, அவரது உறவினர்களுக்குத் தகவல் அளித்திருக்கிறது. காரியோடு சேர்த்து, 15 வயது முசுலீம் சிறுவனையும் விசாரணைக்காக அழைத்துச் சென்றது சிறப்புப் புலனாய்வுப் படை.

ஜெய்ப்பூர் குண்டு வெடிப்பு தொடர்பாக, முகம்மது இலியாஸ் காரி உள்ளிட்ட 500 முசுலீம்களைக் கைது செய்து விசாரிக்க, மத்திய-மாநில போலீசார் முடியைப் பிய்த்துக் கொண்டோ, மூளையைக் கசக்கிக் கொண்டோ புலனாய்வு செய்யவில்லை. வங்கதேச அகதிகளைப் போலத் தெரியும் முசுலீம்கள் அல்லது குடும்ப அட்டை இல்லாத முசுலீம்கள்; ஜெய்ப்பூர் நகரில் ரிக்ஷா இழுக்கும் அல்லது குப்பை பொறுக்கும் முசுலீம்கள்; இந்திய முசுலீம் மாணவர் இயக்கம் தடை செய்யப்படுவதற்கு முன்பாக, அவ்வமைப்பில் செயல்பட்ட

படிப்பகம்

www.padippakam.com

முசுலீம்கள்; முசுலீம் மத குருமார்கள்; மதரசாக்களில் ஆசிரியர்களாக வேலை பார்க்கும் முசுலீம்கள் - இந்தப் பிரிவினரைக் குறிவைத்துதான் போலீசின் தேடுதல் வேட்டையே நடந்திருக்கிறது.

இராசஸ்தானின் மாதோபர் மாவட்டத்திலுள்ள உதய் கல்யாண் என்ற ஊரில் இருக்கும் மதரசாவில் ஆசிரியராக வேலை பார்த்து வரும் முகம்மது சஜித்துக்கும், போலீசார் வெளியிட்டிருந்த குண்டு வெடிப்பு குற்றவாளிகளின் உருவ அமைப்புக்கும் எவ்வித ஒற்றுமையும் கிடையாது; எனினும், முகம்மது சஜித், பொது மக்களின் எதிர்ப்பையும் மீறிச் சிறப்பு அதிரடிப் படையால் கைது செய்யப்பட்டார். முகம்மது சஜித், இந்திய முசுலீம் மாணவர் இயக்கம் தடை செய்யப்படுவதற்கு முன்பாக, அவ்வியக்கத்தின் மாநிலத் தலைவராகச் செயல்பட்டு வந்தார் என்பதுதான் போலீசாரின் சந்தேகத்துக்குப் பின்னிருந்த ஒரே காரணம்.

மின்னணுப் பொறியாளரான ரஷீத் ஹுசைன் பன்னாட்டு நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தாலும், அவர் பெங்களூருவில் படிக்கும் பொழுது, இந்திய முசுலீம் மாணவர் இயக்கத்தின் தொடர்பில் இருந்தார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார். ஹருண் ரஷீத், இப்திகார் அகமது, முகம்மது ஆஸம் உள்ளிட்ட பலரும் முசுலீம் என்ற ஒரே காரணத்திற்காகவே, மதவாத கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டு, சட்ட விரோதக் காவலில் வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்டவர்களின் இழப்பும், துக்கமும் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதனைப் போன்றே, போலீசாரால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட இந்த 500 முசுலீம்களின் இழப்பையும் துக்கத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

• அன்பு

# வென்றது மாணவர் போராட்டம்! வீழ்ந்தது கல்லூரி முதல்வர் கொட்டம்!

கடலூரில், பெண்களுக்காக இயங்கும் ஒரே கல்லூரியாக, பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி உள்ளது. தொன்மை வாய்ந்த இக்கல்லூரியில் தொடக்கத்தில் 400-500 பேராக இருந்த மாணவிகளின் எண்ணிக்கை, தற்போது 2000 பேராக உயர்ந்துள்ளது. இதற்கேற்ப இக்கல்லூரியில் அடிப்படை வசதி மற்றும் போதிய அளவுக்குப் பேராசிரியர்கள் - விரிவுரையாளர்கள் இல்லை. இதுபற்றி மாணவிகளும், ஆசிரியர்களும் கல்லூரி முதல்வரிடம் பலமுறை முறையிட்டு, கடந்த நான்கைந்து ஆண்டுகளாக அவ்வப்போது போராடியும் கல்லூரி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும், இக்கல்லூரியில் சேரும் மாணவிகளிடம் கட்டாய நன்கொடை பெறுவதோடு, மேசை-நாற்காலி என அன்பளிப்புகளைத் தரச் சொல்லி கல்லூரி முதல்வர் வள்ளி கொட்டமடித்து வந்தார். சாதியத் திமிர் பிடித்த இவர், தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட மாணவிகளை இழிவுபடுத்துவதோடு, தன்னை செட்டிநாட்டு ஜமீன் பரம்பரை என்றும், 'அண்ணன்' மு.க. அழகிரிக்கு நெருக்கமானவர் என்றும், தன்னை ஆட்டவோ அசைக்கவோ முடியாது என்றும் கொக்கரித்துக் கொண்டிருந்தார்.

இந்நிலையில், இவ்வாண்டு மாணவர் சேர்க்கையின் போதும் முதல்வர் வள்ளி தனது அடாவடி வசூல் வேட்டையைத் தொடங்கியதும், இவரைப் பணிநீக்கம் செய்யக் கோரியும், அடிப்படை வசதி மற்றும் பேராசிரியர்களை நியமிக்கக் கோரியும் மாணவிகளும் சில பேராசிரியர்களும் போராட முனைந்தனர். இதைக் கண்டு ஆத்திரமடைந்த முதல்வர் வள்ளி, தி.மு.க. எம்.எல்.ஏ.வான ஐயப்பன் மற்றும் அடியாட்களைக் கொண்டு மிரட்டிப் போராட்டத்தை ஒடுக்க முயன்றார்.

இவற்றையெல்லாம் துச்சமாக மதித்து கடந்த ஜூலை 1-ஆம் தேதி முதல் மாணவிகளும் ஆசிரியைகளும் உள்ளிருப்புப் போராட்டம், உண்ணாவிரதம், தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் என போராட்டத்தைத் தொடர்ந்தனர். இப்போராட்டத்துக்கு ஆதரவாகத் துணைநின்ற புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, இந்நியாயமான போராட்டத்தை மக்களிடம் விளக்கிப் பிரச்சாரம் செய்ததோடு, முதல்வர் வள்ளியின் அடாவடித்தனங்களை அம்பலப்படுத்தி சுவரொட்டி பிரச்சார இயக்கத்தையும் மேற்கொண்டது. போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு முன்னெடுத்துச் செல்ல, போராடும் மாணவிகளுக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் அளித்து ஊக்கப்படுத்தியது.

பு.மா.இ.மு.வின் வழிகாட்டுதலின்படி, கடந்த 14.7.08 அன்று 500-க்கும் மேற்பட்ட மாணவிகள் அணிதிரண்டு கடலூர்-விழுப்புரம் நெடுஞ்சாலையில் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் இறங்கினர். மாணவிகளின் போர்க்குணமிக்க இப்போராட்டத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு பொதுமக்கள் பெருந்திரளாகக் குழுமினர். அரண்டு போன போலீசும் கல்லூரி நிர்வாகமும் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுவதாக வாக்களித்து, முதல்வர் வள்ளிக்கு இரண்டு மாத காலத்துக்குக் கட்டாய விடுப்பு அளித்து வீட்டுக்கு அனுப்பியுள்ளது.



ஐக்கியப்பட்ட, போர்க்குணமிக்கப் போராட்டத்தால் மட்டுமே கல்விக் கொள்ளையர்களின் கொட்டத்தை ஒடுக்க முடியும் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்துள்ள மாணவிகள், இம்முதற்கட்ட வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள, அடுத்த கட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

— புரட்சிகர மாணவர்-
இளைஞர் முன்னணி,
கடலூர்.

www.padippakam.com

# நேபாளம்:

# எதிர்ப்புரட்சி துரோகிகளின் இடைக்கால வெற்றி!

நேபாள அரசியலில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. நேபாள மாவோயிசக் கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிராக அந்நாட்டு நேபாளி காங்கிரசு, நேபாள ஐக்கியக் கம்யூனிச (மார்க்சிய-லெனினிய) கட்சி மற்றும் நேபாளத்தில் உள்ள தேசிய சிறுபான்மை இனமான மாதேசி மக்களதிகார அரங்கம் ஆகிய பிற்போக்கு, சமரச, இனவாதக் கட்சிகள் ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைத்துக் கொண்டு, குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் அரசியல் நிர்ணய சபைத் தலைவர் ஆகிய பதவிகளைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டன.

இச்சம்பவங்களை யாரும் எதிர்பாராத திடீர் திருப்பம் என்றோ, முன்னேறி வந்த நேபாளப் புரட்சிக்கு மிகப் பெரிய தோல்வி என்றோ கருத முடியாது. நேபாளப் புரட்சியின் நீண்ட பாதையில் செயல்தந்திர ரீதியிலான ஒரு பின்னடைவு என்று சொல்லலாம். புரட்சி என்பதே சமநீர்ப் பயணமோ, நெளிவு சுழிவுகளற்ற நேர்கோட்டுப் பாதையில் முன்னேறக் கூடியதோ அல்ல. கடந்த ஏப்ரல் மாதம் நடந்த நேபாள அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்களில் தனிப் பெரும்பான்மைக் கட்சியாக நேபாள மாவோயிசக் கம்யூனிஸ்டுக் கட்சி வெற்றி பெற்றவுடன், ''உள்ளேயும் வெளியேயும் இருந்து வரும் மேலும் பல சவால்களை எதிர் கொண்டு முறியடித்து நேபாளப் புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுக்க வேண்டியுள்ளது'' என்று எழுதினோம். நேபாளப் புரட்சிக்கு எதிராக இப்போது உள்ளேயிருந்து எழுந்துள்ள அரசியல் சவால்தான் இந்தப் பிற்போக்கு, சமரச மற்றும் இனவாதக் கட்சிகளின் சந்தர்ப்பவாதக் கூட்டணியும், அது அடைந்துள்ள அரசியல் வெற்றியும் ஆகும்.

கடந்த ஏப்ரலில் நடந்த அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்களில் தொகுதிவாரிப் பிரதிநிதி முறையில் அறுதிப் பெரும்பான்மை இடங்களைப் பெற்ற நேபாள மாவோயிசக் கம்யூனிசக் கட்சி, வாக்குகளின் விகிதாச்சார அடிப்படையிலான பிரதிநதிகள் நியமனத்துக்குப் பிறகு, அரசியல் நிர்ணய சபையில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை; என்றபோதும் மொத்தம் 601 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. இந்த உரிமையில், தனது கட்சியின் பிரதிநிதியைப் பிரதமராகக் கொண்ட அரசாங்கம் அமைக்கவும், மலை மக்கள், சமவெளி மக்கள், பழங்குடி மக்கள் மற்றும் பெண்கள் ஆகிய நான்கு பிரிவினரிடையே குடியரசுத் தலைவர், துணைத்தலைவர், பிரதமர் மற்றும் அரசியல் நிர்ணய சபைத் தலைவர் ஆகிய நான்கு உயர்நிலை அரசியல் சட்ட அமைப்புப் பதவிகளைப் பகிர்ந்து கொள்ளவுமான திட்டத்தை நேபாள மாவோயிசக் கம்யூனிசக் கட்சி முன்மொழிந்தது.

அக்கட்சியின் நியாயமான, ஜனநாயகப்பூர்வமான இம்முன்மொழிவை பிற அரசியல் கட்சிகள் ஏற்க மறுத்து, நேபாள அரசியலில் ஒரு தேக்க நிலையை ஏற்படுத்தின. மன்னரின் பாசிச சர்வாதிகாரத்தின் கீழும், பின்னர் இடைக்கால அரசிலுமாக நீண்டகாலம் பிரதமர் பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தவருமான கிரிஜா பிரசாத் கொய்ராலா என்ற ஆதிக்க சாதிக்காரன் மற்றும் கடைந்தெடுத்த மூத்த திருத்தல் வாதியான நேபாள ஐக்கிய மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சித்தலைவரான மாதவ் குமார் நேபாள் ஆகிய இருவரைத் தவிர, யாரை வேண்டுமானாலும் குடியரசுத் தலைவராக ஏற்கத் தயார் என்று நேபாள மாவோயிசக் கம்யூனிசக் கட்சி



நேபாள அதிபர் தேர்தலில் மாவோயிசக் கட்சியின் சார்பாகப் போட்டியிட்ட ராம்ராஜ் பிரசாத் சிங்.

முன் வந்தது. அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்களில் படுதோல்வி அடையச் செய்து மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் பழம் பெருச்சாளிகளுமான இவ்விருவரில் யாரையாவது குடியரசுத் தலைவராக்க வேண்டும் என்பதில் நேபாளி காங்கிரசு மற்றும் ஐக்கிய மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரண்டும் பிடிவாதமாக இருந்தன.

அரசியல் எதிரிகள் ஏற்படுத்தியிருக்கும் தேக்க நிலையை உடைப்பதற்காக, மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தான்

www.padippakam.com

ஏற்கெனவே முன்மொழிந்தபடி, பெண் பிரதிநிதியாகிய சாந்தா சிரேஸ்தாவை குடியரசுத் துணைத் தலைவர் மற்றும் ராமராஜ் பிரசாத் சிங்கைக் குடியரசுத் தலைவர் வேட்பாளர்களாக அறிவித்தது. அவசரமாகவும் சதித்தனமாகவும் கூட்டுச் சேர்ந்த நேபாளி காங்கிரசு, மாதேசி மக்களதிகார அரங்கம், ஐக்கிய மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் ஆகிய கட்சிகள் முறையே ராம் பரன் யாதவ் என்பவரை குடியரசுத் தலைவராகவும், பரமானந்த் ஜா என்பவரைத் துணைத் தலைவராகவும், சுபாஷ் நேம்வாங் என்பவரை அரசியல் நிர்ணய சபைத் தலைவராகவும் போட்டியிடச் செய்து,அப்பதவிகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன.

குடியரசுத் தலைவருக்கான தேர்தலின் முதல் சுற்றை நேபாள முன்னாள் மன்னரின் விசுவாச ராஷ்ட்ரிய பிரஜ தந்திரா கட்சி, கூட்டாட்சிக்கு எதிரான ராஷ்ட்ரிய மக்கள் முன்னணி மற்றும் இன்னொரு போலி கம்யூனிஸ்ட் ஐக்கியக் கட்சி ஆகியன புறக்கணித்தன. இதனால் குடியரசுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான குறைந்த பட்ச வாக்குகளை முதல் சுற்றில் யாரும் பெற முடியவில்லை. இரண்டாவது சுற்றில் மன்னராட்சியின் விசுவாசக் கட்சி ஆதரவோடு நேபாளி காங்கிரசின் ராம் பரன் யாதவ் குடியரசுத் தலைவரானார்.

அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்களில் நேபாள மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைத் தனிப் பெரும்பான்மைக் கட்சியாகத் தேர்ந்தெடுத்து, அக்கட்சியே நேபாளத்தை ஆளவேண்டும் என்ற நேபாள மக்களின் எண்ணத்தை சதித்தனமான-சந்தர்ப்பவாதக் கூட்டமைத்து முறியடித்து, நேபாளப் புரட்சியைப் பின்னுக்கு இழுப்பதில் வெற்றி கண்ட பிற்போக்கு, சமரச, இனவாதக் கட்சிகள், மாவோயிசக் கட்சியின் தலைவரான பிரசந்தாவைப் பிரதமர் பதவியேற்கும்படி கோருகின்றனர். பிரசந்தாவைப் பிரதமராக்வும் வேறு சில மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரை அமைச்சர்களாகவும் சேர்த்துக் கொள்வதன் மூலம் நேபாள மக்கள் ஆதரவைப் பெற்று தங்கள் விருப்பம்போல ஆட்சி நடத்த முடியும் என்று ஏற்கெனவே சந்தர்ப்பவாதக் கூட்டு அமைத்து அரசியல் சட்டப் பதவிகளைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்ற பிற்போக்கு, சமரச, இனவாத கட்சிகள் எத்தணிக்கின்றன.

எனவே, பிரதமர் பதவியேற்க மறுத்த பிரசந்தா நேபாள அரசில் பங்கேற்பதற்கு மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளார். தாங்கள் அரசமைத்தால் புதிய அரசியல் நிர்ணய சட்டம் வகுக்கப்படும் வரை இரண்டாண்டுகளுக்கு தாம் ஆட்சி பொறுப்பு வகிக்கும்படி அனுமதிக்கப்பட வேண்டும்; நேபாளி காங்கிரசு, ஐக்கிய மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மாதேசி மக்களதிகார அரங்கம் ஆகியவற்றின் முக்கூட்டு கலைக்கப்படவேண்டும்; தங்கள் கட்சி தேர்தல் அறிக்கையில் அளித்துள்ள வாக்குறுதிகள் அரசின் குறைந்த பட்ச பொதுத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். இம்மூன்று நிபந்தனைகளும் நிறைவேற்றப்படாத நிலையில் தாம் ஆட்சியில் சேரப் போவதில்லை என்றும் எதிர்க்கட்சியாகவே செயல்படப் போவதாகவும் நேபாள மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

**நேபாள மாவோயிசக் கம்யூனிஸ்டு கட்சி புரட்சிகர பணிகளை ஆற்றியிராவிட்டால் நேபாளத்தில் பாசிச மன்னராட்சி வீழ்த்தப்பட்டிருக்காது.**

200 ஆண்டுகளுக்கு மேலாக நேபாளத்தில் நீடித்திருந்த பாசிச மன்னராட்சிக்கு முடிவு கட்டவேண்டுமென்று நேபாளி காங்கிரசோ, ஐக்கிய மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ, தேசிய சிறுபான்மை இன உரிமைக்கான மாதேசி இனவாத அமைப்புகளோ ஒருபோதும் உறுதியாகப் போராடியதே இல்லை. குறிப்பாக, ஏதாவது ஒரு வகையில் பாசிச மன்னராட்சியைத் தக்க வைத்துக் கொள்ளவும், இந்தியா மற்றும் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு ஆதரவாகவும் நேபாளி காங்கிரசு செயல்பட்டு வந்திருக்கிறது. நேபாள மன்னர் வீசியெறிந்த எலும்பு துண்டுகளைக் கவ்விக் கொண்டு, அது ஏற்படுத்திக் கொடுத்த போலியான ஜனநாயக அமைப்புகளை ஏற்று, பாசிச மன்னராட்சி நீடிப்பதற்காக மக்களிடையே நியாயவாதங்கள் புரிந்து வந்தது. போலிகளான ஐக்கிய மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ பாசிச மன்னராட்சி நீடித்திருக்கும் வகையிலான சட்டபூர்வ, சமரசப் பாதையில் அழுந்திக் கொண்டிருந்தது. இந்திய விரிவாக்க-ஆதிக்க சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து, பாசிச மன்னராட்சிக்கு எதிரான நேபாள மக்களின் ஜனநாயகப் புரட்சியைச் சீர்குலைப்பதில் மாதேசி இனவாதக் குழுக்கள் ஈடுபட்டிருந்தன.

இத்தகைய துரோகத்துக்கும் சமரசத்துக்கும் மாறாகவும், எதிராகவும் பாசிச மன்னராட்சியையும், அதன் இராணுவத்தையும்

**நேபாள அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற ராம் பரண் யாதவை (நடுவில்) வாழ்த்தும் மாவோயிசக் கட்சியின் தலைவர்கள் பிரசந்தா (வலது) மற்றும் பாபுராம் பட்டாராய்.**



எதிர்த்துப் பத்தாண்டுகளுக்கு மேலாக வீரமிகு மக்கள் போரை நடத்தி, பல ஆயிரம் புரட்சியாளர்களை தியாகம் செய்து, இறுதியில் மன்னராட்சியைத் தூக்கியெறிவதற்கான மாபெரும் மக்கள் பேரெழுச்சிக்குத் தலைமையேற்றது, நேபாள மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிதான். பாசிச மன்னராட்சிக்கு எதிரான ஐக்கிய முன்னணி நீடித் திருப்பதற்காகப் பதவிகளை விட்டுக் கொடுத்தும், மன்னராட்சியின் வீழ்ச்சியை உறுதிப்படுத்தவும் தேசிய சிறுபான்மை இனத்தின் உரிமையை நிலைநாட்டவும் வேண்டி இடைக்கால அரசாங்கப் பதவிகளைத் துறந்து, அரசியல் நிர்ணயச் சபைத் தேர்தல்களுக்கு முன்பாகவே நேபாளத்தை மக்கள் ஜனநாயகக் குடியரசுக் கூட்டமைப்பாகப் பிரகடனப்படுத்தவும் போராடி வெற்றி பெற்றது. நேபாள ஜனநாயகப் புரட்சியையும் அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்களையும் சீர்குலைப்பதற்காக இந்திய மற்றும் ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் சதிகளும் நாசவேலைகளும் படுகொலைகளும் புரிந்தபோதும், இத்தகைய அரசியல் சவால்களை வீரதீரத்துடனும் விவேகமாகவும் எதிர்கொண்டு முறியடித்தது.

நேபாள மாவோயிசக் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கண்ட புரட்சிகர பணிகளை ஆற்றியிராவிட்டால், நேபாளத்தில் பாசிச மன்னராட்சி வீழ்த்தப்பட்டிருக்காது; மக்கள் ஜனநாயக உரிமைகளையும் தேசிய சிறுபான்மை இனத்தவர்களும், பழங்குடிகளும் சமத்துவ உரிமைகளையும் பெற்றிருக்க முடியாது.

ஆனால், இவற்றையெல்லாம் மூடி மறைத்துவிட்டு, பிற்போக்கு, சமரச, இனவாத சக்திகள், நேபாள மாவோயிசக் கம்யூனிசக் கட்சியைத் தனிமைப் படுத்தி, புரட்சியைப் பின்னுக்கிழுத்து, மாபெரும் பேரெழுச்சி மற்றும் அரசியல் நிர்ணயசபைத் தேர்தல்கள் மூலம் நேபாள மக்கள் நிலைநாட்டியுள்ள முடிவுகளை தலைகீழாகப் புரட்டிப் போட எத்தணிக்கின்றன. இவர்களின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை வீரமிக்க நேபாள மக்கள் மறக்கவோ, மன்னிக்கவோ மாட்டார்கள். சமீபகால வரலாற்றில் நிரூபித்ததைப் போலவே, நேபாள மாவோயிச கம்யூனிசக் கட்சியின் தலைமையில் அணிதிரண்டு இந்த எதிர்ப்புரட்சி சதிகாரர்களை வரலாற்றின் குப்பைத் தொட்டியில் வீசி எறிவார்கள்; முழுமையான மக்கள் ஜனநாயகக் குடியரசை நிறுவுவார்கள்.

● ஆர்.கே.

# சட்டபூர்வமாகி வரும் கட்டணக் கொள்ளை

உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, ''இந்த ஆண்டு முதல் தனியார் பொறியியல் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டுக்கான கட்டணம் ரூ.32,500-இல் இருந்து ரூ. 62,500-ஆக உயர்த்தப்பட்டுள்ளது'' என்று கடந்த ஜூன் 6-ஆம் தேதி அறிவித்தார்.

கல்வி வியாபாரிகளோ இந்தக் கட்டண உயர்வு தாங்கள் எதிர்பார்த்ததை விட 25,000 ரூபாய் குறைவானது என்று ஒப்பாரி வைக்கின்றனர். கட்டண உயர்வு குறித்து ஆராய தமிழக அரசால் நியமிக்கப்பட்ட பாலசுப்பிரமணியன் கமிட்டி, கட்டணத்தை உயர்த்துவது குறித்து கல்வியாளர்களிடமும், பொதுமக்களிடமும் கருத்துக் கேட்டு, அதன்படி நடந்ததாகக் கூறுகிறார் பொன்முடி. இந்தக் கமிட்டியிடம் எந்தப் பொதுமக்கள், கல்வியாளர்கள் கட்டணத்தை உயர்த்தக் கோரினார்கள் என்பது இதுவரை தெரியவில்லை.

கடந்த ஆண்டு நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் ரூ.32,500 கட்டணமாகப் பெற்று பெற்று கல்வி வியாபாரிகள் சம்பாதித்தது மட்டும் 180 கோடி ரூபாய் என்கிறார்கள். இது வெறுமனே கணக்குக் காட்ட மட்டுமே. ஆனால் உண்மையில் ஒரு சீட்டிற்கு ரூ. 2.5 லட்சம் முதல் 10 லட்சம் வரை கட்டாய நன்கொடையாகவும், ஆண்டுக்கு ஒரு லட்சம் வரை கல்விக் கட்டணமாகவும் வசூலிக்கிறார்கள்.

கல்லூரிகள் அதிகக் கட்டணம் வசூலிப்பதாகக் கூட்டணிக் கட்சிகள் தொடர்ந்து கூச்சலிடவே, சென்ற ஆண்டு 18 கல்லூரிகளிலும் அதன் நிர்வாகிகளின் வீட்டிலும் அதிரடி சோதனை நடத்தியது தமிழக அரசு. தனது வீட்டில் சோதனை நடத்திய அதிகாரிகளிடம், ''என்ன, இப்போது வந்திருக்கிறீர்கள், அட்மிசன் டயத்தில் வந்திருந்தால் இன்னும் அதிகமாகக் கிடைத்திருக்குமே!'' என்று ஜேப்பியார் நக்கலாகக் கூறினாராம். அந்தச் சோதனைக்குப் பின்னர் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

பொறியியல் கல்லூரி கட்டண உயர்வு குறித்து அறிவிப்பு வந்தவுடன் டாக்டர் ராமதாஸ் ''இந்த அநியாயத்தைக் கண்டித்துப் போராட்டங்களை நடத்துவோம். சுயநிதிக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்த வேண்டும்'' என்று பொன்முடிக்கு எதிராக அறிக்கைப் போரைத் தொடங்கினார்.


ஆனால், ராமதாசின் கட்சித் தலைவர் கோ.க.மணிதான், கட்டணத்தை நிர்ணயிப்பது பற்றி மார்ச் மாதம் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு கையெழுத்தும் போட்டவர். இதைக் குறிப்பிட்ட கருணாநிதி, ''இக்கட்டண உயர்வானது, பொறியியல் கல்லூரிகளில் சட்டவிரோதமாக வசூலித்துவரும் நன்கொடையைக் கட்டுப்படுத்தவே கொண்டு வரப்பட்டது'' என்று நியாயப்படுத்தினார்.

காங்கிரசுக் கட்சிக்கு சென்ற மாதம் வரை தலைவராக இருந்த ராமதாசின் சம்பந்தி கிருஷ்ணசாமி, ''காமராஜர் இருந்திருந்தால் கல்விக் கட்டண உயர்வுக்காகக் கண்ணீர் வடித்திருப்பார்'' என்று அறிக்கை விட்டார். ஆனால் அதே காங்கிரசைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் சுதர்சனம் தான் அனைத்துக்

**திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்தும், கட்டணம் கட்ட முடியாமல் தவிக்கும் பாலசுப்பிரமணியன், தீப்பெட்டி ஒட்டும் வேலைக்கு மீண்டும் சென்றுவிட்டார்.**



www.padippakam.com



சென்னை - மாநிலக் கல்லூரி பல்கலைக்கழகமாக மாற்றப்படவுள்ளதைக் கண்டித்து மாணவர்கள் நடத்திய போராட்டத்தைப் புகைப்படம் கூட எடுக்கக் கூடாது என ஒரு பெண் நிருபரை போலீசு அதிகாரி மிரட்டுகிறார்.

கட்சிக் கூட்டத்தில் கட்டண உயர்வுக்காகக் குரல் கொடுத்தவர். ஏனென்றால், சுதர்சனம் பல பொறியியல் கல்லூரிகளுக்கு அதிபர்.

சி.பி.எம்.மின் இந்திய மாணவர் சங்கப் பொதுச் செயலாளர் செல்வா, ''கட்டணத்தை உயர்த்துவதற்கு முன்பு கல்லூரிகளை மூன்று வகையாக இனம் பிரித்துக் கட்டணத்தை அறிவிக்கலாம்'' என்றார். உயர்கல்வி விற்பனைச் சரக்காக ஆக்கப்பட்டுள்ளதை எதிர்த்துப் போராடாமல், வகை பிரித்து வசூலிக்கக் கோருகிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள். இக்கட்சியின் இளைஞர் அமைப்பின் ''டைபி இளைஞர் முழக்கம்'' பத்திரிகைக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு விளம்பரம் தரும் சுயநிதிக் கல்லூரிகளின் முதலாளிகளுக்கு எதிராகவா, இவர்கள் போராடப் போகிறார்கள்?

சி.பி.ஐ.யின் சென்னை மாவட்ட செயலாளர் வீரபாண்டியன், ''ஏழை மாணவர்களைப் பாதிக்கும் வகையில் கட்டணம் உயர்த்தப்பட்டால் போராட்டத்தில் இறங்குவோம்'' என்கிறார். யாருக்கு எதிராக? சி.பி.ஐ. அலுவலகத்துக்குக் கணிப்பொறிகளை அன்பளிப்பாகத் தந்த 'கல்வி வள்ளல்' ஜேப்பியாருக்கு எதிராகவா?

இந்தக் கட்டண உயர்வால் மாணவர்களில் 70 சதவீதம் பேர் கடனாளி ஆவார்கள். கந்துவட்டிக் கடன், விவசாயக் கடன் போல ஏழைகளுக்கு வங்கிகள் தரும் கல்விக்கடனால் அல்லல் படுவார்கள் என்று ராமதாசு சொல்வது உண்மைதான். ஆனால் அவர் யாரை எதிர்த்துப் போராடுவாராம்? தனது மாநாடுகளுக்கு இலவச வாகன வசதி செய்து தரும் ''தருமபிரபு'' ஜேப்பியாரை எதிர்த்தா?

அரசு, கல்வி முதலாளிகளுக்கு மேலும் ஒரு சலுகையாக பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களில் 5-ஐ அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும் குறைத்துள்ளது. எதற்காகவாம்? நிறைய மாணவர்கள் பொறியாளர்களாகிட வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்கா? இல்லை; சென்ற ஆண்டு 14 ஆயிரம் சீட்டுகள் விற்பனையாகாமல் தொழில் நட்டமாகி விட்டதாகக் கல்வித் தந்தைகளின் அழு குரல் கேட்டுத்தான் பொன்முடி இவ்வாறு அறிவித்தார்.

தனியார் பொறியியல் கல்லூரிகள், இலட்சக்கணக்கில் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு தரமான கல்வியைத் தருவதும் இல்லை. பல கல்லூரிகளில் ஆய்வகங்களோ, நூலகங்களோ கிடையாது. தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள் கிடையாது. இக்கல்லூரிகளில் படித்து முடித்து விட்டு வெளியே வரும் மாணவர்களில் 30 சதவீதம் பேருக்கு மட்டுமே பொறியியல் திறன் உள்ளதாகக் கூறுகிறார், தனியார் வேலை வாய்ப்பகமான ''மா∴பா''வின் தலைவர் பாண்டியராஜன்.

இதுவொருபுறமிருக்க, தமிழக மாணவர்களின் தலையில் இடியை இறக்கியதைப் போல, சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரி உள்ளிட்ட சில அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களாக ஆக்கப் போவதாக

**அமெரிக்காவில்கூட கல்வித்துறையில் 22 சதவீதம்தான் தனியார்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். தமிழகத்திலோ இது 96 சதவீதம்.**

www.padippakam.com



உசிலம்பட்டி, கமுதி உட்பட பல ஊர்களில் அங்கீகாரம் பெறாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நடத்திய பி.டி.குமாரைக் கைது செய்யக் கோரி, பி.டி. குமாரால் ஏமாற்றப்பட்ட மாணவர்கள் சென்னையில் நடத்திய முற்றுகை போராட்டம். அம்மோசடிப் பேர்வழியைக் கைது செய்யத் துப்பில்லாத போலீசார், பாதிக்கப்பட்ட மாணவர்களைக் கைது செய்தனர்.

அறிவித்திருக்கிறது, தமிழக அரசு. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அரசு கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களுடன் இணைத்ததை மாணவர்களுடன் சேர்ந்து கண்டித்துக் குரல் கொடுத்தவர் மு.க. என்பது நம் நினைவில் ஆடி விட்டுப் போகிறது. அரசு கல்லூரிகள் பல்கலைக்கழகங்களாக ஆக்கப்படும் பொழுது, அதன் தரம் உயருகிறதோ இல்லையோ, நிச்சயம் கல்விக் கட்டணம் உயர்ந்து விடும் வாய்ப்பு உள்ளது.

மேல் மருவத்தூர் அம்மா, எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகம் நடத்தும் நீதிக்கட்சியின் தலைவர் ஏ.சி.சண்முகம், சவீதா பல்கலைக்கழகம் உள்ளிட்ட சில தனியாருக்கு இந்தக் கல்வியாண்டில் தமிழகத்தில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கிக் கொள்ள மைய அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது; மைய அமைச்சர் ரகுபதி, எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் உள்ளிட்ட சில கல்வி முதலாளிகள் மருத்துவக் கல்லூரி அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கிராமப்புற மருத்துவ சேவை கட்டாயமாக்கப்படுவதை எதிர்த்துப் போராட்டம் நடத்திய தமிழக மருத்துவக் கல்லூரி மாணவர்கள், மருத்துவக் கல்வியில் தனியார் புற்றீசல் போல நுழைந்திருப்பதைக் கண்டு கோபம் கொள்ளவில்லை. இந்த மௌனத்தைக் கோழைத்தனம் என்பதா, இல்லை காரியவாதம் என்பதா?

முதலாளித்துவம் உச்சத்தில் இருக்கும் அமெரிக்காவில் கூட கல்வியில் 22 சதவீதம்தான் தனியார்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் உயர் கல்வியில் 96 சதவீதம் தனியாருக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

தமிழக மக்களைக் கொள்ளையடிப்பதற்காகவே கல்லூரிகளைத் திறந்து நடத்தி வரும் தனியார் முதலாளிகளின் ஆதிக்கம், ஆரம்பக் கல்வி தொடங்கி உயர்கல்வி வரை அனைத்து நிலைகளிலும் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இல்லையென்றால், ஏழைகளுக்கு உயர்கல்வி மட்டுமல்ல, பள்ளிக்கல்விகூட எட்டாக் கனியாகிவிடும்.

• அழகு

# தோழர் ராஜேந்திரன் அவர்களுக்குச் சிவப்பஞ்சலி!

புரட்சிகர இயக்கத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு, புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியில் ஊக்கமுடன் செயல்பட்டு பகுதிப் பொறுப்பாளராகத் தன்னை உயர்த்திக்கொண்ட தோழர் ராஜேந்திரன், சிறுநீரகக் கோளாறினால் சிகிச்சை பலனின்றி கடந்த 19.07.08 அன்று தனது 25-வது வயதிலேயே மரணமடைந்து விட்டார்.

இந்துவெறி பாசிச பயங்கரவாதமும் அரசு பயங்கரவாதமும் கவ்வியுள்ள கோவை நகரில், போலீசு மற்றும் இந்து வெறி குண்டர்களின் அச்சுறுத்தல் - அட்டூழியங்களுக்கு நடுவே, கடந்த மூன்றாண்டுகளாகப் புரட்சிகர அரசியலை மக்களிடம் பிரச்சாரம் செய்து அமைப்பாக்குவதில் முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்தான் தோழர் ராஜேந்திரன். பஞ்சாலைத் தொழிலாளியான அவர், வேலைநேரம் போக நாள் முழுவதும் பிரச்சார-அமைப்பு வேலைகளை உற்சாகத்துடனும் உறுதியுடனும் செய்து வந்தார். சிறுநீரகக் கோளாறையொட்டி ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு அறுவை சிகிச்சை செய்து கொண்டு, மருத்துவர் ஆலோசனைப்படி ஓய்வில் இருந்த போதிலும், நோயின் வேதனை வெளியே தெரியாமல் இன்முகத்துடன், தன்னைச் சந்திக்க வருவோரிடம் தொடர்ந்து அரசியல் பிரச்சாரம் செய்து வந்தார். உடல்நிலை சரியில்லாத நிலையிலும் புரட்சியின் மீது அவர் கொண்ட மாளாக் காதல் சற்றும் குறையவில்லை. சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு நினைவிழக்கும் வரை அவரது உதடுகள் இயக்க வேலைகளைப் பற்றியும், "தோழர், தோழர்" என்றும் உச்சரித்துக் கொண்டேயிருந்தன.



நோய் வாய்ப்பட்டு மரணம் நிச்சயிக்கப்பட்ட போதிலும் புரட்சியின் மீது அவர் கொண்ட பற்றுறுதி, கடின உழைப்பு, பல்வேறு இடர்பாடுகளுக்கு நடுவிலும் புரட்சிகர அரசியலைப் பிரச்சாரம் செய்வதில் அவர் கொண்ட சளையாத ஆர்வம் ஆகிய உயரிய கம்யூனிசப் பண்புகளை உறுதியாகப் பற்றி நின்று, அவரது இலட்சியக் கனவை நிறைவேற்றப் புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவோம்!

— புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, கோவை.

www.padippakam.com

# அடக்குமுறைக்கு எதிராகத் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியை ஒட்டியுள்ள ஜம்போ பேக் என்ற தனியார் ஆலையில் பணியாற்றும் தற்காலிகத் தொழிலாளர்கள், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் கிளையை இவ்வாலையில் தொடங்கியதிலிருந்து நிர்வாகத்தின் பல்வேறு அடக்குமுறைக்கும் பணிநீக்கத்துக்கும் ஆளாகி வருகின்றனர். தொழிலாளர் துறையிடமும் தொழிற்சாலை ஆய்வாளரிடமும் நிர்வாகத்தின் சட்ட விரோதச் செயல்களை தொழிற்சங்கத்தின் மூலம் புகாராகக் கொடுத்து விளக்கியும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பல ஆலைகளிலும் இதேபோல முதலாளிகளின் கொட்டம் தலைவிரித்தாடுகிறது.



குமுறிக் கொண்டிருக்கும் இவ்வட்டாரத் தொழிலாளர்களை அமைப்பாக்கி அணிதிரட்டிய பு.ஜ.தொ.மு. கடந்த 27.6.08 அன்று திருவொற்றியூர் துணைத் தலைமை தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் முன்பாக திடீர் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. செங்கொடி ஏந்தி செஞ்சட்டையுடன் 200 பேருக்கு மேல் அணிதிரண்டு விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்த திடீர் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அரண்டு போன போலீசும் அதிகார வர்க்கமும் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகக் கூறின.

முதலாளிகளின் ஏவலாட்களாகச் செயல்படும் அரசு அதிகாரிகளின் யோக்கியதையை இப்பகுதியெங்கும் திரைகிழித்துக் காட்டி, உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்ற இத்திடீர் ஆர்ப்பாட்டம், தொழிலாளர்களின் போராட்ட உணர்வுக்குப் புதுரத்தம் பாய்ச்சியுள்ளது.

**— பு.ஜ.தொ.மு.,**
**திருவள்ளூர் மாவட்டம்.**

# பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படும் பாத்திரத் தொழிலாளர்கள்

மதுரையை அடுத்த யானைமலை-ஒத்தக்கடையில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வந்த எவர்சில்வர் பாத்திர உற்பத்தித் தொழில், தாராளமய-உலகமயமாக்கலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. 5000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஈடுபட்டு வந்த இத்தொழிலில், தற்போது ஏறத்தாழ 2000 பேர் மட்டுமே வேலை செய்கின்றனர். அவர்களும் உரிய கூலி கிடைக்காமல் பட்டினியில் பரிதவிக்கின்றனர்.

கூடுதல் கூலி கோரி தொழிலாளர்கள் போராடியதாலும், ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் தொழிலாளர்களின் கூலியைக் குறைத்து மோசடி செய்த முதலாளிகளை அம்பலப்படுத்தி தொழிலாளர்கள் சுவரொட்டி வெளியிட்டதாலும் ஆத்திரமடைந்த முதலாளிகள் கடந்த இரு மாதங்களாக உற்பத்தியையே நிறுத்தி, தொழிலாளர்களைப் பட்டினி போட்டு வருகின்றனர். சங்க நிர்வாகிகளை நீக்க வேண்டும்; சுவரொட்டி வெளியிட்டதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என்று முதலாளிகள் எதிர் கோரிக்கை வைத்துப் பட்டறைகளைத் திறக்க மறுத்தனர். இக்கொடுமைக்கெதிராக பலமுறை மனு கொடுத்தும் அதிகார வர்க்கம் அசைந்து கொடுக்காததால், 18.6.08 முதல் பட்டினியால் தவிக்கும் தொழிலாளர் குடும்பங்களுக்காக கஞ்சித் தொட்டி திறக்கப் போவதாக சுவரொட்டி வெளியிட்டு, தொழிலாளர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். ஆனாலும் முதலாளிகளோ அதிகாரிகளோ சலனமின்றிக் கிடந்ததால், முதலாளிகளின் கொட்டத்தை எதிர்த்து 28.6.08 அன்று மதுரை-மேலூர் நெடுஞ்சாலையில் மறியல் போராட்டம் நடத்தினர். போலீசாரோ பேச்சு வார்த்தைக்கு அழைத்து ஏமாற்றி, முன்னணியாளர்களைக் கைது செய்தனர். இதை எதிர்த்து தொழிலாளர்கள் குடும்பத்தோடு போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு, கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர். இத்தனைக்கும் பிறகும் அதிகார வர்க்கமும் போலீசும் நீதித்துறையும் கொட்டமடிக்கும் முதலாளிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.



தாராளமயமாக்கலாலும் முதலாளிகளின் திமிராலும் இன்று ஈராயிரம் தொழிலாளர் குடும்பங்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளன. கண்ணெதிரே நடக்கும் இக்கொடுமைக்கு எதிராக நின்று, தமது வாழ்வுரிமைக்காகப் போராடிவரும் தொழிலாளர்களுடன் அணிதிரண்டு போராடுவதே உழைக்கும் மக்களின் முன்னுள்ள உடனடிக் கடமை; நமது கடமை.

**தகவல்: மனித உரிமைப் பாதுகாப்பு மையம்,**
**மதுரைக் கிளை.**

www.padippakam.com

# இந்துமத வெறியர்களின் சதித்தனம் மண்ணைக் கவ்வியது

**காசுமீர் சிறீ அமர்நாத் ஆலய நிர்வாகத்திற்கு நிலம் ஒதுக்கப்பட்டதை பக்தி நடவடிக்கையாகப் பார்க்க முடியாது.**



...லைநகர் சிறீநகரில் போலீசாருடன் மோதும்...

**கா**சுமீர் மாநிலத் தலைநகர் சிறீநகருக்குத் தென்கிழக்கே 111 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அமர்நாத் குகையில் உருவாகும் பனிலிங்கத்தைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக, 39.88 ஹெக்டேர் வனப்பகுதி நிலத்தை, சிறீஅமர்நாத் ஆலய வாரியத்திற்குச் சில நிபந்தனைகளுடன் கடந்த மே மாத இறுதியில் கை மாற்றிக் கொடுத்தது, காங்கிரசுக் கூட்டணி அரசு.

பல்டால்-தோமெயில் வனப்பகுதியில் உள்ள இந்த நிலத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பக்தர்கள் யாரும் முன்வைக்கவில்லை. அம்மாநிலத்தின் முன்னாள் ஆளுநரும், சிறீ அமர்நாத் ஆலய வாரியத்தின் முன்னாள் தலைவருமான எஸ்.கே.சின்ஹாதான் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். ஆளுநருக்கு, பக்தர்கள் மீது அப்படியென்ன கரிசனம் என்று கேட்கிறீர்களா? முன்னாள் உயர் இராணுவ அதிகாரியான எஸ்.கே.சின்ஹாவின் மனமும், மூளையும் ஆர்.எஸ்.எஸ். கருத்துக்களால் நிறைந்தது என்பதுதான் இதற்கான காரணம்.

மாநில ஆளுநரே முன்வைத்தபோதும், இந்தக் கோரிக்கை மாநில அரசின் ஒப்புதலைப் பெற முடியாமல், கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகத் தூசிப் படிந்து கிடந்தது. எஸ்.கே.சின்ஹாவின் பதவிக் காலம் முடியும் தருணத்தில்தான், அவரின் ஆசை நிறைவேறியது. இந்த ஒப்புதலை அளித்ததன் மூலம் அக்.2008-இல் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலில், ஜம்முவில் உள்ள இந்துக்களின் வாக்குகளை அள்ளிவிட முடியும் எனக் கணக்குப் போட்டது, காங்கிரசுக் கட்சி. ஆளுநர் எஸ்.கே.சின்ஹா மனநிறைவோடு, ஜூன் மாத இறுதியில் காசுமீரை விட்டு வெளியேறிப் போக, காசுமீர் பள்ளத்தாக்கில் இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரும் போராட்டங்கள் வெடித்தன. இப்போராட்டங்கள், 1990-களில் காசுமீரின் சுயநிர்ணய உரிமைக்காக நடந்த போராட்டங்களுக்கு இணையாக இருந்ததாகத் 'தேசிய'ப் பத்திரிகைகள் அரண்டு போய் எழுதியிருந்தன.

இந்திய அரசுக்கு எதிரான காசுமீர் மக்களின் உணர்வை, 2002-இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் ஓட்டுக்களாக அறுவடை செய்து கொண்ட மக்கள் ஜனநாயகக் கட்சி, அத்தேர்தல் முடிந்தவுடன் காங்கிரசோடு சந்தர்ப்பவாதக் கூட்டணி வைத்துக் கொண்டு, ஆட்சியில் அமர்ந்தது. அக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்தான், சீறிஅமர்நாத் ஆலய நிர்வாகத்திற்கு 39.88 ஹெக்டேர் நிலத்தை ஒதுக்கிக் கொடுக்க ஒப்புதலும் கொடுத்

www.padippakam.com

தார். ஆனால், இந்த ஒதுக்கீட்டுக்கு எதிராக காசுமீர் முசுலீம்களின் போராட்டம் வீச்சாக எழுந்தவுடன் தேர்தல் பயத்தால் இக்கட்சி பிளேட்டைத் திருப்பிப் போட்டுத் தட்டியது.

மக்கள் ஜனநாயகக் கட்சி, இந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரியதோடு நில்லாமல், கூட்டணி ஆட்சிக்குக் கொடுத்து வந்த ஆதரவையும் விலக்கிக் கொண்டது. காங்கிரசுக் கட்சி சட்டசபையில் பெரும்பான்மையை இழந்துவிட்ட நிலையில், நில ஒதுக்கீடு உத்தரவை ரத்து செய்ததோடு, ஆட்சியையும் பறி கொடுத்தது.


நில ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டதை, இந்துக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகமாகப் பிரச்சாரம் செய்தது பா.ஜ.க. "ஒரு 40 ஹெக்டேர் நிலத்தைப் பெறும் உரிமைகூட இந்துக்களுக்கு இல்லையா?" என்ற கேள்வியைப் போட்டு, 'இந்துக்களை' உருவேற்ற முயன்றது, அக்கட்சி. நில ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டதைக் கண்டித்து, ஜூலை 3 அன்று "பாரத் பந்தை" அறிவித்து, நிலப்பிரச்சினையைத் 'தேசிய'ப் பிரச்சினையாக்க முயன்றது.

அமர்நாத் பனிலிங்கத்தைத் தரிசிக்கச் செல்லும் பக்தர்களுக்கு ஒரு 40 ஹெக்டேர் நிலம் ஒதுக்கப்பட்டதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அளவிற்கு, காசுமீர் முசுலீம்கள் மத அடிப்படைவாதத்தில் மூழ்கிப் போய்விட்டதாகத் தேசியப் பத்திரிகைகள் இப்போராட்டத்தைச் சாடி எழுதியிருந்தன. சமகால காசுமீரின் வரலாற்றை அறிந்திராத சாதாரண வாசகன்கூட, இந்தக் கேள்வியை எழுப்பக் கூடும். பா.ஜ.க.வும், தேசியப் பத்திரிகைகளும் எழுப்பிய இக்கேள்வியில் நியாயம் இருப்பதாகக் கருதக்கூடும். ஆனால், அமர்நாத் பனிலிங்க வரலாறு வேறானது.

•••

அமர்நாத் யாத்திரை என்பது ஆண்டாண்டு காலமாக நடந்து வருவது அல்ல; மேல்சாதி இந்துக்கள் தங்களின் வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில் காசி-இராமேசுவரத்திற்குச் சென்று வருவது போன்ற 'புனிதமானதும்' அல்ல. காணாமல் போன தனது கால்நடைகளைத் தேடிப் பனிக் காடுகளில் அலைந்து திரிந்த ஒரு முசுலீம்தான், அமர்நாத் குகையில் இயற்கையாக உருவாகும் பனிக்குன்றை முதலில் பார்த்தார். அந்த முசுலீம் வந்து சொல்லித்தான் இந்துக்கள் இந்த அதிசயத்தைத் தெரிந்து கொண்டனர். அந்தப் பனிகுன்றுக்குப் பனிலிங்கம் எனப் பெயரிட்டு, அதற்கு ஏதோ மகிமை இருப்பதாகக் கருதி, ஆண்டுதோறும் யாத்திரை போய் தரிசித்து வரத் தொடங்கினர்.

**காசுமீரின் முன்னாள் ஆளுநரும் இந்து மதவெறியனுமான எஸ்.கே. சின்ஹா.**
(நன்றி: இந்தியா-டுடே).



இந்தப் பனிலிங்கம் மற்றும் அதைத் தரிசிக்கச் செல்லும் பக்தர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுக்கும் பொறுப்பு, பேடாகுந்த் பகுதியில் வசிக்கும் முசுலீம் குடும்பங்களிடம் தான் இருந்து வந்தது. 1990-களில் காசுமீரில் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் வெடித்த பிறகு, அதற்கு எதிரான ஆயுதமாக, இந்து மதவெறியைத் தூண்டிவிடும் வாய்ப்பாக, இந்த யாத்திரைக்கு அரசியல் சாயம் பூசப்பட்டதோடு, அரசே ஏற்பாடு செய்து நடத்தும் யாத்திரையாக்கப்பட்டது. ஆர்.எஸ்.எஸ். கும்பலோ, ஹஜ் யாத்திரையைப் போன்று, அமர்நாத் யாத்திரையை புனிதப்படுத்தும் தில்லுமுல்லைச் செய்தது; செய்தும் வருகிறது. பார்ப்பனர்கள் கொண்டாடி வந்த விநாயகர் சதுர்த்தி பண்டிகை, முசுலீம்களுக்கு எதிரான வெறுப்பைத் தூண்டிவிடும் விநாயகர் ஊர்வலமாக மாற்றப்பட்டதைப் போல, அமர்நாத் யாத்திரை, காசுமீர் முசுலீம்களுக்கு எதிரானதாக உருமாற்றப்பட்டது. பக்தி, இந்து பாசிசமாகியது.

**காஷ்மீரில் நடந்த போராட்டத்தில் ஆறு முசுலீம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். எனினும், அமர்நாத் யாத்திரை அமைதியாகவே நடந்து முடிந்தது. அப்போராட்டம் முசுலீம் மதவெறியோடு நடைபெறவில்லை என்பதற்கு இதுவே நிரூபணம்.**

கரசேவைக்குத் தொண்டர்களைத் திரட்டி அனுப்புவதைப் போல, ஒவ்வொரு ஆண்டும் அமர்நாத் யாத்திரைக்கும் 'இந்துக்களை'த் திரட்டி அனுப்புவதை ஆர்.எஸ்.எஸ். வெளிப்படையாகவே செய்து வருகிறது. இதனால் பனிலிங்கத்தை வணங்க வரும் 'பக்தர்களின்' எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகிக் கொண்டே செல்லத் தொடங்கியது. இந்த எண்ணிக்கை அதிகரிப்பைக் காரணமாகக் காட்டி, இரண்டு வாரமே நடந்து வந்த அமர்நாத் யாத்திரையின் காலஅளவு, ஒரு மாத காலமாக நீட்டிக்கப்பட்டது. யாத்திரையை நிர்வகிப்பது என்ற பெயரில் தனியாக வாரியம் அமைக்கப்பட்டது. இந்த வாரியத்தின் தலைவராக ஜம்மு-காசுமீர் மாநில ஆளுநர் இருப்பார் என்றும்; அதே சமயம் ஆளுநர் இந்துவாக இருந்தால் மட்டுமே வாரியத்தின் தலைவராக முடியும் என்றும் விதிகள் உருவாக்கப்பட்டன. முசுலீம்களின் மேற்பார்வையிலும்; உதவியோடும் நடந்து வந்த அமர்நாத் யாத்திரையை அவர்களிடமிருந்து பறித்து, இந்துமயமாக்கும் சதிகள் 1990-க்குப் பிறகு ஒவ்வொன்றாக அரங்கேற்றப்பட்டன.

எஸ்.கே.சின்ஹா, ஜம்மு-காசுமீர் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்ட பிறகு, இந்த இந்துமயமாக்கம் மேலும் தீவிரமடைந்தது. "அமர்நாத் யாத்திரையின் கால அளவை ஒரு மாதத்தில் இருந்து இரண்டு மாதமாக அதிகரிக்க வேண்டும்; பகல்காமிலிருந்து அமர்நாத் செல்லும் பாதையிலும்; பால்தாலில் இருந்து அமர்நாத் செல்லும் பாதையிலும் உள்ள வனப்

www.padippakam.com



அமர்நாத் பனிலிங்கத்தைத் தரிசிக்கச் செல்லும் பக்தர்கள்:
புனித யாத்திரையா? பொழுதுபோக்குச் சுற்றுலாவா?

பகுதி நிலங்களை அமர்நாத் வாரியத்திற்கு ஒதுக்க வேண்டும்; அமர்நாத் வாரியம் அரசின் தலையீடின்றி, சுதந்திரமாக இயங்க வேண்டும்'' என மாநில அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுத்து வந்தார். அவர், அமர்நாத் வாரியத்திற்கு திடீரென 39.88 ஹெக்டேர் நிலம் ஒதுக்கப்பட்டது தொடர்பாக வாரியத்தின் தலைவர் என்ற முறையில் ஆளுநர் பதில் அளிக்க வேண்டும் எனச் சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிய பொழுது, ''ஆளுநர் சட்டமன்றத்துக்கு கட்டுப்படத் தேவையில்லை'' எனத் திமிராகப் பதில் அளித்தார், எஸ்.கே.சின்ஹா.

ஜம்மு-காசுமீர் மாநிலத்தை இந்திய ஒன்றியத்துடன் கட்டாயமாக இணைத்துக் கொண்டபொழுது, ''காசுமீரைச் சேரா தவர்கள் அம்மாநிலத்தில் ஒரு துண்டு நிலம் வாங்குதற்குக் கூட அனுமதி கிடையாது'' என்ற உரிமை அளிக்கப்பட்டது. இந்திய இராணுவம் பாசறைகளை அமைப்பது என்ற பெயரில், ஏராளமான நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, இந்த உரிமையை மீறி வருகிறது. இப்படிப்பட்ட நிலையில், காசுமீர் பள்ளத்தாக்கு மக்களின் பங்கின்றி உருவாக்கப்பட்டுள்ள அமர்நாத் வாரியத்திற்கு நிலம் ஒதுக்கப்பட்டதை, காசுமீரி முசுலீம்கள் இன உரிமை மீறலாகவும், ஆக்கிரமிப்பாகவும் பார்த்தார்கள். பாக். தீவிரவாதிகளை ஒழிப்பது என்ற பெயரில் காசுமீரி முசுலீம்களை வேட்டையாடிவரும் இந்திய இராணுவத்தின் அக்கிரமங்களுக்கு எதிராக காசுமீரி முசுலீம்களிடம் கனன்று கொண்டிருந்த கோபம், இந்த நில மாற்ற உத்தரவால் பற்றி எரியத் தொடங்கியது.

அரசு வெளியிட்ட நில மாற்றம் தொடர்பான உத்தரவில், ''அமர்நாத் வாரியம் அந்நிலத்தில் யாத்திரை வரும் பக்தர்கள் தங்கிச் செல்ல வசதியாகத் தற்காலிகக் குடியிருப்புகளை அமைத்துக் கொள்ளலாம்'' என்ற சலுகையை வழங்கியிருந்தது. காசுமீரி முசுலீம்கள் அச்சலுகையை, ஜம்மு-காசுமீரில் இந்துக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் சதித்தனம் நிறைந்ததாகவே பார்த்தார்கள். ''இந்துக்கள் இரண்டு மாதம் மட்டுமே தங்கிச் செல்லுவதால், மக்கள் தொகையில் எப்படி மாற்றம் வரும்?'' என்ற கேள்வியை எழுப்பிய பா.ஜ.க.வும், தேசியப் பத்திரிகைகளும், காசுமீரி முசுலீம்களின் சந்தேகம் ஊதிப் பெருக்கப்படுவதாகக் குற்றஞ்சுமத்தினர்.

இந்தியாவில் இந்துக்களின் எண்ணிக்கை குறைந்து சிறுபான்மையினர் ஆகிவிடும் அபாயம் இருப்பதாகப் புளுகிவரும் பா.ஜ.க; காசுமீர் முசுலீம்களின் சந்தேகத்தைக் குற்றஞ் சுமத்துவது வேடிக்கையானது. இதுவொருபுறமிருக்க, காசுமீர் பிரச்சினையைத் தீர்க்க, முசுலீம்கள் நிறைந்த காசுமீர் பள்ளத்தாக்கையும்; இந்துக்கள் நிறைந்த ஜம்முவையும் மற்றும் லடாக் பகுதியையும் தனித்தனியாகப் பிரித்து, காசுமீரைக் கூறு போட்டுவிடலாம் என்ற திட்டம் பா.ஜ.க. ஆட்சியில் இருந்த பொழுது பரிசீலிக்கப்பட்டது. ஆர்.எஸ்.எஸ்-ம், அமெரிக்காவும் இணைந்து உருவாக்கிய இத்திட்டத்தின் அடிப்படையில் பார்த்தால், காசுமீர் முசுலீம்களின் சந்தேகத்தைத் தேவையற்ற அச்சம் என ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

அமர்நாத் வாரியத்திற்கு நிலம் ஒதுக்கப்பட்டதை ரத்து செய்யக்கோரி காசுமீரி முசுலீம்கள் போராடிக் கொண்டிருந்த பொழுதுதான், இந்த ஆண்டிற்கான அமர்நாத் யாத்திரையும் தொடங்கியது. இப்போராட்டத்தை ஒடுக்க போலீசும், துணை இராணுவப் படைகளும் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஆறு காசுமீரி முசுலீம்கள் கொல்லப்பட்டனர். எனினும், இப்போராட்டத்தால் அமர்நாத் யாத்திரைக்கோ, அதில் கலந்து கொண்ட 'இந்துக்களுக்கோ', முசுலீம்களாலோ, முசுலீம் அமைப்புகளாலோ சிறு இடையூறும் ஏற்படவில்லை. வழக்கம்போலவே, மலைமேல் ஏற முடியாத பக்தர்களைப் பல்லக்கில் தூக்கிச் செல்வது தொடங்கி, 'இந்து' பக்தர்களுக்கு உணவு, தங்குமிடம் அளிப்பது உள்ளிட்டு எல்லாவிதமான உதவிகளையும் காசுமீரி முசுலீம்கள் செய்துகொடுத்தனர். காசுமீரி முசுலீம்கள் நடத்திய போராட்டம் மதவெறியின் அடிப்படையில் நடைபெறவில்லை என்பதை அமைதியாக நடந்த அமர்நாத் யாத்திரையே நிரூபித்து விட்டது.

ஆனால், காசுமீர் மக்களின் போராட்டத்திற்கு எதிராக ''பாரத் பந்த்'' நடத்திய பா.ஜ.க. மகாராஷ்டிரா மாநிலத்தில் ஜம்மு-காசுமீர் கலைக்கூடத்தை அடித்து நொறுக்கியது; மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள இந்தூர் நகரில், ஆர்.எஸ்.எஸ். குண்டர்களால் முசுலீம்களின் குடியிருப்புகளும், வர்த்தக நிறுவனங்களும் அடித்து நொறுக்கப்பட்டன. இந்தூர் முசுலீம்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள முயன்றபொழுது, நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் இறந்து போனார்கள்.

சிறீ அமர்நாத் ஆலய வாரியத்திற்கு அளிக்கப்பட்ட நிலம் ரத்து செய்யப்பட்டதை, காசுமீரி முசுலீம்கள் இந்துக்களின் மீதான வெற்றியாகப் பார்க்கவில்லை. சுயநிர்ணய உரிமையை மறுத்து வரும் இந்திய அரசின் மீதான வெற்றியாகவே கருதுகிறார்கள். அமர்நாத் யாத்திரை பக்தியின் அடிப்படையில் நடைபெறுவதாகக் கருதும் 'இந்துக்கள்', யாத்திரையில் ஆர்.எஸ்.எஸ். தலையீடு செய்வதை எதிர்க்க வேண்டும்; பேடாகுந்த் முசுலீம்களின் உரிமையை மறுத்து அமைக்கப்பட்டுள்ள வாரியத்தைக் கலைக்கக் கோர வேண்டும். இது அவர்களின் 'கடமை' மட்டுமல்ல; இரு நூற்றாண்டுகளாக அமர்நாத் யாத்திரை எவ்விதத் தடங்கலும் இன்றி நடைபெறுவதற்கு பொறுப்போடு உதவி வரும் காசுமீரி முசுலீம்களுக்குச் செலுத்தும் நன்றிக் கடனும் ஆகும்.

● செல்வம்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

# தமிழக மீனவர்களின் கண்ணீருக்குப் பதில் என்ன?

இலங்கை கடற்படை ஜூலை 11 நள்ளிரவில் இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில், வேதாரண்யம் அருகில் உள்ள ஆறுகாட்டுத்துறை கிராமத்தை சேர்ந்த வாசகன், நாராயணசாமி என்ற இரு இளம் மீனவர்கள் நடுக்கடலிலேயே இறந்து போனார்கள். முரளி என்ற இளம் மீனவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவத்திற்குப் பத்து நாட்கள் முன்னதாக ஜூலை 2-ஆம் தேதி அதிகாலையில் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த 1,000 க்கும் மேற்பட்ட இராமேசுவரம் பகுதி மீனவர்கள், இலங்கை கடற்படையால் சுற்றி வளைக்கப்பட்டு, இலங்கையிலுள்ள தலைமன்னாருக்கு இழுத்துச் செல்லப் பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, அவமானப்படுத்தப் பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர். ஜூன் 22-ஆம் தேதி கச்சத்தீவு அருகே இலங்கை கப்பல் படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இராமேசுவரம் பகுதியைச் சேர்ந்த அன்ட்ரன் படுகாயமடைந்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், தமிழகத்தைச் சேர்ந்த 250 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் நடுக் கடலில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஈழத்தமிழர்களை மட்டுமல்ல, இந்தியத் தமிழர்களையும் சிங்கள இனவெறி அரசு பகைவர்களாகப் பாவித்து வருகிறது — இந்திய அரசின் சம்மதத்தோடு.

தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படும் பொழுதெல்லாம், அவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்துவிட்டதாக நொண்டிச் சாக்குச் சொல்லப்படும்; ஆனால், இந்திய எல்லைக்குள் நுழையும் சிங்கள மீனவர்கள் உயிரோடு திருப்பி அனுப்பப்படும் பொழுது, இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்து விடும் தமிழக மீனவர்கள் பிண மாகத் திரும்பி வருவது ஏன் என்ற கேள்வி எழுப்பப்படுவ தில்லை. தமிழக மீனவர்கள், புலிகளுக்குத் தேவையான பொருட்களைக் கடத்துவதாகக் கூறப்பட்டாலும், அக்குற்றச் சாட்டு ஒருமுறை கூட ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட வில்லை. இந்த முறை இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து, இலங்கை கடற்படை தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொன்று விட்டுத் திரும்பியிருக்கிறது; ஆனாலும், மைய அரசு, இலங்கை அரசைக் கண்டிக்கக்கூட மறுக்கிறது. அந்தளவிற்கு சிங்கள இனவெறியர்களோடு கள்ளக்கூட்டு கொண்டு திரிகிறது, இந்திய அரசு.

ஓட்டுக்கட்சிகள் கச்சத்தீவை மீட்குமாறு சவடால் அடிப் பது ஒருபுறமிருக்கட்டும்; மைய அரசு நெருக்கடியில் சிக்கி இருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழக மீனவர்களின் பிரச்சினையைத் தீர்த்தால்தான், அரசுக்கு ஆதரவாக வாக்க ளிப்போம் எனத் தமிழினக் காவலர் மு.க., வெறும் பேச்சுக்கா வது காங்கிரசை மிரட்டியிருக்கலாம். காடுவெட்டி குருவுக் காக மன்மோகனையும், சோனியாவையும் பா.ம.க., எம்.பிக் களைச் சந்திக்கச் சொன்ன இராமதாசுக்கு மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது அவ்வளவு முக்கியமாகத் தெரியவில்லை.

திராவிடக் கட்சிகளின் பிழைப்புவாதம் ஊரறிந்த உண்மை. ஆனால், இத்துணை படுகொலைகளுக்குப் பிற கும், தமிழகம் அமைதியாக இருப்பதுதான் அவமானகரமா னது. மீனவர்களின் உழைப்பு மட்டும் வேண்டும்; அவர்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என வேடிக்கை பார்ப் பதை நன்றிகெட்டத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்.

"சிங்களக் கடற்படை இனி வீட்டுக்கே வந்து சுட்டு விட்டுப் போனாலும் கேட்க நாதியில்லை". என இந்த இழிந்த நிலையைக் குறிப்பிட்டு காட்டுகிறார், ஆறுகாட்டுத் துறை கிராமத் தலைவர் மயில்வாகனம். தமிழகம் சொரணை யற்றுக் கிடந்தால், நாளை அதுகூட நடக்கலாம்! ●



இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட இளம் மீனவர்கள் நாராயணசாமி (இடது) மற்றும் வாசகன்.



ஜூன் மாதம் கச்சத்தீவு அருகே நடந்த துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த இராமேசுவரம் பகுதி மீனவர் அன்ட்ரன்.

மீனவப் பிரதிநிதிகளோடு மு.கருணாநிதி நடத்தும் பேச்சுவார்த்தை என்ற சடங்கு.




படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

## அணுசக்தி ஒப்பந்தம்:

# அம்பலமானது நாடாளுமன்ற போலி ஜனநாயகம்!

**நம்பிக்கை வாக்கெடுப்பையொட்டி மீண்டும் அழுகி நாறிய நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தை வீழ்த்திவிட்டு, மக்களுக்கு அதிகாரமளிக்கும் புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரளுமாறு மக்களை அறைகூவி தமிழகமெங்கும் 22.7.08 அன்று புரட்சிகர அமைப்புகள் நடத்திய**

# தொடர்முழக்க ஆர்ப்பாட்டம்



பென்னாகரத்தில்...



சென்னையில்...



ஒசூரில்...


தஞ்சையில்...


திருச்சியில்...



உடுமலையில்...

படிப்பகம்